Registered as a Newspaper in Srilanka

தமிழின் முதல்தர
வார இதழ்

# தீபம்

www.deepam.lk
விலை 30 ரூபா • தீபம் 76 • 22.01.2017




## பஷின் போராட்டங்கள்



இந்தவார நகரம்
## பளை



## காதலன்
உண்மையாக இல்லையா?
- உள்ளே பாருங்கள்!



# பிரபாகரன் இருக்கிறார்!


மோட்டார் வாகன காப்புறுதித்துறையில்
புதியதொரு புரட்சி
இலவச காப்புறுதி உங்களுக்கும்
உங்கள் அன்புக்குரியவருக்கும்
இலவசம்
ரூ.5 மில்லியன்
தனிநபர் விபத்துக் காப்புறுதி
+
ரூ.2 மில்லியன்
வீட்டுக்காப்புறுதி
உங்களுக்கு
JANASHAKTHI FULL OPTION
0112 303 300 ற்க்கு அழைத்து
இன்றே உங்கள் வாகனத்தை
Full Option ஆக்கிக்கொள்ளுங்கள்!
* நிபந்தனைகளுக்குட்பட்டது
* இச்சலுகையானது 2017 ஜனவரி 1ஆம் திகதி முதல் ஏப்ரல் 30ஆம் திகதி வரை
பூரண காப்புறுதியொன்றை புதிதாக கொள்வனவு செய்யும் அல்லது புதுப்பிக்கும் சகல
தனியார் கார், காப்பீட்டாளர்களுக்கும் 1 வருடத்துக்கு செல்லுபடியாகும்.
www.janashakthi.com
JANASHAKTHI FULL OPTION
JANASHAKTHI INSURANCE
www.dstudiocmb.com




# கோத்தாவின் காருக்குள் நடந்தது என்ன?

அரசாங்கத்தை வீழ்த்தியே தீருவேன் என மகிந்த ராஜபக்ச எடுத்த சபதம்தான் தற்போதைய அரசியல் சூழலில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அவர் ஏதோ ஒன்றை மனதில் வைத்துத்தான் அப்படி பகிரங்க சவால் விட்டுள்ளார், என்னென்ன சதி நடவடிக்கைகள் செய்வாரோ என மைத்திரி தரப்பு தலையை பிய்த்துக் கொண்டிருக்கிறது.

அரசதரப்பிலுள்ள எம்.பிக்களை வளைத்து போட்டு, பாராளுமன்ற பெரும்பான்மையை கைப்பற்றுவதுதான் உள்ள வழிகளில் மகிந்தவிற்கு சாத்தியமானது. அதற்கான முய்ற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாக தெரிகிறது.

நல்லாட்சி அமைச்சரொருவர் பதவி விலகி, கூட்டு எதிரணியுடன் நெருங்கிச் செயற்பட தொடங்கியது மகிந்தவிற்கு புதிய நம்பிக்கையை கொடுத்துள்ளது. அடுத்த கட்டமாக பத்து வரையான சுதந்திரக்கட்சி எம்.பிக்கள் மகிந்த பக்கம் தாவுவார்கள் என்ற தகவல் பரவ ஆரம்பித்துள்ளது. மக்கள் மத்தியில் அரசிற்கெதிரான அபிப்பிராயத்தை ஏற்படுத்தி, மைத்திரி தரப்பிலுள்ளவர்களிற்கு நெருக்கடி கொடுப்பதே மகிந்தவின் உபாயம். இந்தநிலையில் புதிய தகவலொன்று வெளியாகியுள்ளது. முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்சவை இரகசியமாக சந்தித்துள்ளார் அமைச்சரொருவர். சுமார் ஒரு மணித்தியாலம் இருவரும் காரில் பிரயாணம் செய்தபடி பேச்சில் ஈடுபட்டுள்ளனர். இந்த இரகசிய கலந்துரையாடல் பற்றிய அரசல்புரசலான தகவல் கசிந்துள்ளது. எனினும், பேசப்பட்ட விடயம் தொடர்பான உறுதியான தகவல்கள் கிடைக்கவில்லை.

அரசாங்கத்தின் முக்கியஸ்தர் ஒருவரே அமைச்சரின் ஊடாக தகவலொன்றை கோத்தபாயவிற்கு அனுப்பியுள்ளதாகவும் கருதப்படுகிறது. இது மகிந்தவின் நடவடிக்கையின் ஒரு அங்கமா அல்லது அதற்கு எதிரானதா என்பது இன்னும் உறுதியாக தெரியவில்லை.



# தாக்குதல் செய்தி பொய்!

தமிழ்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன் சென்ற இடமொன்றில் ஏற்பட்ட சர்ச்சை, அவருக்கெதிரான சமூக வலைத்தள பிரசாரமாக உருமாறி வருகிறது. எனினும், இந்த பிரசாரத்தை அவர் முற்றிலும் மறுத்துள்ளார்.

ஏறாவூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தாமரைக்கேணி அல் ஆஷா கிராமத்தில் முஸ்லீம்களின் தொழுகைக்கு ஏற்பாடு செய்யப்பட்ட கொட்டகைக்கு சிலர் தீ வைத்ததாகவும், அந்த குழுவை நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன் தலைமை தாங்கி வந்ததாகவும், சமூக வலைத்தளங்களில் பிரசாரம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இதன் உண்மைத்தன்மையை அறிவதற்காக, நாடாளுமன்ற உறுப்பினரை தொடர்பு கொண்டபோது, அவர் சம்பவத்தை விபரித்தார்.

“தனிநபரொருவரால் நீர்நிலையொன்று வழிமறிக்கப்பட்டு பொழுதுபோக்கிடம் அமைக்கப்பட்டுள்ளது, அதனால் எமதுக்கான நீர் வரத்து பாதிக்கப்பட்டுள்ளதாக மக்கள் பல தடவை முறையிட்டனர். அந்த இடத்தை பார்க்க சென்றேன். அப்போது திரண்ட மக்கள் வேலிக்கட்டைகளை பிடுங்க ஆரம்பித்து விட்டனர். என்னால் அதை தடுத்து நிறுத்த முடியவில்லை.

தமிழ் முஸ்லீம் மக்கள் சேர்ந்து வாழும் பகுதி இது. இந்த சம்பவத்தால் இனங்களிற்கிடையில் பதற்றம் ஏற்பட்டு விடக்கூடாதென்பதற்காக, விடயத்தை உடனே பொலிசாருக்கு அறிவித்தேன். பாதிக்கப்பட்ட தமிழ் மக்களை பொலிசில் முறையிடுமாறு சொல்லிவிட்டு நான் அங்கிருந்து சென்றுவிட்டேன். எனது தலைமையில் சென்று தாக்குதலில் ஈடுபட்டதாக கூறப்படுவது அவதூறு பிரசாரம்“ என்றார்.

அங்கு ஏற்பட்ட களேபரத்தில் இரும்பு கம்பியால் தாக்கப்பட்டதாக கூறி, இளைஞன் ஒருவன் ஏறாவூர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# சிறையில் ‘கம்பனி’ கொடுப்பாரா முன்னாள் சகா?

அரசசொத்தைதுஷ்பிரயோகம்செய்தவிவகாரத்தில் தேசிய சுதந்திர முன்னணியில் தலைவர் விமல் வீரவன்ச விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இந்த நிலையில் புதிய சர்ச்சையொன்றை மகிந்தவின் கூட்டு எதிரணி கிளப்பி வருகிறது.

மகிந்தவின் ஆட்சிக்காலத்தில் வீடமைப்பு மற்றும் பொதுவசதிகள் அமைச்சராக செயற்பட்டவர் வீரவன்ச. பிரதியமைச்சராக செயற்பட்டவர் லசந்த அழகியவன்ன. பொறியியல் கூட்டுத்தாபனத்தின் தலைவராக செயற்பட்டவர் அஷூ மாரசிங்க. ஐக்கிய தேசியக்கட்சியின் தேசியப்பட்டியல் மூலம் பாராளுமன்றத்திற்கு சென்றவர்.

அரச சொத்தை துஷ்பிரயோகம் செய்த விவகாரத்தில் விமல் வீரவன்சவை மட்டும் கைது செய்வது அரசியல் நோக்கமுடையது, பிரதியமைச்சரையும் கைது செய்திருக்க வேண்டாமா என கூட்டு எதிரணி பிரச்சாரம் செய்கிறது. அண்மையில் பொதுக்கூட்டமொன்றில் நாமல் ராஜபக்ச பகிரங்கமாகவே இதனை தெரிவித்தார்.

லசந்த அழகியவன்ன தன்னை மைத்திரி ஆதரவாளராக அடையாளப்படுத்தி அமைச்சு பதவியையும் பெற்றுவிட்டார். மைத்திரி அணியினருக்கு நெருக்கடி கொடுப்பதற்காகவே இந்த புதிய உபாயத்தை மகிந்த தரப்பு கைக்கொள்வதாக தெரிகிறது.

விமலை மட்டுமல்ல ஏனைய இருவரையும் சேர்த்தே கைது செய்யுங்கள் என்ற மகிந்த அணியின் பிரசாரம் சமூகவலைத்தளங்களில் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இந்த பிரசாரம் மக்களிடம் ஓரளவு எடுபட்டு வருவதை அரசாங்கம் அவதானித்துள்ளது. மக்களின் நன்மதிப்பை பேணுவதானால், இந்த இருவரில் ஒருவரையாவது கைது செய்ய வேண்டிய நெருக்கடி அரசுக்கு ஏற்பட்டுள்ளது. குறிப்பாக மாரசிங்கவின் பெயரும் துஷ்பிரயோகத்தில் நெருக்கமாக அடிபடுகிறது. இதனால் அவர் குறிவைக்கப்பட்டுள்ளார்.

இதற்குள் புதிய தகவலொன்று வெளியாகியுள்ளது. இந்த விவகாரம் விஸ்பரூபம் எடுத்ததையடுத்து, மாரசிங்கவை சந்திப்பொன்றிற்காக அழைத்துள்ளார் ஜனாதிபதி மைத்திரிபால. இந்த அழைப்பின் பின் மாரசிங்க வெளித் தொடர்புகளை துண்டித்துக் கொண்டுவிட்டதாக தெரிகிறது. அவரது தொலைபேசிகள் நிறுத்தப்பட்டு, தொடர்பு எல்லைக்கு வெளியில் சென்றுவிட்டதாக தெரிகிறது.

வீரவன்ச அடுத்த தவணையில் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படும்போது, மாரசிங்கவையும் கைது செய்து முற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது.



## மாணவர்களுக்கான சமூக வலைத்தள சேவையில் Assistia நிறுவனம்

உலகின் நடப்புக்களை ஒரே நொடிக்குள் உடனுக்குடன் அறியத்தரும் சாதனங்களான கைத்தொலைபேசி, இன்ரநெட் சமூக வளைத்தளங்களான பேஸ்புக் (முகநூல்) யூடியுப், டுவிட்டர் ஸ்கைப் இதுபோன்ற இன்னும் பல சமூக வளைத்தளங்கள் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டு செல்கின்றன. இந்த வகையில் வவுனியாவிலிருந்து அஸிஸ்ரியா (Assisitia) இணைய சேவைகளை வழங்கும் நிறுவனம் இலங்கை மாணவர்களுக்கான சமூக வலைத்தளத்தை உருவாக்கியுள்ளது.

இலங்கையில் முன்னணி இணையத்தள வடிவமைப்பு நறுவனங்களில் ஒன்றான Assistia கடந்த ஆண்டில் வணிக நிறுவனங்களுக்கான இணையத்தளங்கள் மற்றும் இணைய மென்பொருட்களையும் (Cloud Softwares) வடிவமைத்து வாடிக்கையாளர் மத்தியில் வரவேற்பை பெற்றுள்ளது. இணைய வளர்ச்சியை நோக்காக கொண்டு மிகக் குறைந்த விலையில் நிறைவான சேவையை வழங்குவதுடன் புதிய ஆண்டில் மாணவர்களுக்கென பிரத்தியேகமான சமூக வலைத்தளமொன்றை வடிவமைத்துள்ளது. இந்த சமூக வலைத்தளத்திற்கு Stucha (www.stucha.com) என பெயரிடப்பட்டு அதன் பரிட்சாத்த பதிப்பினை இணையத்திலும் அன்ரொயிட் கையடக்கத் சாதனங்களிலும் வெளியிட்டுள்ளனர்.

பல்கலைக்கழக மாணவர்கள், கல்லூரி மாணவர்கள், பாடசாலை மற்றும் தனியார் கல்வி நிலையங்களில் உள்ள 18 வயதிற்கு மேற்பட்டோர் இலகுவாக பயன்படுத்தக்கூடிய வசதிகளுடன் ஞவரஉாய இணையத்தளம் வடிவமைக்கப்பட்டுள்ளது. (Files) பதிவேற்றம் செய்யும் வசதியுடன் இந்த சமூக வலைத்தளம் அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் முகப்புத்தகத்தில் இல்லாத பல சேவைகளை Sticha தளம் தன்னகத்தே கொண்டுள்ளது என இந்த தளத்தை உருவாக்கிய மென்பொருள் வல்லுணர்கள் தெரிவித்துள்ளனர்.

மனிதன் தான் வாழும் காலத்தின் தேவைக்கேற்ப மனித நாகரீகத்தின் பொதுவான முன்னேற்றத்தோடு இணைந்து செல்லும் போதுதான் அவனும் சமூக மாற்றத்தின் பயன்பாட்டை இலகுவாக அடைந்து கொள்ள முடியும். என்பதற்கைமையை இவ்வாறான வலைத்தளங்களின் வளர்ச்சி அவசியமானதாகும். இணைய பாவனையைக் கொண்டு நன்மை செய்ய நாடும் நல்லுளங்கள் அதனை மிகச் சிறப்பாக பயனபடுத்தி வருகின்றமையும் அறிவுத்தேடலுள்ள மாணவர்கள் அவற்றால் அதிக பயன் அடைந்து வருகின்றமையையும் கருத்தில் கொண்டு இந்த வலைத்தளம் மாணவர்களின் பாவனைக்கு ஏற்ற வகையில் அமைக்கப்பட்டுள்ளது. பழைய மாணவர்கள் கல்வி தொடர்பாக மாணவர்களுக்கு ஆலோசனை மற்றும் வழிகாட்டலை வழங்கக்கூடியதாக இருப்பதுடன், மாணவர்கள் தமது துறையிலுள்ள பழைய மாணவர்களிடம் சந்தேகங்களை கேட்டு தெளிவு படுத்தவும் உறுதுணையாக அமையும்.

மேம்படுத்தப்பட்ட சமூக வலைத்தளங்களில் உள்ள குறைபாடுகளை நீக்கி பயனாளர்களுக்கு புதிய விதமான அனுபவத்தைத் தரும் வகையிலும் கல்வி நிறுவனங்களுக்கு தனிப்பட்ட மாணவர் பக்ககங்களை உருவாக்கும் வசதியும் வடிவமைக்கப்பட்டுள்ளது. மாணவர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், கல்வி சார் ஊழியர்கள் என அனைவரும் தமது கருத்துக்கள், புகைப்படங்கள், ஒலி அல்லது ஒளி வடிவலான கோப்புக்கள் மற்றும் ஏனைய வகை கோப்புக்களை பரிமாறிக்கொள்ள முடியும்.

மாணவர்கள் தமது தனிப்பட்ட பக்கத்தினை தாமே வடிவமைத்துக் கொள்ள முடிவதுடன் குறுகிய காலத்தில் இலங்கையின் மும்மொழிகளிலும் பயன்படுத்தவும் இணைய ஆசிரியர்கள் மூலம் கணணி சார் கற்கை நெறிகளை இலவசமாக வழங்கவும் நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

இணைய வடிவமைப்பு, கையடக்கத் தொலைபேசிக்கான அப்பிளிகேஷன் (Application), ஒலி, ஒளி மற்றும் வடிவமைப்பு சேவைகளை வழங்கி வந்த அஸிஸ்ரியா நிறுவனம் சுற்றுலாப் பணயிகளுக்கான வழிகாட்டல் சேவையை வழங்கும் கனேடிய நிறுவனமான Nexa உடன் இணைந்து சுற்றுலாப் பயணிகளுக்கான உணவகங்கள், தங்குமிட விடுதிகள் மற்றும் போக்குவரத்து சேவைகளை முற்பதிவு செய்யும் இணைய சேவையை ஆரம்பித்துள்ளது.

அஸிஸ்ரியா நிறுவனம் வாடிக்கையாளர்களுக்கு 24 மணிநேர உதவிச்சேவையை வழங்குவதுடன் மாதாந்த கட்டண அடிப்படையில் இணைத்தள பராமரிப்பு சேவையையும் வழங்கி வருகின்றது. அத்துடன் டிஜிட்டல் தொடிழிநுட்பத்தில் வீடியோ விளம்பரங்களை வணிக நிறுவனங்களுக்கு வடிவமைத்து இணைய சந்தைப்படுத்தல் துறையில் நிறுவனங்களின் வளர்ச்சிக்கு உதவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




# பஷன் போராட்டங்கள்!

நம்மாழ்வார்

ஏறுதழுவுதலிற்கு இந்திய உச்சநீதிமன்றம் விதித்த தடைக்கு எதிராக தமிழகத்தில் நடக்கும் போராட்டங்களின் தொடர்ச்சியாக யாழ்ப்பாணத்தின் நல்லூரிலும் ஆதரவு போராட்டமொன்று நடத்தப்பட்டுள்ளது. குறிப்பிடத்தகுந்த எண்ணிக்கையான இளைஞர்களும், யுவதிகளும் நல்லூர் ஆலய முன்னறலில் ஒன்று திரண்டு, கலைந்து சென்றுள்ளனர்.

இந்த ஒன்றுகூடலிற்கான அழைப்பு சமூக வலைத்தளங்களின் ஊடாக விடுக்கப்பட்டிருந்தது. சென்னையின் மெரீனா கடற்கரையில் நடந்த பெரும்திரள் போராட்டத்திற்கான அழைப்பும் சமூகவலைத்தளங்களின் வாயிலாகத்தான் விடப்பட்டது. மெரீனா போராட்டம் மட்டுமல்ல தமிழகத்தில் நடக்கும் ஏறுதழுவுதலிற்கு ஆதரவான போராட்டமே சமூக வலைத்தளங்களினூடாக ஒருங்கிணைக்கப்பட்ட, கடத்தப்பட்ட போராட்டங்கள்தான்.

சமூகவலைத்தளங்களின் கனதிக்கு அரபு வசந்தம் போன்ற வெளிநாட்டு உதாரணங்களை காண்பித்துக் கொண்டிருந்தவர்களிற்கு தமிழக உதாரணமும் கிட்டியுள்ளது. பாரம்பரிய அடையாளத்தை காப்பாற்ற, நவீன தொழில்நுட்ப யுக சாதகங்கள் பயன்படுத்தப்படுவது ஒரு வித்தியாசமான அனுபவம்தான்.

நல்லூர் ஒன்றுகூடலில் பெரும்பான்மையான இளவயதினர்தான் கலந்துகொண்டனர். கல்வி கற்பவர்கள். கல்வி நடவடிக்கைகள் முடிந்த பின்னர், விளையாட்டு மைதானத்திற்கோ, ஊர் சுற்றவோ செல்லாமல் நல்லூர் ஆலய முன்னறலிற்கு வந்துள்ளார்கள். ஏறுதழுவுதலிற்கு ஆதரவான கோசங்களை எழுப்பிவிட்டு சென்றுள்ளனர். இந்த ஒன்றுகூடலிற்கான அழைப்பை சமூகவலைத்தளங்கள்தான் பரப்பின.

நல்லூரில் பெரும் போராட்டமென ஒரு சாரர் கிளர்ச்சியடைந்து கொண்டிருக்க, அதனை ஒன்றுகூடலாக நான் சித்தரிப்பது சிலருக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தலாம். இந்த அசௌகரியத்திலிருந்து சில விடயங்களை பேசலாம். அதுதான் இந்த கட்டுரையின் நோக்கம்.

தமிழ் சமூகமென்பது போராட்டங்களினால் ஆனது. ஆயுதப் பேராட்டத்தில் தொடங்கியது, இன்று அதன் விளைவுகளின் மீது கவனத்தை குவித்து நடத்தப்படுகிறது. காணாமல்போனோர், நிலவிடுவிப்பு, அரசியல் தீர்வு என தமிழர்கள் தொடர்ந்து போராட விடயங்கள் உள்ளன. இவற்றை முன்னிறுத்தி போராட்டங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆனால் அவற்றிற்கெல்லாம் பெரும்தொகையானவர்கள் போவதில்லை. வயதான சிலர்தான் கலந்து கொள்வார்கள். இளவயதினரை மருந்திற்கும் காண முடிவதில்லை. ஆனால் நல்லூரில் இளையவர்கள் முண்டியடித்தார்கள். இது ஏன்? போராட்டங்களை இளைஞர்கள் தவறாக அர்த்தம் கொள்கிறார்களா?

தமது அன்றாட வாழ்வில் செல்வாக்கு செலுத்தும், தமது அயலவர்களின் வாழ்வியல் பிரச்சனைகளாக.காணாமல் போனோர், நில அபகரிப்பு போன்றவற்றில் கருத்தில்லாமல் இருக்கும் இளையவர்கள், இந்தியாவின் ஏறுதழுவுதல் சர்ச்சையில் போராட முனைந்ததன் பின்னணி என்ன?

நல்லாட்சி அரசு பதவியேற்ற சில வாரங்களில் யாழ்ப்பாண பல்கலைகழக மாணவர்கள் ஒரு பேரணி நடத்தினார்கள். பின்னர் வித்யா கொலையையடுத்த எழுச்சிகள், மாணவர் படுகொலை எழுச்சி என்பவற்றுடன் நிலத்தடி நீர் விவகாரத்தை முன்னிறுத்தி ஓரிரண்டு இளைஞர்கள் நல்லூரில் போராட்டம் நடத்தியது, தற்போதைய ஏறுதழுவுதல் தடைக்கெதிரான போராட்டங்கள் வரை இளைஞர்களின் பங்கேற்பு அதிகம்.

அதாவது, மகிந்த ராஜபக்சவின் காலத்தில் ரிஸ்க் எடுக்க விரும்பாமலிருந்த இளைஞர்கள், சாதகமான ஆடுகளத்தில் அடித்து விளையாடுகிறார்கள்.

போராட்டம் இரண்டு வகையானது. ஒன்று, பிரச்சனையின் மூலத்தை உணர்ந்து அதன் நெற்றிப்பொட்டில் அடிப்பது. மற்றையது, பிரச்சனையின் மூலத்தை விடுத்து, சம்பந்தமில்லாத விதத்தில் போராடுவது. இதனை ஆதிகார மையங்கள் ரசிக்கும். ஆனால், முன்னையதை சகித்து கொள்ளாது. அதனுடன் முரட்டு தனமாக அணுகும்.

ஏறுதழுவுதலிற்கு ஆதரவாக நல்லூரில் கூடிய கூட்டம் இரண்டாம் வகை. கல்வி, அலுவலகங்களை முடித்துக் கொண்டு மாலையில் ஒன்றுகூடி கலைந்து செல்வதால் என்ன பலன் கிடைக்கும்? அது எல்லோருக்கும் தெரிந்ததுதான். ஆனால், நமது பண்பாட்டு வேரை காப்பாற்ற நாமும் வீதிக்கு வந்தோம் என்ற திருப்தி கிடைக்கிறது. கூடவே, அந்த போராட்டங்கள் அதிகார மையங்களின் முகத்தில் அறையவில்லையென்பது அவர்களிற்கு கூடுதல் சந்தோசம். ஆகவே துணிவுடன் வந்தார்கள்.

ஏறுதழுவுதலுக்கு ஆதரவான உண்மையான போராட்டம் அதிகார மையத்தின் முகத்தில் அறைவதை போல நடத்த வேண்டுமெனில் செய்ய வேண்டியது என்ன? சிவனே என உட்கார்ந்திருந்த நல்லூர் கந்தனா ஏறுதழுவுதலை தடைசெய்தார்? நாட்டிற்கு வெளியில் உள்ள இனம், சமூகமொன்றிற்காக போராட்டம் நடத்த இடங்களை தேர்வு செய்யும்போது, பொதுஇடங்களை தேர்வு செய்வது வழக்கம்தான். அதிலும், நல்லூர் போன்ற அகிம்சை போராட்ட அடையாள இடங்களிற்கு கூடுதல் மதிப்பும் கிடைக்கலாம்.

ஆனால், ஏறுதழுவுதலை அனுமதிக்க கோரி யாரின் கவனத்தை ஈர்க்கும் போராட்டங்கள் நடக்கின்றன? இந்திய மத்திய அரசின் கைகளில்தான் விவகாரம் உள்ளது. உச்சநீதி மன்ற தீர்ப்பு என்பது இந்திய சட்டங்களின் அடிப்படையில் வழங்கப்பட்டது. நாட்டு மாடுகள் தொடர்பான சட்ட ஏற்பாடுகளில் பிரச்சனைக்குரிய அம்சங்களை அகற்றி, ஏறுதழுவுதலிற்கு வழியேற்படுத்திக் கொடுப்பது மத்திய அரசின் கைகளில்தான் உள்ளது. உண்மையில் ஏறுதழுவுதலிற்கு ஆதரவாக நாம் போராடுவதெனில், அதற்கு மிகச்சிறந்த இடம் எது? யாழிலுள்ள இந்திய துணைத்தூதரகத்தை தவிர்த்து இன்னொரு பொருத்தமான இடத்தை யாரால் சொல்ல முடியும்?

அப்படி செய்தால், அதுதான் பிரச்சனையின் மூலத்தையுணர்ந்து நெற்றிப்பொட்டில் அடிப்பது. ஆனால் அது இலேசான செயலல்ல. அதிக ரிஸ்க் தேவையானது. அதற்கு நமது இளையவர்கள் தயாரில்லை.

பொதுவாகவே நமது ஈழத்தமிழர்களிடம் 'தமிழீழமும் தேவை. மகன் டொக்கருக்கும் படிக்க வேணும்' மனநிலைதான். அதாவது, எதிலும் பங்காளியாகாமல், கைதட்டுபவர்களாக இருப்பது. அந்த கைதட்டல் பரம்பரை சமூக வலைத்தளங்களில் லைக் செய்யும் பரம்பரையாக உருமாறியுள்ளது.

சமூக வலைத்தள பரவலின் பின்னர் தமிழ் சமூகத்தில் பஷன் போராட்டமே தீவிரமடைகிறது. பிரச்சனைகளின் நெற்றிப்பொட்டில் அறையாத, பிரச்சனைகளிற்கு




வெளியில் நிற்கும் போராட்டங்களை நடத்துவதுஞ் அதை சமூக வலைத்தளங்களில் பிம்ப உருவாக்கத்திற்கு பயன்படுத்துவதென காலம் மாற்றமடைகிறது. இந்தவகையான போராட்டங்களில் சொல்பி எடுத்து, 'ஐ சப்போர்ட்...' என போடுவதுடன் மனதை சமாதானமடைய செய்துவிட்டு போய் விடுகிறார்கள்.

'தமிழீழமும் வேண்டும், மகன் டொக்ரராகவும் வேண்டும்' மனநிலையில் அடுத்த தலைமுறை உருமாற்றமா இதுவென்பதை உறுதிசெய்ய அடுத்தடுத்த நிகழ்வுகள் வரை காத்திருக்கலாம்.

சமூக வலைத்தள பரபரப்பில், பிரச்சனையில்லாத ஒன்றிற்காக, ஒரு பஷனாக போராட்டத்தை நடத்தியுள்ளனர் என்ற குற்றச்சாட்டிற்கு வலுவுள்ளது. ஏனெனில், ஏறுதழுவுதல் இலங்கை தமிழர்களின் பாரம்பரிய அடையாளமல்ல. ஆனால் காளைகளுடன் தொடர்புபட்ட அடையாளமொன்று நம்மிடமிருந்தது. அது மாட்டுவண்டி சவாரி. மாட்டு வண்டி சவாரி கிட்டத்தட்ட இல்லாமலே போய் கொண்டிருக்கிறது. நமது பாரம்பரிய அடையாளத்தை மீட்க ஒருதுரும்பையும் தூக்கி போட தயாரில்லாதவர்கள், அடுத்தவனின் பிரச்சனையில் மலையை புரட்டுவேன் என்றால் அது என்ன கதை?

தமிழ் மக்களின் அடிப்படையான பிரச்சனையில் போராடாமல், வெளியில் உள்ள பிரச்சனைக்கு போராடுவது பிழையென்பதல்ல. ஆனால், அது விமர்சனங்களை எழுப்பும். முக்கியமாக, உள்ளக பிரச்சனையில் குரல் எழுப்பினால் அரசுடன், காவல் துறையுடன் முரண்படுவதாகி, வில்லங்கமாகும் என்ற பாதுகாப்பு மனநிலையில், எந்த ஆபத்துமில்லாத விடயங்களில் மட்டும் இளைய தலைமுறை குரல் கொடுக்கிறதென்பது முக்கியமான விமர்சனம். அதனை களைய வேண்டியது இளைய தலைமுறையின் பொறுப்பு. அதனை அவர்கள் செய்யாத வரையில் அவர்கள் செய்வது போராட்டமா, ஒன்றுகூடலா என்பதிலும் குழப்பம் வரும்.






## கொக்ககோலா வடிவில் ஆபத்து!

தெற்காசியாவின் மென்பான உற்பத்தி கேந்திரநிலையமாக இலங்கையை மாற்ற அமெரிக்காவின் பன்னாட்டு நிறுவனமான கொக்ககோலா நிறுவனம் விருப்பம் வெளியிட்டுள்ளது. கொக்ககோலா நிறுவனத்தின் ஆசிய பசுபிக் பிரிவிற்கான உதவித்தலைவர் ஜோன் முர்பி கொழும்பில் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவை சந்தித்து விருப்பத்தை வெளியிட்டுள்ளார்.

தெற்காசியாவின் குளிர்பான சந்தையில் ஏகபோகம் செலுத்தும் கொக்ககோலாவை இலங்கையில் தயாரித்து தென்னாசிய வலயத்திற்கு ஏற்றுமதி செய்வதே தமது நோக்கம் என்றும், உலகின் பிரமாண்ட குளிர்பான சந்தையின் அங்கமாவதன் மூலம் இலங்கையின் உள்ளூர் பொருளாதாரம் வலுவடையுமென்றும் அந்த நிறுவனம் கூறுகிறது.

இலங்கைக்கு வெளிநாட்டு முதலீடுகளை கொண்டு வர வேண்டும், தொழிற்சாலைகளை அமைக்க வேண்டும், அபிவிருத்தியின் வேகம் கண்ணுக்கு தெரிய வேண்டும் என்பதெல்லாம் சரிதான். ஆனால் கட்டடம் கட்டுவதற்கான மணலை நமது காலடியில் தோண்டுவது சரியாகாது. கொக்ககோலாவை இலங்கைக்குள் அனுமதிப்பது அப்படியான காரியமாகத்தான் அமையும்.

கொக்ககோலா ஏன் இலங்கையை விரும்புகிறது?

தென்னாசியாவின் மென்பான கேந்திர நிலையமாக இலங்கையை மாற்றுவதென கொக்ககோலா கூறுவது வேறு அர்த்தத்தில். கொக்ககோலாவின் அர்த்தத்தில் தென்னாசியா என்பது இந்தியா. உலகத்தின் பிரமாண்ட சந்தைகளில் ஒன்றான இந்தியாவிற்கான சிக்கலில்லாத உற்பத்தி/ விநியோக வழியொன்றை கண்டடைய கொக்ககோலா விரும்புகிறது. இந்தியாவிற்கு அண்மையில் உள்ளதுடன், இலங்கையின் பொருளாதா தேவை, கொள்கை தமக்கு அனுகூலமாக இருக்கலாமென கொக்ககோலா முடிவு செய்திருக்கலாம்.

பிரமாண்ட சந்தையாக இந்தியா திகழும்போது, எதற்காக இந்தியாவிற்கு வெளியில் வைத்து உற்பத்தி செய்ய வேண்டும்? இந்தக் கேள்வியை புத்திபூர்வமாக அணுகுவதன் மூலம், வரவிருக்கும் ஆபத்தை புரிந்து கொள்ளலாம்.

கொக்ககோலா நிறுவனம் உள்ளிட்ட பெரு நிறுவனங்களின் தொழிற்சாலைகளால் இந்தியாவின் இயற்கை வளங்களும், சூழலும் கிட்டத்தட்ட சீரழிக்கப்பட்டு விட்டது. மிகமிக தாமதமாகவே இந்திய சமூகம் விழித்துக் கொண்டுள்ளது. பெரிய ஆறுகளில் நீர் நச்சானது, பல சிற்றாறுகள் காணாமலேயே போய்விட்டன. கொக்ககோலா உள்ளிட்ட மென்பான உற்பத்தி நிறுவனங்கள்தான் இதற்கு காரணம் என்ற எதிர்ப்பு குரல்கள் வலுவடைந்து வரத்தொடங்கிவிட்டன. இதேநிலையில் இந்தியாவில் தொடர்ந்தும் உற்பத்தியை செய்ய முடியாது. வேறொரு உற்பத்தியிடத்தை கண்டடைய வேண்டிய அவசியம் கொக்ககோலா உள்ளிட்ட பெரு நிறுவனங்களிற்கு ஏற்பட்டது. அல்லது அடுத்த பத்தாண்டுகளிற்குள் இந்த நிலையேற்படலாமென்ற கணப்பீட்டின் அடிப்படையில் மாற்றத்தை யோசிக்கிறார்கள். இலங்கையில் போதிய, சுத்தமான நீராதாரம் உள்ளது. தற்போதைய அரசின் தாராளவாத பொருளாதார கொள்கை, அபிவிருத்தியடையும் நாடொன்றிற்கு தேவையான தொழிற்சாலை, தொழில்வாய்ப்பு தேவைகளினடிப் படையில் இலங்கையை களமாக்கலாமென கொக்ககோலா முடிவு செய்திருக்கலாம். இலங்கை நல்ல நீராதாரத்தை கொண்ட நாடுதான். ஆனால் பல்வேறு காரணங்களால் மழைவீழ்ச்சி குறைந்து, நீர்ப்பஞ்சம் முக்கிய பிரச்சனைகளில் ஒன்றாக மாறிவிட்டது.

நாட்டின் ஒரு பகுதியில் கடும் வறட்சியும், இன்னொரு இடத்தில் நதிகள் கடலில் கலப்பதுமான முறையான திட்டமிடலின்மை இலங்கையில் உள்ளது. இலங்கையை உயிர்ப்புடன் வைத்துள்ள ஜீவ ஊற்றுக்களான நதிகளை பன்னாட்டு நிறுவனங்களிடம் வழங்குவதை தவிர்த்து, இலங்கை முழுவதும் நீரை கொண்டு செல்வதே ஆட்சியாளர்களின் அவசிய பணி. அநுராதபுரத்திற்கு அப்பால் வடக்கு பக்கமாக யாழ்ப்பாணம் வரை குடிநீர் ஆபத்தான ஒன்றாக மாறியுள்ளது. யாழ்க்குடா நிலத்தடி நீர் பருக உகந்ததா இல்லையா என்பதையே சொல்ல முடியாமல் திண்டாடுகின்றன அரச நிறுவனங்கள்.

இருக்கும் நீரை முறையாக பயன்படுத்தி மக்களின் அடிப்படை வாழ்வை உறுதி செய்வதே அரசுகளின் கடமை. பன்னாட்டு நிறுவனங்களிடம் நீர் ஆதாரங்களை கொடுத்து, பணத்தை பெற்று குளிர்பானம் வாங்கிக்குடித்து உயிர் வாழலாமென திட்டமிடுவதையெல்லாம் எந்த வகைக்குள் அடக்குவதென தெரியவில்லை. பன்னாட்டு குளிர்பான நிறுவனங்களின் உள்ளூர் தொழிற் சாலைகள் சில ஏற்கனவே இலங்கையிலுள்ளன. அவற்றினால் உள்ளூர்நீர் நிலைகள் பாதிக்கப்படுவதாக ஏற்கனவே எதிர்ப்பு குரல்கள் எழுந்தன. ஆனால் அவை. பரவலடையவில்லை.

நுரைச்சோலை அனல்மின் நிலையம் உள்ளிட்ட சில தொழிற்சாலைகளினால் பாதிக்கப்படுவதாக மக்கள் கூறிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அந்த குரல்கள் ஒட்டுமொத்த இலங்கையின் குரலாகவில்லை. பாதிக்கப்பட்ட பிரதேச தமிழ், முஸ்லீம், சிங்களவர்களின் பிரச்சனையாகத்தான் இருந்தது. பொதுக்குரலாகாத வரையில் ஆட்சியாளர்களிற்கும், பன்னாட்டு நிறுவனங்களிற்கும் வசதியாக அமைந்துவிடுகிறது. இலங்கையில் சுற்றுச்சூழல் ஆர்வலர்களின் குரல் பலமில்லாமல் இருப்பதும், பன்னாட்டு நிறுவனங்கள் இலங்கையை குறிவைக்க இன்னொரு காரணம்.

கொக்ககோலா நிறுவனத்தின் வரவு இலங்கையின் நீர்வளத்தை பாதிக்குமென்பதே யதார்த்தம். ஆட்சியாளர்கள் இது பற்றி அக்கறை செலுத்துவார்கள் என்று கருத முடியாது. மக்கள்தான் விழிப்புடன் இருக்க வேண்டும்.

தீபம்
197, அரசடிவீதி, யாழ்ப்பாணம்
ஆசிரியர்பீடம்: 0768255562
விளம்பரம்: 0768255560, 0768255567
விநியோகம் 0768255563
செய்திகளிற்கு: deepamdesk@gmail.com
செய்திகளை அறிந்திட: deepamnews.lk




# யார் இந்த பீட்டா?

தமிழர்களின் பாரம்பர்ய பண்டிகையான பொங்கலையொட்டி நடத்தப்படும் ஜல்லிக்கட்டுக்கு உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து, விலங்குகள் நல அமைப்பான 'பீட்டா' (PETA - People for the Ethical treatment of animals ) தடை வாங்கியிருக்கிறது. இந்தத் தடை, விலகும் என்று காத்திருந்த தமிழர்கள் இன்றைக்குப் பொங்கி எழுந்து போராடிக் கொண்டிருக்கிறார்கள். அலங்காநல்லூரில் ஆரம்பித்த மாணவர்களின் எழுச்சி முழக்கம், தமிழகமெங்கும் எதிரொலித்துக் கொண்டிருக்கிறது. இப்போது இலங்கையிலும் சிறிய ஆதரவுப் போராட்டங்கள் நடக்கின்றன.

இந்தப் பீட்டாவின் தடை நியாயமானதா? அவர்களின் உண்மை முகம் என்ன?

"ஜல்லிக்கட்டு" என்பது ஒரு மூடநம்பிக்கை என்றும், பிற்போக்குத்தனமானது என்றும், விலங்குகளைத் துன்புறுத்தி, மனிதர்களைக் காயப்படுத்தும் காட்டுமிராண்டித்தனம் என்றும் நீதிமன்றத்தில் வாதாடி வெற்றி பெற்றுள்ள பீட்டா நிறுவனத்தின் மறுமுகத்தை 'ஹஃபிங்டன் போஸ்ட்' என்ற பத்திரிக்கை அம்பலப்படுத்தியுள்ளது. அதன் சுருக்கம் இது...


யார் இந்த PETA?

சர்வதேச அளவில், விலங்குகளின் உரிமைக்காகப் போராடும் ஓர் நிறுவனமாகத் தன்னை காட்டிக் கொள்ளும் இந்த நிறுவனம், 1980ம் ஆண்டு அமெரிக்காவில் உள்ள விர்ஜினியாவில் தொடங்கப்பட்டது. விலங்குகளை உண்ணவோ, அவற்றிலிருந்து எடுக்கப்படும் பொருட்களைப் பயன்படுத்தவோ கூடாது; விலங்குகளை வைத்து எந்த மருத்துவ ஆய்வும் செய்யக் கூடாது என்பதெல்லாம் இவர்களின் முக்கியக் கொள்கை. அதே சமயம் செல்லப்பிராணி வளர்ப்போர், அவற்றின் மீது செலுத்தும் அன்பு மட்டுமே இந்த நிறுவனத்தின் மிகப் பெரிய மூலதனம். அந்த மூலதனத்தை, முதலீடாக மாற்றியதால் கடந்த 35 ஆண்டுகளில் 30 லட்சம் பேர் பீட்டாவில் உறுப்பினர்களாக சேர்ந்துள்ளனர். லாப நோக்கு இல்லாத நிறுவனமாகத் தன்னைக் காட்டிக்கொள்ளும் இந்த 'பீட்டா' ஆண்டொன்றுக்கு சுமார் 100 மில்லியன் அமெரிக்க டொலர்களை வருவாயாக ஈட்டி வருகிறது.

இதற்கு முக்கியக் காரணம், அப்பாவி விலங்குகளைக் காப்பாற்றி அவற்றிற்குப் புகலிடம் அளிக்கும் சரணாலயமாக 'பீட்டா' செயல்படுகிறது என்று மக்களிடம் நிலவும் நம்பிக்கைதான். ஆனால் உண்மையில் 'கருணைக் கொலை' என்ற பெயரில் விலங்குகள் இனத்தையே 'பீட்டா' அழித்து வருவதாக அந்தக் கட்டுரை குற்றம் சாட்டியுள்ளது.

அமெரிக்காவில்தான் உலகிலேயே அதிகமாக செல்லப்பிராணிகள் வளர்க்கப்படுகிறது. அங்கு அனாதையாக மீட்கப்படும் செல்லப்பிராணிகளை, உரிமையாளர்கள் 15 நாட்களுக்குள் மீட்டு செல்லவில்லையென்றால், அதனைக் கருணை கொலை செய்யச் சட்டம் அனுமதிக்கிறது. இப்படி கருணைக் கொலை என்ற பெயரில் ஆயிரக்கணக்கான நாய்கள், பூனைகளை பீட்டா நிறுவனம் கொன்று குவித்திருப்பதாக சொல்லப்படுகிறது. கடந்த சில ஆண்டுகளாக அரசல் புரசலாகப் பேசப்பட்டு வந்த இந்தச் செய்தி தற்போது, ஆவணப்படங்களுடன் ஆதாரப்பூர்வமாக வெளியாகியுள்ளது.

'பீட்டா' வின் முகத்திரையைக் கிழிக்குமாறு சில ஆதாரங்களை வெளியிட்டிருக்கிறார் 'நேதன் இனொக்ராட்' என்ற சமூக ஆர்வலர். ஹஃபிங்டன் போஸ்டில் வெளி வந்துள்ள அந்த கட்டுரையில் சொல்லப்பட்டுள்ள விஷயங்கள் அதிரவைக்கும் ரகம்



- பீட்டா நிறுவனத்தின் வண்டிகளிலேயே விலங்குகளைக் கொல்வதற்கான விஷ ஊசிகளைக் கொண்ட பைகள் எப்போதும் தயார்நிலையில் இருக்கின்றன.
- கொல்லப்பட்ட சில வகை விலங்குகளின் உடல்களைப் பதப்படுத்தி வைக்க, 20,000 டொலர்கள் செலவில், ஒரு பெரிய குளிர்பதன இயந்திரத்தையே பீட்டா நிறுவனம் இயக்கி வருகிறது.
- 2011ம் ஆண்டு மட்டும் சுமார் 96 சதவீதம் வீட்டு விலங்குகளைக் கொன்றிருக்கிறது 'பீட்டா' . அதேபோல 2012ல் 602 நாய்கள், 1,045 பூனைகளைக் கொன்று குவித்திருக்கிறது.
- மொத்தத்தில் கடந்த 11 ஆண்டுகளில் மட்டும், சுமார் 30 ஆயிரம் விலங்குகளைக் கொன்றிருக்கிறது 'பீட்டா'.
- இந்த விலங்குகளைப் பற்றிய கணக்கோ, புள்ளி விவரமோ எந்த ஆவணங்களிலும் தென்பட வில்லை. கருணைக் கொலை என்ற பெயரில் அமைதியாகக் கொல்லப்படும் இந்த விலங்குகள், சத்தமின்றி அப்புறப்படுத்தப்படுகின்றன. சில நேரங்களில், குப்பைகளைக் கட்டுவது போல, பிளாஸ்டிக் பைகளில் மூட்டை கட்டப்பட்டுத் தூக்கியெறியப்பட்டிருக்கின்றன.
- இது குறித்து குரலெழுப்பிய சில ஆர்வலர்களிடம், சட்டரீதியாகப் பார்த்துக் கொள்ளலாம் என்று அலட்சியமாகப் பதிலளித்திருக்கிறது பீட்டா.

தமிழகத்தின் மாட்டுப் பால் சந்தை, ஆண்டுக்கு மூன்றரை லட்சம் கோடி ரூபாய் புழங்கும் ஒரு பெரும் வர்த்தகம். ஜல்லிக்கட்டு காளைகள்தான் தமிழகத்தை பொறுத்தவரை, இன விருத்திக்கு முக்கியமானவை.

ஜல்லிக்கட்டு என்ற ஒன்றை அழித்து விட்டால், நாட்டு காளைகள் இனம் மங்கி அழியத் தொடங்கி விடும். இதனால் கலப்பின காளைகளை தமிழகத்திற்குள் கொண்டுவர முடியும். இதற்காகத்தான் ஜல்லிக்கட்டை இவ்வளவு தீவிரமாக பீட்டா எதிர்ப்பதாக கருத்து நிலவுகிறது. மாட்டுத்தீவன தயாரிப்பு நிறுவனங்கள், கால்நடை மருந்து நிறுவனங்கள் இதன் பின்னணியில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

தன் கையில் ரத்தத்தை வைத்துக் கொண்டு அடுத்தவர் கையை கழுவ முயற்சிக்கிறது பீட்டா

# சட்டத்துக்கு கண்கள் இரண்டு

செஞ்சுடர்.சே



கம்சநாதன் குழுவினர் வெளியேறிச்சென்ற சில மணித்தியாலங்களுக்குப் பின்னர், வெள்ளை நிறக்கார் ஒன்று சடுதியாக துயிலுமில்ல வளாகத்துக்குள் நுழைகிறது. காருக்குள் இருந்து இறங்குகின்றார் கிளிநொச்சி மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் றொஹான் ராஜபக்ஸ. அவர் ராஜதந்திரப்பாணியில் ஏற்பாட்டாளர்களோடு பேச்சுவார்த்தையில் ஈடுபடுகின்றார்.

'நாட்டில் நீண்ட நெடிய யுத்தம் நடைபெற்றதற்குப் பின்னர் சமாதானம் நிலவி வருகின்றது. யுத்தத்தில் இறந்த உங்கள் பிள்ளைகளை உறவுகளை, நினைவுகூரவும் வழிபடவும் உங்களுக்கு உரிமை உண்டு. உங்களின் உணர்வுகளை நான் விளங்கிக்கொள்கிறேன். ஆனால் இந்தக் காணி பிரதேசசபைக்கு உரித்துடைய காணி. பிரதேசசபையின் அனுமதி இன்றி இவ்வாறு எந்தவிதமான பணிகளிலும் ஈடுபட முடியாது.' என்று கூறுகின்றார்.

இதற்கு ஏற்பாட்டாளர்கள் ஆட்சேபனை தெரிவிக்கின்றனர். 'இந்தக்காணி பொதுக் காணி. இன்னும் பிரதேசசபையிடம் பாரப்படுத்தப்படவில்லை. அப்படியென்றால் காணி உரித்து பத்திரத்தை செயலாளர் காட்ட வேண்டும்.' என்று கூறுகின்றனர்.

'எதுவானாலும், கொழும்பு உள்பட நாட்டின் சகல நகரசபைகள் பிரதேசசபைகளிலும் உள்ளது போல, மயானங்கள் மைதானங்கள் பிரதேசசபையின் பொறுப்புக்கு கீழ் தான் வரும். உங்களின் உறவுகளைப் போலவே ஏனையவர்களின் உறவுகளும் இந்த இடத்தில் புதைக்கப்பட்டுள்ளார்கள். இந்தக் காணிக்குள் சட்டவிரோத செயல்பாடு இடம்பெறுவதாக பொதுமக்களிடமிருந்து 119 தொலைபேசி அழைப்பு ஊடாக எங்களுக்கு முறைப்பாடு கிடைச்சிருக்கு.' என்கிறார் றொஹான் ராஜபக்ஸ.

'கடந்த வருடம் மாவீரர் நாளன்று இதே துயிலுமில்லத்தில் விளக்கேற்றும் போதும், விடுதலைப்புலிகள் இயக்கத்தின் பாடலை ஒலிக்க விடும்போதும் உங்களுக்கு 119 க்கு முறைப்பாடு அழைப்பு கிடைக்கவில்லையா?' என்று ஏற்பாட்டாளர்கள் றொஹான் ராஜபக்ஸவிடம் மறுகேள்வி கேட்டனர்.

'எல்லாவற்றையும் நான் விளங்கிக் கொள்கிறேன். முறைப்பாட்டின் அடிப்படையில் உங்களை கைதுசெய்துகொண்டு செல்ல முடியும். ஆனால் நான் அப்படிச் செய்ய விரும்பவில்லை. இப்போதைக்கு இந்தப்பணியை நிறுத்துங்கள். மாலை 4.00 மணிக்கு நீங்கள் பொலிஸ் நிலையத்துக்கு வாருங்கள். அரசாங்க அதிபரும், பிரதேச செயலாளரும் பிரதேசசபை செயலாளரும் வருவார்கள். எல்லோருமாக சேர்ந்து பேசி ஒரு முடிவை எடுக்கலாம்.' என்று கூறிவிட்டு புறப்பட்டுச்செல்கின்றார் றொஹான் ராஜபக்ஸ.

பொதுக்கல்லறைக் கட்டும் பணி இடைநிறுத்தப்பட்டு, பொலிஸார் சகிதம் எல்லோருமாக வெளியேறிச்செல்கின்றனர்.

### கிளிநொச்சி பொலிஸ் நிலையம்

மாலை 4.00 மணி. ஏற்பாட்டாளர்கள் சமுகமளித்திருந்தனர். அரசாங்க அதிபரோ, பிரதேச செயலாளரோ சமுகமளித்திருக்கவில்லை. கரைச்சி பிரதேசசபையின் செயலாளர் கம்சநாதன் மட்டும் சமுகமளித்திருந்தார்.

இருதரப்பையும் கலந்துபேசி சுமுகமான தீர்வுக்குப் போகுமாறு கிளிநொச்சி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆனந்த கேட்கின்றார்.

அத்தகையதொரு தீர்வுக்குச் செல்ல கம்சநாதன் ஓரளவுக்கு மனம் விரும்பினாலும் கூட, அவர் தனக்கு இருக்கக்கூடிய சிறப்புரிமையைப் பயன்படுத்தி நேரடியாக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் ஏலவே செய்திருந்தமையினால், அதிலிருந்து அவரால் விடுபட்டுவர முடியவில்லை. ஆதலால் அவர் முறைப்பாடு பதிவு செய்துதான் ஆகவேண்டும் என்பதில் உறுதியாகவிருக்கின்றார்.

'எந்த அடிப்படையில் முறைப்பாடு பதிவு செய்யப்போகின்றீர்கள்?' என்று ஏற்பாட்டாளர்கள் கம்சநாதனிடம் கேட்கின்றனர்.

'தான் பிரதேசசபை ஒன்றின் செயலாளர் என்று தெரிந்திருந்தும், தனது கடமையை செய்ய இடையூறு விளைவித்ததாகவும், தகாத வார்த்தைகளால் திட்டியதாகவும்' என்று கம்சநாதன் கூறுகின்றார்.

நீங்கள் பிரதேசசபையின் செயலாளர் என்பது தமக்கு தெரியாது என்றும், பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் தனிப்பட்ட ஊடகப்பணியாளரை உங்கள் வாகனத்தில் ஏற்றி வந்ததால், நீங்கள் அவரின் கையாள் என்று தாங்கள் நினைத்ததாகவும், ஏற்பாட்டாளர்கள் கூறுகின்றனர்.

### பத்திரிகை செய்தியாளரா? எம்.பியின் பணியாளரா?

அவர் எம்.பியின் பணியாளர் என்பது தனக்கு தெரியாது என்றும், தான் சம்பவம் அறிந்து கனகபுரம் துயிலுமில்லத்துக்கு வரும் வழியில் வேல்மாலிகிதன் இடைமறித்து வாகனத்தில் ஏற்றி விட்டதாகவும், அவரை தனக்கு தினக்குரல் பத்திரிகையின் செய்தியாளராகவே தெரியும் என்றும், கம்சநாதன் கூறுகின்றார்.

'வேலமாலிகிதன் யார்? அவர் எம்.பியின் மாவட்ட அமைப்பாளர். நீங்கள் என்ன குழந்தை பிள்ளைக்கு கதை சொல்வது போல 'கூறிக்கொண்டிருக்கிறீயள்?' என்று ஏற்பாட்டாளர்கள் சினக்க, பொலிஸ் நிலையத்துக்குள்ளும் தொடங்கியது கடுமையான வாய்த்தர்க்கம்.

'இவர்கள் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் அல்லர். வவுனியா, முல்லைத்தீவு போன்ற வெளி மாவட்டங்களிலிருந்து வந்திருக்கின்றனர்.' என்று ஆனந்தவிடம் முறையிடுகின்றார் கம்சநாதன்.

ஏற்பாட்டாளர்களும் பதிலுக்கு எகிற, நிலவரம் கலவரமாகியது. ஒருவாறு இருதரப்பையும் சமரசப்படுத்திவிட்டு, 'முறைப்பாட்டுக்கு உங்களிடம் ஏதேனும் ஆதாரம் இருக்கின்றதா?' என்று கம்சநாதனிடம் ஆனந்த கேட்கின்றார்.

கம்சநாதன் தனது கையடக்க தொலைபேசியில் அழைப்பை ஏற்படுத்துகின்றார். மறுநிமிடமே, பாராளுமன்ற உறுப்பினரின் ஊடகப்பணியாளர் பொலிஸ் நிலையத்துக்கு வருகை தந்து தனது கமராவில் பதிவுசெய்த காட்சிகளை பொலிஸாருக்கு காண்பிக்கின்றார்.

அந்த காணொளியை ஆதாரமாக வைத்துக் கொண்டு பொலிஸார் ஏற்பாட்டாளர்கள் அறுவர் மீது குற்றப்பத்திரிகை பதிவுசெய்துவிட்டு, மறுநாள் (06.01.2017) காலை 9.00 மணிக்கு கிளிநொச்சி நீதிமன்றத்துக்கு வருகை தருமாறு அறிவுறுத்தி விடுகின்றனர்.

மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவில், நீதிமன்றத்துக்கு சமுகமளிக்கின்றனர் குற்றம் சாட்டப்பட்ட ஏற்பாட்டாளர்கள். கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றின் நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் 11.42 மணிக்கு வழக்கு விசாரணைக்காக (வழக்கு எண்: பீ/14/17) எடுத்துக்கொள்ளப்படுகின்றது. வழக்கு தொடுநர் சார்பில் பொலிஸார் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தனர்.

ஏற்பாட்டாளர்கள் சார்பில் வழக்காடுவதற்காக, சட்டத்தரணிகள் ம.கிறேஷியன், சி.சிவபாலசுப்பிரமணியம் ஆகியோர் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த நிலையில், மூன்றாவதாக சட்டத்தரணி திருமதி விஜயராணி சதீஸ்குமாரும் இணைந்து கொள்கின்றார். (நீதிமன்ற அமர்வு முடிவுக்குப் பின்னர் அவரிடம் இதுதொடர்பில் விசாரித்தபோது, ஏற்பாட்டாளர்கள் சட்;டத்தரணிகளை ஒழுங்கு செய்திருக்கிறார்களோ இல்லையோ, எதுவாயினும் இந்த வழக்கில் ஆஜராகி அவர்களுக்காக வாதாடுமாறு வடக்கு



மாகாண நன்னீர் மீன்பிடி, போக்குவரத்துறை அமைச்சர் ப.டெனிஸ்வரன் தன்னிடம் தொலைபேசியில் கேட்டுக்கொண்டதாக அவர் தெரிவித்தார்.)

வழக்காட்டம் தொடங்கிற்று. பொலிஸார் முதல்நாள் (05.01.2017) கனகபுரம் துயிலுமில்ல வளாகத்துக்குள் வைத்து பேசியதற்கு முற்றிலும் நேர்மாறாக நீதிமன்ற கட்டடத்துக்குள் நடந்துகொண்டனர். நேற்றைய நாள் அதிகம் அதிகமாக மென்சக்தி பேசியவர்கள் இன்று எவ்வளவுக்கு எவ்வளவு வன்சக்தியை பிரயோகிக்க முடியுமோ? அதுவரை முயன்று கொண்டிருந்தனர். பொலிஸாரின் சகல பிரயத்தனங்களையும் சட்டத்தரணிகள் தமது வாதாடும் திறமையால் அடித்து நொருக்கித் தள்ளிக்கொண்டிருந்தனர்.

**பயங்கரவாத தடைச்சட்டம் பாய வேண்டும்:**

'நாட்டுக்குள் தடைசெய்யப்பட்டுள்ள எல்.ரீ.ரீ.ஈ பயங்கரவாத இயக்கத்துக்கு இவர்கள் கல்லறை கட்ட முயன்றுள்ளனர். இந்த வழக்கை பயங்கரவாத தடைச்சட்ட வழக்குக்கு மாற்றுமாறு' நீதிபதி ஆனந்தராஜாவிடம் பொலிஸார் கோரிக்கை விடுத்தனர்.

பொலிஸாரின் இந்த கோரிக்கைக்கு, 'சாதாரண குற்றவியல் சட்டத்துக்கு கீழ் பதிவாகியுள்ள வழக்கை, பயங்கரவாத தடைச் சட்ட வழக்காக மாற்ற முடியாது.' என்று சட்டத்தரணிகள் கடுமையான ஆட்சேபனையை தெரிவித்தனர்.

**சட்டப்பிரச்சினையல்ல, மனித உரிமை:**

இந்தநிலையில் நீதிபதி ஆனந்தராஜா பொலிஸாரைப் பார்த்து, 'இதை ஒரு சட்டப்பிரச்சினையாக பார்க்காதீர்கள். இதை ஒரு மனித உரிமை சார்ந்த பிரச்சினையாகப் பாருங்கள். யுத்தத்தில் இறந்த தங்களது உறவுகளை நினைவுகூரவும், வழிபடவும், கல்லறை கட்டவும், மலர் தூவவும், நினைவுச்சிலையோ தூபியோ எழுப்பவும் அவர்களது உறவினர்களுக்கு உரிமை உண்டு. உலகத்தில் உள்ள எல்லாச் சமுகங்களுக்கும் இந்த மனித உரிமை வாய்ப்பு உண்டு. உங்கள் வீட்டில் உங்கள் அப்பா, அம்மா, அண்ணா, அக்கா, தம்பி தங்கை என்று யாராவது இறந்திருந்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்?

**'நாட்டுக்குள் தடைசெய்யப்பட்டுள்ள எல்.ரீ.ரீ.ஈ பயங்கரவாத இயக்கத்துக்கு இவர்கள் கல்லறை கட்ட முயன்றுள்ளனர். இந்த வழக்கை பயங்கரவாத தடைச்சட்ட வழக்குக்கு மாற்றுமாறு' நீதிபதி ஆனந்தராஜாவிடம் பொலிஸார் கோரிக்கை விடுத்தனர்.**



அதுபோல மனிதாபிமானத்துடன் இந்த பிரச்சினையையும் அணுகுங்கள். அவர்களின் உணர்வை, அவர்களுக்குள்ள உரிமையை புரிந்துகொள்ளுங்கள்.' என்று, நாட்டில் ஒவ்வொரு பிரஜைக்கும் உள்ள வழிபாட்டுச்சுதந்திரம், நினைவுகூரல் சுதந்திரம் தொடர்பில் மிகவும் தெளிவானதொரு விளக்கத்தை பொலிஸாருக்கு போதித்தார்.

தொடர்ந்து, 'இவர்கள் மீது என்ன குற்றம் சாட்டப்பட்டு வழக்கு பதியப்பட்டுள்ளது?' என்று பொலிஸாரை நோக்கி மறுகேள்வி எழுப்பினார்.

இந்த கேள்விக்கு பொலிஸார், 'அரச உத்தியோகத்தரான பிரதேசசபையின் செயலாளரை கடமையை செய்யவிடாது இடையூறு விளைவித்துள்ளனர். தகாத வார்த்தைகளாலும் ஏசியுள்ளனர்.' என்று கூற, 'வழக்கு தொடுக்கப்பட்டுள்ள விடயத்தை பிரஸ்தாபிப்பதை தவிர்த்துவிட்டு ஏன் சம்பந்தமில்லாத விவகாரத்தை (பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்பில்) இங்கு பேசிக்கொண்டிருக்கின்றீர்கள்.' என்று பொலிஸாரை கண்டித்துவிட்டு, 'எங்கே அவர்? (பிரதேசசபையின் செயலாளர்) என்று நீதிபதி கேட்கின்றார்.

கம்சநாதன் நீதிமன்றத்துக்கு சமுகமளித்திருக்காத நிலையில், 'உடனடியாகச் சென்று அவரை அழைத்து வருமாறு' பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பித்துவிட்டு, வழக்கை சிறிது நேர காலத்துக்கு ஒத்திவைக்கின்றார்.

11.58 மணிக்கு மீண்டும் வழக்கு விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்படுகின்றது. கம்சநாதன் முன்னிலையாகியிருந்தார். குற்றம் சாட்டப்பட்ட தரப்பாகிய ஏற்பாட்டாளர்களை நோக்கி, 'இவர் தனது கடமையைச் செய்ய ஏன் இடையூறு விளைவித்தீர்கள்? என்று கேட்கின்றார் நீதிபதி ஆனந்தராஜா.

இந்த கேள்விக்கு சட்டத்தரணிகள், 'அரச உத்தியோகத்தரான இவர், அரச வாகனத்தில் இந்த மாவட்டத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரது தனிப்பட்ட ஊடகப்பணியாளரை கூடவே ஏற்றிச் சென்றுள்ளார். ஆதலால் இவர்கள், கம்சநாதனை குறித்த பாராளுமன்ற உறுப்பினரின் செயல்பாட்டாளர் என்று நினைத்துவிட்டனர்.' என்று தெரிவித்தனர்.

**அரச பணி நீக்கத்துக்கு அலுவலா?**

நீதிபதி ஆனந்தராஜா கம்சநாதனை நோக்கி, 'அவ்வாறு ஏற்றிச்சென்றீரா?' என்று கேட்கின்றார். 'ஆமாம்' என்று கம்சநாதன் பதிலளிக்க, 'நீர் ஒரு அரச உத்தியோகத்தர். அதுவும் ஒரு பிரதேசசபையின் செயலாளர். நீர் எவ்வளவு பெரிய தவறிழைத்திருக்கிறீர் என்பது உமக்குப் புரியுதா? ஊடகவியலாளர்கள் தங்களுக்குச் செய்தி வேண்டும் என்றால், அவர்கள் தாங்களாகவே போய்ச்செய்தி சேகரிக்கட்டும். நீர் காவிக்கொண்டு திரிய வேண்டியதில்லை. அவர்கள் எங்கும் போகலாம். வரலாம். செய்தி சேகரிக்கலாம். அது அவர்களுக்கு உள்ள ஊடகச் சுதந்திரம். இப்ப கூட இதற்குள் (நீதிமன்ற கட்டடத்துக்குள்) இருந்து அவர்கள் நடப்பவற்றை செய்தி ஆக்கக்கூடும். அது அவர்களின் பணி. உமது பணி எதுவோ அதை மட்டும் செய்யும். உமக்கு யார் செய்தியாளர்களை வாகனத்தில் கொண்டு திரியச் சொன்னது? யார் அனுமதி தந்தது? அப்படி செய்யச்சொல்லி எந்த தாபனக்கோவையில் விதிமுறை இருக்கு? யாராவது வழியில கையப்போட்டு மறிச்சா, கள்ளன் காவாலி,யார் எவர் என்று தெரியாமல், யாரை வேண்டுமானாலும் ஏற்றிக்கொண்டு போவீரா? அது வேற வேற பிரச்சினைகளை அல்லவா கொண்டுவரும். இப்ப பாரும். என்ன நடந்திருக்கு? இத்தனைக்கும் நீர் ஒரு பொறுப்புமிக்க அரச உத்தியோகத்தர். இப்படியா நடந்துகொள்வது?' என்று கடுமையாக எச்சரித்தார் நீதிபதி.

'அது தவறு தான்' என்று ஒப்புக்கொண்டு, நீதிமன்றத்திடம் தனது தவறுக்காக பகிரங்கமாக மன்னிப்பு கேட்டுக்கொண்டார் கம்சநாதன். ஆயினும் பொலிஸாரோ விடுவதாக இல்லை. 'தகாத வார்த்தைகளால் ஏசினர்' என்று, மற்றுமொரு குற்றச்சாட்டை நீதிபதியிடம் கூறினர்.

**உண்மை பேசும் சமூக வலைத்தளம்**

இதற்கு சட்டத்தரணிகள், 'பொலிஸாரால் உங்களிடம் தரப்பட்டுள்ள இறுவட்டு முழுமையான காணொளி கிடையாது. முன்னுக்கு பின் நடைபெற்ற சம்பவங்களை கட் பண்ணி விட்டு, இடைப்பட்ட ஒரு துண்டு வீடியோ காட்சியை மட்டுமே தந்துள்ளனர். உண்மையில் என்ன நடந்தது? என்பதை தெரிந்துகொள்ள, நேற்றைய நாள் (05.01.2017) சமுக வலைத்தளங்களில் வெளியாகியுள்ள காணொளியை பார்த்தால் மாத்திரமே உங்களுக்கு உண்மை நிலைவரம் தெரியவரும்.' என்று, நீதிபதி ஆனந்தராஜாவிடம் கேட்டுக்கொண்டனர்.

'இப்போது அந்த காணொளி உங்களிடம் உள்ளதா?' என்று நீதிபதி கேட்க, அதற்கு சட்டத்தரணி ம.கிறேஷியன், 'நான் எனது கைப்பேசியில் அந்த வீடியோவை தரவிறக்கம் செய்து வைத்துக்கொள்ளவில்லை. ஆனால் சமுக வலைத்தளங்களில் பார்க்க முடியும்.' என்று தெரிவித்து தனது கைப்பேசியை நீட்ட, 'சரி சரி, நான் பின்னர் பார்க்கிறேன்.' என்று நீதிபதி ஆனந்தராஜா கூறிவிட்டார்.

**கனகபுரம் களவர பூமியாகுமா?**

மீண்டும் பொலிஸார், 'இவர்கள் இந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் அல்லர். வெளி மாவட்டங்களிலிருந்து வந்துள்ளனர்.' என்று குற்றம் கூற, அதற்கு சட்டத்தரணிகள், 'இவர்களின் உறவினர்கள் இங்கு தான் புதைக்கப்பட்டுள்ளனர். எங்கு புதைக்கப்பட்டுள்ளார்களோ? அங்கு தான் கல்லறை கட்ட வேண்டும்.' என்று தெரிவித்தனர்.

நீதிபதி ஆனந்தராஜா பொலிஸாரைப் பார்த்து, '2009 மே மாதத்துக்கு முன்னர் இங்கு இருந்த நடைமுறைச் சூழலையும், நிலபுல அமைப்பையும் நீங்கள் விளங்கிக்கொள்ள வேண்டும்.' என்று கூறினார்.

**தடுக்க வேண்டும்:**

மறுபடியும் பொலிஸார் வரிந்துகட்டிக் கொண்டு, 'இப்படி ஆளுக்கு ஆள் அங்கு போய் கல்லறைகள் கட்டினால் சமுக குழப்பங்கள், குழுச்சண்டைகள் இடம்பெற வாய்ப்பு அதிகம் உண்டு. ஆகவே துயிலுமில்ல வளாகத்துக்குள் யாரும் பிரவேசிக்க முடியாதவாறு நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பிக்க வேண்டும்.' என்று கோரிக்கை விடுத்தனர்.

கிளி.கரைச்சிபிரதேசசபையின்செயலாளர் கம்சநாதனை பார்த்து, 'துயிலுமில்ல வளாகத்துக்குள் எவராவது உள்பிரவேசித்து தங்களது உறவுகளை வழிபடுவது, நினைவுகூறுவது தொடர்பில் உமக்கு ஏதேனும் ஆட்சேபனையோ, பிரச்சினையோ உண்டா?' என்று கேள்வி எழுப்பினார் நீதிபதி ஆனந்தராஜா.

அதற்கு கம்சநாதன், 'யாரும் போகலாம் வரலாம். எனக்கு பிரச்சினையில்லை. ஆனால் அதற்குள் எந்த கட்டுமானப்பணிகளிலும் ஈடுபட முடியாது.' என்று தெரிவித்தார். 'அப்படியென்றால், நீங்கள் அந்த காணியில் என்ன செய்யப் போகின்றீர்கள்? வேறு ஏதேனும் திட்டங்கள் உங்களிடம் உண்டா?' என்று, மறுகேள்வி எழுப்பினார் நீதிபதி ஆனந்தராஜா.

'நானாக திட்டமிட்டு எதையும் செய்ய முடியாது. இது அரச மேல்மட்டத்தோடு தொடர்புபட்டுள்ள விடயம் ஆதலால்.' என்று கம்சநாதன் கூறி முடிக்க, சட்டத்தரணிகளோ 'துயிலுமில்லக்காணி சட்டப்படி இவருக்கு உரித்துடையதல்ல. இன்னும் அது கரைச்சி பிரதேசசபையிடம் பாரப்படுத்தப்படவில்லை.' என்று தெரிவித்தனர்.

'உம்மிடமும் திட்டங்கள் இல்லை. அவர்கள் தங்கள் உறவுகளுக்கு வழிபட கல்லறை கட்டப்போறம் என்று நிற்கினம். நீரோ பிரதேசசபைக்கு உரித்துடைய காணி என்று சொல்லிக்கொண்டு நிற்கிறீர். இப்பிடியே நீர் சொல்லிக்கொண்டு இருக்க முடியாது. அடுத்த தவணைக்கு சமுகமளித்து காணி உமக்கு உரித்துடையது என்று சட்டரீதியான ஆவணங்கள் ஊடாக நிரூபிக்க வேண்டும். இல்லாவிட்டால், அவர்களுக்கு கட்டுறதுக்கான உரிமை போகும். ஏனென்டால், யாரோ எவரதோ காணிக்கு நீர் வந்து வழக்கு போட்டுக்கொண்டு இருக்க முடியாது தானே. காணி யாருக்கு சொந்தமோ, அவர் தான் வந்து வழக்கு போடனும். சரி தானே?' என்று கம்சநாதனை பார்த்து நீதிபதி ஆனந்தராஜா கூறுகின்றார்.

பின்னர் ஏற்பாட்டாளர்களை பார்த்து, 'நீங்கள் முறைப்படி அவரிடம் என்ன செய்ய விரும்புகின்றீர்களோ, அதன் பிரகாரம் ஒரு காலக்கெடுவை கொடுத்து ஒரு விண்ணப்பத்தை எழுதிக்கொடுங்கள். அதற்கு அவரிடமிருந்து உங்களுக்கு தெளிவான ஒரு முடிவு தெரிவிக்கப்படாது விட்டால், நீங்கள் மறுபடியும் உங்கள் சட்டத்தரணிகள் ஊடாக ஒரு வழக்கை நீதிமன்றத்துக்கு கொண்டு வாருங்கள். நீதிமன்றம் அதற்கு ஒரு தீர்ப்பைச் சொல்லும்.' என்று கூறுகின்றார்.

**பகையிடம் ஏன் பணிவும் குனிவும்?**

இந்தநிலையில் சட்டத்தரணிகள், 'கிளிநொச்சி நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ள சந்திரன் பூங்கா காணியும் இவரது பிரதேசசபை ஆளுகைக்குள் தானே வருகின்றது. அங்கு இராணுவத்தினர் ஆக்கிரமித்து உட்புகுந்து யுத்தவெற்றிச்சின்னம் கட்டியுள்ளனர். நேற்று (05.01.2017 வியாழக்கிழமை அன்று) இவர் கனகபுரம் மாவீரர் துயிலுமில்லத்தில் நடந்துகொண்டது போல, சந்திரன் பூங்காவிலும் உள்நுழைந்து செயல்பட முடியுமா? இராணுவத்தினருக்கு எதிராக தனது அதிகாரத்தை காட்டுவாரா? சட்டத்தை பயன்படுத்துவாரா?' என்று, காரசாரமான கேள்விகளை கிளி. கரைச்சி பிரதேசசபையின் செயலாளர் கம்சநாதனை நோக்கி எழுப்பினர்.

'சரி சரி விடுங்கள். இதுபோன்ற அரசியல் ரீதியான பிரச்சினைகளை கதைச்சு, பிரச்சினையை மேலும் சிக்கலாக்க வேண்டாம். அறுவரையும், ஐம்பதாயிரம் ரூபாய் ஆள்பிணையில் செல்ல அனுமதிக்கின்றேன். இந்த வழக்கு அடுத்த மாதம் (20.02.2017 திங்கள் கிழமை அன்று) விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்படும்.' என்று கூறி, நண்பகல் 12.10 மணிக்கு விவாதத்தை முடிவுக்கு கொண்டு வந்தார் நீதிபதி ஆனந்தராஜா.

அடுத்து, நீதிமன்ற தீர்ப்பு என்னவாக இருக்கும்? என்பதே சகல தரப்புகளினதும் பெருத்த எதிர்பார்ப்பு ஆகும்.

# பிரபாகரன் இருக்கிறார்!



இன்போர்மர் இசக்கி

இந்த பெயரை கடந்து இலங்கை அரசியல் இன்னும் செல்லவில்லை. இப்போதைக்கு செல்லும் வாய்ப்புமில்லை. இலங்கை அரசியலின் நிலையே இப்படியென்றால், தமிழ் அரசியலின் நிலையை சொல்லித் தெரிய வேண்டியதில்லை. யுத்தத்தின் பின்னரான காலத்தில் தமிழ்தேசிய கூட்டமைப்பு அரசியல் தலைமையை ஏற்றாலும், அவர்கள் செய்வது பிரபாகரனின் அரசியல் தொடர்ச்சியையே. அதனை மீறி ஒரு அங்குலமும் நகர முடியாது யாராலும்.

தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவுடைய கட்சி என்ற உயரிய அந்தஸ்தை தமிழ்தேசிய கூட்டமைப்பு பெற்றுக்கொள்ள ஒரேயொரு காரணமாக அமைந்தது, புலிகள் ஆசீர்வதித்து ஆரம்பித்து வைத்ததே.

வடமாகாணசபை தேர்தல் பிரசார கூட்டம் வல்வெட்டித்துறையில் நடந்தது போது முதல்வர் வேட்பாளராக இருந்த விக்னேஸ்வரன், பிரபாகரனின் பெயரை உச்சரித்து கரகோசம் வாங்கியதில் தொடங்கி, இறுதியாக பட்டத்திருவிழாவில் அமைச்சர் டெனிஸ்வரன் பிரபாகரன் பற்றி பேசி, விண்ணதிர கரகோசம் வாங்கியது வரை இதற்கு உதாரணங்கள்.

சாதாரண மக்களிற்கு பிரபாகரன் என்ற பெயர் உற்சாக ரொனிக் என்பதில் இரண்டு கருத்திற்கு இடமில்லை. அதனால்தான் அரசியல்வாதிகள் அடிக்கடி அந்தப் பெயரை பாவிக்கிறார்கள். சமையலிற்கு பயன்படும் வாசனை மசாலா போல அந்த பெயரை புயன்படுத்துபவர்கள்தான் அனேகர்.

தமிழ்தேசிய கூட்டமைப்பாகட்டும், தமிழ் மக்களை அழிப்பதில் போட்டி போட்ட சுதந்திரக்கட்சி, ஐக்கியதேசியக்கட்சியாகட்டும் அந்த கட்சிகளின் தமிழ் பிரதிநிதிகள் எல்லோரது அரசியலிலும் தவிர்க்கமுடியாமல் பிரபாகரன் முக்கிய இடம்பிடித்துள்ளார். எதிர்கால தமிழ் அரசியுலின்ல் கண்ணுக்கெட்டிய தூரம் வரையும் பிரபாகரனை தவிர்த்து அரசியல் செய்ய வாய்ப்பில்லை. எல்லா பாவங்களையும் பிரபாகரனின் பெயரை பயன்படுத்தி கழுவிவிடலாமென்று சில அரசியல்வாதிகள் நினைப்பதுதான் துரதிஸ்டம்.

தமிழ் அரசியலில் தவிர்க்க முடியாத இடத்தை பிடித்துள்ள பிரபாகரனின் வாழ்வில் யாரெல்லாம் தவிர்க்க முடியாத இடத்தை பிடித்தவர்கள் என்பதை அறியும் ஆவல் உங்களிற்கு இருப்பலாம். சிறுவயதில் ஆயுதப்போராட்டத்தை ஆரம்பித்து, உலகமே திரும்பிப்பார்த்த நிழல் அரசை கட்டியெழுப்பிய அசகாதசூரனின் வாழ்வில் தவிர்க்க முடியாத இடத்தை பிடித்தவர்கள் பற்றிய சுவாரஸ்ய பட்டியல் இது.



அன்ரன் பாலசிங்கம் பிரபாகரன்



எம்.ஜி.ஆர் பிரபாகரன்

### பார்வதியம்மாள்

பிரபாகரனிற்கு சிறுவயதில் எல்லாமே தாயார்தான். தந்தையார் ஒரு கண்டிப்பான அரச உத்தியோகத்தர். எல்லாம் ஒழுங்குமுறைப்படி இருக்க வேண்டுமென்பதில் கண்டிப்பானவர். அதனால் வீட்டிலும் ஒரு கண்டிப்பான வாழ்க்கை

முறையைத்தான் கடைப்பிடித்தார். தாயார் வேறுவிதம். அதனால் பிரபாகரனிற்கு எல்லாமே தாயார்தான். சிறுவயதில் தாயாருடன் உட்கார்ந்திருந்த சமயத்தில்தான், இனக்கலவரத்தில் பாதிக்கப்பட்ட பெண் மணியை சந்தித்தார். அந்த சந்திப்புத்தான் பிரபாகரனின் மனதில் தீயை மூட்டியது. பின்னர், ஆயுதப்போராட்டத்தில் இறங்கி தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்தபோதும், அடிக்கடி இரகசியமாக வீட்டுக்கு வந்து, தாயாரின் கைப்பக்குவ சமையலை ஒரு பிடி பிடிப்பாராம். அவரது சிறுவயதிலேயே பிரபாகரன் என்ற பெயர் இலங்கையில் தேடப்படுபவர்கள் பட்டியலில் முதன்மை யானதாகி விட்டது. அவரது வீட்டை இராணுவமும், காவல்துறையும் கண்ணுக்குள் எண்ணெய் விட்டபடி கண்காணித்து கொண்டிருந்தன. அவர்களிற்கு டிமிக்கி விட்டு, தாயாரை பார்க்க அடிக்கடி சென்றுவிடுவார்.

பின்னர் பிரபாகரனை பிரிந்து இந்தியாவில் வாழ்ந்த சமயத்தில், பார்வதியம்மாள் நன்றாக உடைந்து போனார். தனது கையால் செய்யப் பட்ட பலகாரங்களை தொடர்பாளர்கள் ஊடாக பிரபாகரனிற்கு கொடுத்து விடுவாராம்!

சமாதான உடன்படிக்கை காலத்தில் வன்னிக்கு திரும்பினர் பார்வதியம்மாள் தம்பதியினர். பிரபாகரனை கண்டதும் பார்வதியம்மாள் என்ன கேட்டார் தெரியுமா?. வற்றாப்பளை அம்மன் ஆலயத்திற்கு தன்னை அழைத்து செல்மாறு. பிரபாகரன் பரம்பரைக்கு வற்றாப்பளை அம்மன் ஆலயத்தில் தீவிர பக்தியிருந்தது. பிறகென்ன, பெற்றோரை அழைத்துக்கொண்டு பிரபாகரன் வற்றாப்பளைக்கு சென்றார். தாயார் என்றால் பிரபாகரனிற்கு உயிர். ஆனால், அதை வெளிக்காட்டாமல்தான் பெரும்பாலும் இருந்தார்.

### தங்கத்துரை

வெலிக்கடை சிறைச்சாலையில் கொல்லப் பட்ட மூத்த ஆயுதப்போராளி. ரெலோ இயக்கத்தின் ஸ்தாபகர். பிரபாகரனின் முதலாவது போராட்ட குரு என்றும் சொல்ல லாம். 1972 முதலே மாணவர் பேரவையில் செயற்பட்ட தங்கத்துரை, தமிழீழ ஆயுத விடுதலைப்போராட்ட முன்னோடிகளில் ஒருவர். அவரது அர்ப்பணிப்பான செயற் பாடு பிரபாகரனை சுலபமாக ஈர்த்தது.

வீட்டை விட்டு புறப்பட்டு போராட்ட வாழ்வில் களமிறங்க பிரபாகரன் முடிவு செய்தபோது, முதலில் சென்றது தங்கத் துரையிடமே. அவரிடம்தான் ஆயுதங்களை கையாளும் பயிற்சியையும் பெற்றார். தங்கத்துரையின் வழிநடத்தலில்தான் பிரபாகரன் ஆரம்பத்தில் செயற்பட்டு, புடம் போடப்பட்டார். பின்னர் தனித்துவமாக செயற்பட ஆரம்பித்த பின்னரும், தங்கத் துரையில் உயரிய மதிப்பு வைத்திருந்தார். "தங்கண்ணா" என வாய்க்குவாய் கூப்பிட்டுக் கொண்டேயிருப்பார். தமிழீழ விடுதலைப் புலிகளை ஆரம்பித்த பின்னரும், சிறிதுகாலம் அதிலிருந்து ஒதுங்கி தங்கத்துரையின் கீழ் பிரபாகரன் செயற்பட்டார் என்றால், அவரில் வைத்திருந்த மதிப்பை புரிந்து கொள்ளலாம்.

தங்கத்துரை கைதாகி வெலிக்கடை சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சமயத் தில், தற்கொலை குண்டுதாரியாக தானே புகுந்து அவரை விடுவிக்க வேண்டுமென தயாரானாவர்.

### அன்ரன் பாலசிங்கம்

முற்றுமுழுதாக இராணுவ சிந்தனை கொண்டதாக அமைந்த புலிகள் இயக்கத்திற்கு அரசியல் முகவரி கொடுத்தவர் அன்ரன் பாலசிங்கம். "பாலா அண்ணா" சொன்னால் மறுபேச்சு இல்லாமல் பிரபாகரன் கேட்பார். ஒரு முக்கிய விடயம், பிரபாகரனிடம் சொல்லியே ஆகவேண்டும், ஆனால் அவர் என்ன நினைப்பாரோ என மற்றவர்கள் தயங்கினால்ஞ் உடனே பாலசிங்கத்தைதான் அணுகுவார்கள். எதையும் பிரபாகரனுடன் பேசும் தைரியமுள்ள ஒரே நபர் அவர்தான். பிரபாகரனின் அரசியல் குரு.

கண்டிக்க வேண்டிய இடத்தில் கண்டித்து, பேச வேண்டியவற்றை பேசி விடுவார். பிரபாகரனின் காதலை முதன்முதலாக பாலசிங்கத்திடம்தான் சொல்லியுள்ளார். புலிகள் அமைப்பிற்குள் திருமணம் செய்யக் கூடாதென்ற விதிமுறையிருந்தபோது, அதை மாற்றும் அவசியத்தை ஏனையவர்களிற்கு புரிய வைத்து, பிரபாகரன் திருமணத்தை சிக்கலில்லாமல் செய்து வைத்தவர்.

'ராஜ மார்த்தாண்டன்' என பிரபாகரனை செல்லமாக அழைப்பார் பாலசிங்கம். பாலசிங்கம் சொல்லும் எதையும் பிரபாகரன் கேட்பதற்கு காரணம் அவர் மீதான உயர்ந்த மரியாதை.

### எம்.ஜி.ஆர்

தமிழக முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆருக்கு பிரபாகரன் என்றால் உயிர். பிரபாகரனிற்கு எம்.ஜி.ஆர் என்றால் அவ்வளவு பிடித்தம். விடுதலைப்புலிகள் நிதி நெருக்கடியில் சிக்கியிருந்த சமயம். மற்றைய இயக்கங்களிற்கு இந்திய அரசு நிதியும், ஆயுதமும் கொடுத்தது. தமதுசொல்பேச்சைகேட்டுஇயங்கினால்தான் நிதி, ஆயுதம் கிடைக்குமென கண்டிப்பாக சொல்லிவிட்டார்கள். இந்தியாவின் சொல் கேட்டு நடப்பவர்களாக இருக்க முடியா தென்பதில் புலிகளும் உறுதியாக இருந்தனர். அப்போது புலிகளிற்கு கைகொடுத்தவர் எம்.ஜி.ஆர். என்ன தேவையென்றாலும் தயங்காமல் தன்னிடம் வரலாமென பிரபாகரனிற்கு வாசல்கதவை எப்போதும் திறந்து விட்டிருந்தவர்.



பார்வதியம்மாள்



தங்கத்துரையுடன் குட்டிமணி கைது செய்யப்பட்டு சிறைவைக்கப்பட்டபோது

### சொர்ணம்

விடுதலைப்புலிகளிடம் நிறைய தளபதிகள் இருந்தனர். ஆனால் அவர்கள் எல்லோரையும் விட சொர்ணத்திற்கு முக்கியத்துவம் உள்ளது. பிரபாகரனின் மிக நம்பிக்கைக்குரிய ஒருவர். நெருக்கடிகளான சமயங்களில் எல்லாம் பிரபாகரனுடன் துணை நின்றவர். அதனால்தான் சொர்ணத்தை தனக்கு பக்கத்திலேயே பிரபாகரன் வைத்திருந்தார்.

சிறுவயது முதல் பிரபாகரனின் மெய்பாது காவலராக இருந்தவர். அந்த பொறுப்பிலிருந்து விலகிய பின்னரும், மனக்குழப்பமாக சமயங் களில் சொர்ணத்தை அருகில் வைத்திருப்பார் பிரபாகரன். சொர்ணம் விரும்பிய பெண்ணை, பெண் கேட்டு திருமணம் முடித்து வைத்த வரும் பிரபாகரன்தான்.


சண்டைகளில் சில சமயங்களில் சொர்ணம் சறுக்கினால் அவர் பதவி இறக்கப்பட்டார். ஆனால் பிரபாகரனின் மனதிலிருந்து இறக்கப்பட்டதேயில்லை. பிரபாகரன் அவரை எவ்வளவிற்கு நம்பினார் என்பதற்கு ஒரு உதாரணம் மாத்தையா சதி தகவல் தெரிந்ததும், அவரை கைது செய்ய சொர்ணமே அனுப்பப்பட்டார். கிழக்கில் கருணா சதியின்போது திருகோணமலை

**சிறுவயதில் தாயாருடன் உட்கார்ந்திருந்த சமயத்தில்தான், இனக்கலவரத்தில் பாதிக்கப்பட்ட பெண்மணியை சந்தித்தார். அந்த சந்திப்புத்தான் பிரபாகரனின் மனதில் தீயை மூட்டியது. பின்னர், ஆயுதப்போராட்டத்தில் இறங்கி தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்தபோதும், அடிக்கடி இரகசியமாக வீட்டுக்கு வந்து, தாயாரின் கைப்பக்குவ சமையலை ஒரு பிடி பிடிப்பாராம்.**

மாவட்ட தளபதி பதுமனை கைது செய்யவும் சொர்ணமே அனுப்பப்பட்டார்.

### பாலசந்திரன்

பிரபாகரனின் அத்தனை சுகதுக்கங்களிலும் பின்னால் நின்று, அவரது பயணத்திற்கு துணையாக நின்ற மனைவி மதிவதனிக்கு இதில் தனியிடம் உள்ளது. அதனை தனியாக குறிப்பிட வேண்டிய அவசியம் கிடையாது. இந்த பட்டியலில் அவர்தான் முதலாவதாக வருவார். இது உலகத்திற்கே தெரிந்த இரகசியம் என்பதால் அவரை தனியாக பட்டியலில் இணைக்கவில்லை. இதில் இணைக்கப்படுபவர் பிரபாகரன் தம்பதியின் இளைய மகன் பாலசந்திரன். சாள்ஸ் அன்ரனி, துவாரகா ஆகிய மற்றைய பிள்ளைகளை விட, பாலசந்திரனில் பிரபாகரனின் இயல்புகள் அதிகமுள்ளதாக அவர்களிற்கு நெருக்கமானவர்கள் அடிக்கடி சொல்வார்கள். சிறிய வயதிலேயே அதீதமாக சிந்திக்கும் திறனுள்ள பாலச்சந்திரனில் பிரபாகரனிற்கும் அலாதி பிரியம். பாலசந்திரன் நிச்சயம் எல்லோரும் திரும்பிப்பார்க்கும் ஒருவனாவார் என்பதில் பிரபாகரனிற்கும் நம்பிக்கையிருந்தது. எந்த பெரிய விடயத்தையும் கற்றுக்கொள்ளும் வேகம், பிரச்சனைகளை அணுகும் விதம் என சிறிய வயதிலேயே பெரிய மனிதராக அவர் இருந்தார். இது பிரபாகரனிற்கு பிடித்துவிட, பாலசந்திரனை எப்போதும் தன்னுடன் வைத்துக் கொண்டார். மற்றைய இரண்டு பிள்ளைகளை விட பிரபாகரனின் சாயல் பாலசந்திரனில்தான் அதிகமாக இருந்தது. குழந்தையாக இருந்ததிலிருந்து பாலசந்திரனுக்கு ஒன்றென்றால் பிரபாகரன் துடித்துப் போய் விடுவாராம். தனது இறுதி கட்டம்வரை பாலசந்திரனை பிரபாகரன் கூடவே வைத்துக்கொண்டிருந்திருக்கிறார்!



சொர்ணம்



பாலசந்திரன்

# ஆயிரம் சூரியன் ஆயிரம் சந்திரன் ஒரே ஒரு பூமி

ம. செந்தமிழன்



உடலுக்கும் புறச் சூழலுக்குமான உறவை அறிந்து கொள்ளும்போது, வாழ்வின் மறை பொருட்கள் விடுபடுகின்றன. அண்டத்துக்கும் நம் உடலாகிய பிண்டத்துக்குமான பிணைப்பில்தான் இறை எனும் மூலம் மறைந்துள்ளது. இறை உணர்தல் என்பது பயிற்சிகளாலும் முயற்சிகளாலும் கிடைக்கும் பரிசு அல்ல. முயற்சிகளும் பயிற்சிகளும் இல்லாத ஒப்படைப்பின்போது மட்டுமே பெறக் கூடிய வரம். உடலைப் புரிந்து கொண்டால் உலகைப் புரிந்த கொள்ளலாம். ஐம்பூதங்கள் உலகின் உட்பொருட்களாக இருப்பது போலவே, உடலுக்கும் உட்பொருளாக உள்ளன.

புறச் சூழலுக்கும் உடலின் செயல்பாடுகளுக்குமான உறவுகளை அனுபவத்தில் அறிந்து கொள்ளுதல், இந்தப் பயணத்தின் இனிய தொடக்கம்.

வெயிலில் காய்ந்தால், உடல் வியர்க்கின்றது; குளிரில் தோய்ந்தால் உடல் வெப்பம் அடைகின்றது காற்று மிக அதிகமாக வீசும் இடத்தில் நின்றால், மூச்சு முட்டுகின்றது மிகக் குறைவான காற்றழுத்ததில் இருக்கையில் மூச்சு படபடத்து இயங்குகின்றது. புறத்தில் ஐம்பூதங்கள் எவ்வாறு செயல்படுகின்றனவோ, அதற்கு நேர்மாறான முறையில் அகத்தின் பூதங்கள் தம்மை வெளிப்படுத்துகின்றன. அகத்துக்கும் புறத்துக்குமான இந்த உறவில் முரண்பாடுகள் மோதிக் கொள்ளவில்லை. அவை எல்லாம் ஒத்திசைந்து இயங்குகின்றன. வெயிலில் வியர்வை என்ற நீர்மம் சுரக்காமல் போனால், உடல் வறண்டு சுருண்டு விழ நேரிடும். இங்கே புறத்தின் வெப்பமும் அகத்தின் நீர்மமும் பின்னிப் பிணைந்து கொள்கின்றன. நீரும் நெருப்பும் கூடிக் களிக்கின்றன. இந்த இணைவுதான் பூதங்களின் புணர்ச்சி. மாறாக, புறச்சூழலும் அகச்சூழலும் ஒரே நேர் கோட்டில் இருந்தால், மரணம்தான் விளைவாகும்.

**உடலில் குளிர்ச்சி மிகுந்து விட்டால், புறத்தில் இருந்து வெப்பம் வழங்கப்பட வேண்டும். கபம் மிகுந்த உடலுக்கு காரைச் சுவை உணவில் தேவை. காரத்தின் வெப்பம் தான் உள்ளிருக்கும் கபத்தை உருக்கி அல்லது உடைத்து வெளியேற்றும்.**

அண்டம் எப்படி இயங்குகின்தோ, அதற்கு ஒத்திசைவாகப் பிண்டம் இயங்கும். இது இயற்கையான விதி. வெளியில் இருந்த உள்ளே நுழையும் எல்லாப் பொருட்களுடனும் உடல் இவ்வாறுதான் உறவாடுகிறது. புறத்தில் இருந்த வரும் பொருளின் தன்மை என்ன எனப் பார்த்து, அதற்கு ஏற்ற வகையில் தனக்குள்ளே இருக்கும் பொருட்களை வெளிப்படுத்துவது உடல் இயக்கத்தின் அடிப்படை.

காரம் எனும் சுவை, ஐம்பூதங்களில் வெப்பத்தின் வடிவம். காரைச் சுவையை உண்ணும் போது, உடலின் நீர்ச் சுரப்பிகள் விரைந்து செயலாற்றி கண்ணீர், வியர்வை, உமிழ்நீர், நாசி நீர் உள்ளிட்ட வடிவங்களில் உடலைக் குளிர்விக்கின்றன. மிளகு ஒரு சிறு அணுகுண்டு என்பது என் கருத்து. அவ்வளவு செறிவான வெப்ப ஆற்றலை தன்னுள் பொதித்துள்ளது மிளகு. அதைக் கடிக்கும் போதே நாவில் வெப்பத்தை உணர முடியும். மிளகு உடலின் உள்ளே சென்றதும், உடல் முழுவதும் வெப்பம் பரவும். இந்த வெப்பம் உடலில் தேங்கியுள்ள கழிவு நீர்மங்களை வெளியேற்றுகிறது. கபம் என்கின்ற நீர் மண்டலத் தொல்லைகள் அனைத்துக்கும், மிளகு முதன்மையான மருத்துவ உணவாக இருப்பது இதனால்தான்.

சளி, கோழை ஆகிய இரண்டும் நீர்மக் கழிவுகள். இவற்றை வெளியேற்ற வெப்பம் தேவை. உடலில் வெப்பம் உருவானால் தான் நீர்மம் வெளியேறும். வெப்பம் குறைந்த உடலின் உள்ளே இருக்கும் நீர்மக் கழிவுகள், உறைந்த நிலையில் கட்டிகள் போல தேங்கும். நீண்ட நாட்களாக தேங்கிய சளி, கெட்டித் தன்மையுடன் வெளியேறுவதைப் பார்க்கின்றோம். வெளியேற்றப்படாமல் தேங்கியிருந்த கோழை அடர்த்தியாக இருக்கின்றது. பித்தம் வாந்தியாக வந்தால், நீர்த் தன்மையுடன் இருக்கின்றது. ஏனெனில், பித்தம் வெப்பத்தின் விளைவு. கோழை குளிர்ச்சியின் விளைவு.

உடலில் குளிர்ச்சி மிகுந்து விட்டால், புறத்தில் இருந்து வெப்பம் வழங்கப்பட வேண்டும். கபம் மிகுந்த உடலுக்கு காரைச் சவை உணவில் தேவை. காரத்தின் வெப்பம் தான் உள்ளிருக்கும் கபத்தை உருக்கி அல்லது உடைத்து வெளியேற்றும். மிளகையும் சீரகத்தையும் வறுத்து, அவை வறுக்கப்படும் போதே பனைவெல்லம் சேர்த்து, பின்னர் நீர் விட்டு காய்ச்சி இறக்கினால், அது மிளகுக் கசாயம். சளிக் கழிவுகளை வெளியேற்றவதற்கு, நம் சமூகத்தில் நீண்ட காலமாகக் காய்ச்சப்படும் கசாயம் இது. மிகச் சிறப்பான நல் விளைவுகளைத் தருகின்றது இந்த மருத்துவ உணவு. இதை ஏன் மருந்து உணவு என்றேன் என்றால், இந்தக் கசாயத்தின் எல்லா உட் பொருட்களும் உணவுப் பொருட்கள் தான்.

மிளகுக் கசாயத்தில் உள்ள மிளகு... வெப்பத்தையம், சீரகம்... வெப்பம், நீர், காற்று ஆகிய மூன்றையும் கொண்டுள்ளன. மிளகையும் சீரகத்தையும் வறுக்கும் போது, இவற்றில் உள்ள நீர்த் தன்மை வற்றிப் போகின்றது. நீர்த் தன்மை வற்றினால், வெப்பம் மிகுந்து விடும் அல்லவா? அந்த மிகுதியான வெப்பம் தான் இப்போது மருந்து. இதனால் தான் சில மருந்து உணவுகளில் வறுத்தல் எனும் செயல் முறை உள்ளது. மிளகு, சீரகம் ஆகிய இரு பொருட்களும் நீர் வற்றிய நிலையில், தங்கள் குணங்களையும் இழக்காமல் இருக்க வேண்டும். அதனால் தான், 'கருகாமல் வறுக்க வேண்டும்' என்ற வழக்கம் உள்ளது. கருகிய பொருட்களில் வெப்பமும் குறைவாகத்தான் இருக்கும். இந்தப் பொருட்களின் உயிர் ஆற்றல் அழிந்துவிடும்.

மிளகு, சீரகம் வறுக்கம்படும் போதே அவற்றோடு பனைவெல்லத்தைச் சேர்ப்பது மிக முக்கியச் செயல் முறை. பனை வெல்லத்தைச் சேர்த்ததும், அது உருகி மிளகு, சீரகத்தைப் பற்றிக் கொள்ளும். உடனடியாக நீர் ஊற்றிக் காய்ச்ச வேண்டும். உருகிய பனை வெல்லம் தனக்குள் இரக்கும் வெப்பத்தை எளிதில் விட்டுக் கொடுக்காது. வெல்லப் பர்கு காய்ச்சுவதைக் கண்டவர்களுக்கு இது நன்றாகப் புரியும். கொதிக்கும் நீர் உடலில் பட்டால் உருவாகும் புண்கள் ஆழமானவை. மிளகு, சீரகத்தின் வெப்பத்தை தக்கவைப்பது, இனிப்புச் சுவை தருவது, பனையின் நோய் எதிர்ப்பு ஆற்றலைக் கடத்துவது... ஆகிய பணிகள் இந்தக் கசாயத்தில் நடக்கின்றன.

இதே கசாயத்தில் துளசி இலைகள், கற்பூர

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

உங்கள் சந்தேகங்களை கேளுங்கள்
பதிலளிக்கிறார்
**கு.நக்கீரன்**
உளவள ஆலோசகர்


# மனமே நலமா?



கே.சைலினி
உரும்பிராய்

**கேள்வி:** நான் ஒருபெண். வயது 21. என் சம வயதுடைய ஒருவரை ஒரு வருடமாகக் காதலிக்கிறேன். அவரும் என் மேல் மிகவும் அன்பாக இருந்தார். சில நாட்களாக அவருடைய நடவடிக்கைகளில் மாற்றம் தென்படுகின்றது. என்னுடன் பேசுவதை, பழகுவதைத் தவிர்க்க முயல்கின்றார். வேறு பெண்களுடன் அவருக்குத் தொடர்பு உண்டா என்று சந்தேகமாக இருக்கின்றது. இதைப் பற்றி அவரிடம் கேட்கவும் பயமாய் இருக்கின்றது. மிகவும் குழம்பிப் போயிருக்கின்றேன். நான் என்னசெய்வது?

**பதில்:** இந்த வயதில் இது வழமையான பிரச்சினைதான். எந்தவொரு தாக்கத்திற்கும் மறு தாக்கம் உண்டு என்பதுபோல் உங்களுடைய சில நடவடிக்கைகள் அவரைப் பாதித்திருக்கலாம். அதாவது உங்களுடைய புதிய போன் தொடர்புகள் மற்றும் நட்புக்கள் என்பன அவரைப் பாதித்திருக்க வாய்ப்புண்டு. உங்களைப் பொறுத்தவரை அவை சரியானதாக இருந்தாலும் அவர் அதை ஏற்றுக்கொள்ள முடியாதவராக இருக்கலாம்.



நீங்கள் அவரை விட்டு விலகவிரும்புவதாக நினைத்து அவரே விலகியிருக்கலாம். நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் பயத்தை விட்டுவிட்டு அவரிடம் சென்று காரணத்தை விசாரியுங்கள். உங்களில் தவறெனில் திருத்திக் கொள்ள முயலுங்கள். இல்லையெனில் அவரைக் கட்டாயப்படுத்த வேண்டாம். இந்த வயதில் வரும் பெரும்பாலான காதல்கள் பக்குவப்பட்டவை அல்ல.

சி.ஜீவகாருண்யம்
பூந்தோட்டம், வவுனியா.

**கேள்வி: எனது மகளின் உயர்தரப் பரீட்சை முடிவுகள் அண்மையில் வெளிவந்தன. நன்றாகப் படித்தும் அவர் எதிர்பார்த்த அளவுக்கு இல்லாமல் மிகவும் குறைவான பெறுபேறுகளே கிடைத்தது. இதனால் அவர் மிகவும் மனமுடைந்து விட்டார். இப்போதெல்லாம் தனியாகவே இருக்கின்றார். வீட்டில் யாருடனும் பேசுவதில்லை. நண்பர்களிடமும் செல்வதில்லை. எல்லோரிடமும் எரிந்து விழுகின்றார். அவரை எப்படிக் கையாள்வது என்று தெரியவில்லை. எனக்கு மிகவும் பயமாக இருக்கின்றது. நான் என்ன செய்வது?**

**பதில்:** இது சாதாரணம்தான். எதிர்பார்ப்புக்கள் அதிகமாக இருந்தால் ஏமாற்றங்களும் அதிகமாகத் தான் இருக்கும். அத்தகைய சந்தர்ப்பங்களில் விரக்தி ஏற்படுவது சகஜமே. இவ்வேளைகளில் அருகிலிருப்பவர்களே சிறந்த ஆறதலை வழங்கவேண்டும். இந்த சிறுதோல்வியால் உனது தனித்துவம் இழக்கப்படப் போவதில்லை என்பதை அவருக்கு புரியவையுங்கள். அதற்காக உட்கார வைத்து ஒரேயடியாக அறிவுரை வழங்கிவிட வேண்டாம். (அது அவருக்கு இன்னும் கோபத்தையும், அவமானத்தையுமே ஏற்படுத்தும்). சின்னசின்ன பேச்சுக்களின் மூலமும், செயற்பாடுகளின் மூலமும் புரியவைத்தால் போதுமானது. அத்துடன் அவரது நல்ல, நெருங்கிய நண்பரை அழைத்து அவருடன் பேச வையுங்கள். அது அவரது வெறுமையுணர்வுக்கான சிறந்த பிரதியீடாக அமையும். தோல்வியை எதிர்கொள்ளும் திறனையும் அவருக்கு வழங்கும். மொத்தத்தில் "Wealways be withyou" அதாவது நாங்கள் உனக்காக எப்போதும் இருக்கின்றோம் என்பதை அவருக்கு அடிக்கடி வெளிப்படுத்துவதே நீங்கள் அவருக்குத் தரக் கூடிய மிகப்பெரிய ஆறுதலாகும்.

சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் உங்கள் மனதை அரித்துக் கொண்டிருக்கும் பிரச்சனைகள் உள்ளதா? உடனே எமக்கு எழுதி அனுப்புங்கள். மனநல நிபுணர்கள் உங்கள் பிரச்சனைகளிற்கான தீர்வை தர தயாராக இருக்கிறார்கள்.

**மனமே நலமா?**

தீபம் வாரஇதழ்,
197, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.

---

வல்லி (ஓமவல்லி) இலைகளைச் சேர்க்கும் வழக்கமும் உள்ளது.

ஏற்கனவே கபம் கட்டிய உடலுக்குள் இந்தக் கசாயம் நுழையும் போது, உடலின் ஐம்பூதச் செயற்பாடு நல்லிணக்கம் கொண்டதாக மாறுகின்றது. ஏனெனில் வெளியில் இருந்து வெப்பம் வந்தால், நீர்த் தன்மையை வெளிப்படுத்த வேண்டும் என்பது உடலுக்கும் புறத்துக்குமான உறவு. அந்த அடிப்படையில் இந்த வகையான கசாயங்கள் சளியை, கோழையை உடனடியாக வெளியேற்றத் தொடங்குகின்றன.

அதனால் தான் கபம் அதிகமாக உள்ளவர்களை ரசம் அருந்தச் சொல்லும் மரபுப் பழக்கம் நம்மிடம் இருக்கின்றது. வயல் நண்டுகளை இடித்து ரசம் வைத்தல், தக்காளி ரசம் வைத்தல் ஆகியவை கபம் வெளியேற்றத்துக்காக் கடைப்பிடிக்கப்படும் முதன்மையான மருந்து உணவுப் பழக்கங்கள். ரசம் எனும் உணவே முழுக்க முழுக்க மருந்து தான். மிளகு, சீரகம், பூண்டு ஆகிய மூன்றையும் இடித்து நீரில் காய்ச்சினால், அது வேறு என்னவாக இருக்க முடியும். இந்த 5ன்ற பொருட்களுடனும் தக்காளி, ஏதேனும் காய்கறி, கீரை அல்லது புலால் பொருள் இணைந்தால், அத மருத்துவ குணங்களைப் பெற்றதாகி விடுகின்றது.

பூண்டு காரைச் சுவை உடையது. பூண்டின் சிறப்பு என்னவெனில், நீரும் வெப்பமும் கலந்த நிலையை நீணட காலத்துக்குத் தக்கவைக்கும் பொருள் அது. வெங்காயத்தில் நீரும் வெப்பமும் இணைந்துள்ளன. ஆனால் அதைப் பறித்த வைத்தால் சில வாரங்களில் நீர் வற்றி விதையாகிவிடும். பூண்டு மாதக் கணக்கில் நீர்த் தன்மையை சிறிதளவு தக்க வைக்கும். காரச் சுவையை முதன்மையாகக் கொண்டுள்ள பூண்டு நீர்த் தன்மையுடனும் இருப்பதால். அது மிகச் சரியான செரிமான ஆற்றலை வழங்க நல்லது.

மிளகு, சீரகம், பூண்டு ஆகிய மூன்றும் மும்மணிகள். இவற்றை முறையாகப் பயன்படுத்த தெரிந்தவர்களுக்கு வேறு உணவு மருந்துகளே தேவை இல்லை என்பது என் கருத்து.

ரசம் அருந்தம் போது உடலின் வெப்ப ஆற்றல் தூண்டப்பட்டு சளி, கோழைக் கழிவுகள் வெளியேறுகின்றன. கூடுதலாக உடலுக்குத் தேவையான இயக்க ஆற்றல் வெகுவாகக் கிடைப்பதற்கும் ரசம் துணை செய்கின்றது. எந்தப் பொருளை இட்டு ரசம் வைக்கப்படுகின்றதோ அந்தப் பொருளின் சாரம் ரசத்தில் இறங்கிவிடுகின்றது. முருங்கைக் கீரை ரசம் மிகச் சிறந்தது என்பது என் அனுபவக் கருத்து. குறிப்பாக, கபத் தொல்லை மிகுதியாக உள்ளோர் அன்றாடம் மாலையில் முருங்கைக் கீரை ரசம் பருகினால், கபம் வெளியேறுவதோடு, உடலுக்கான ஆற்றல் மேம்படுகின்றது,

சளி வெளியேற்றத்துக்கான நம் மரபு மூலிகைகளைப் பாருங்கள். குப்பை மேனி, துளசி, கற்பூரவல்லி, தூதுவளை, முள்முருங்கை (கல்யாண முருங்கை) ஆகியவற்றை முதன்மைப் பட்டியலில் வைக்கலாம். இவை அனைத்துமே காரச் சுவை கொண்டவை. குப்பை மேனி, தூதுவளை ஆகியவை கசப்பும் காரமும் கலந்தவை. துளசி, கற்பூரவல்லி, முள் முருங்கை ஆகியவை காரச் சுவை மிகுந்தவை.

அதிகளவில் காரம் உண்போரின் உடல் நீர்த் தன்மை குறைந்து வற்றுகின்றது, காரம் குறைவாக உண்போருக்கு கபம் சேர்கின்றது. சீரான அளவில் காரம் சேர்ப்பது. சிறந்த உணவுப் பழக்கம். உடல் உழைப்பில் ஈடுபடுவோர் சற்றுக் கூடுதலாகக் காரம் உண்பதைக் கண்டிருப்பீர்கள். கூழுக்கும் கஞ்சிக்கும் வெங்காயத்தை, மிளகாயை, மிளகாய் வற்றலைக் கடிக்கம் வழக்கம் நம் கிராமங்களில் இருந்தது. வெப்பம் தான் இயக்க ஆற்றலைத் தரும். உடல் இயக்கம் சீராக இருக்க, வெப்பத்தின் அளவு குறையாதிருக்க வேண்டும். வெப்பம் குறைந்தால் உடல் இயக்கம் தேங்குகின்றது.

இனிப்புச் சுவையை மட்டுமே கூடுதலாக உட் கொள்ளும் போக்கு இப்போது பெருகிவிட்டது. பெரும்பாலான திண்பண்டங்கள் இனிப்புச் சுவையுடன் இருக்கின்றன. அரிசி எனும் தானியமே இனிப்புச் சுவை கொண்டது தான். அரிசியில் சமைத்த சோற்றையும் பிற உணவுகளையும் அதிக அளவில் உட் கொள்ளும் நம் சமூகம், துணை உணவுகளில் காரம் சேர்ப்பதைப் பற்றி அக்கறை கொள்ள வேண்டும். சமையலில் அதிகமான காரச் சுவையைச் சேர்ப்பதைப் பற்றி நான் குறிப்பிடவில்லை. காரச் சுவை கொண்ட பல்வேறு உணவுப் பொருட்களை, உணவுப் பட்டியலில் இணைப்பதைக் கூறுகின்றுறேன். மிளகு, வெங்காயம், சீரகம் ஆகிய மூன்றையும் அன்றாட உணவுகளில் சீராகப் பயன்படுத்துவது நல்ல மாற்றம் தரும். மாலை வேளைகளில் ஏதேனும் ஒரு ரசம் பருகுவது பல நன்மைகளைத் தரும்.

இப்போதைய சிறுவர்களுக்குக் காரச் சுவையை முறையாக அறிமுகம் செய்ய வேண்டியள்ளது. அவர்களது உணவு உலகத்தில், இனிப்புத்ததான் அதிக்கம் செலுத்துகின்றது. இத தீய விளைவுகளைத் உருவாக்கத்தக்க பழக்கம். துவையல் வகைகளில் காரத் துவையல்களை அதிகப்படுத்தலாம். பூண்டுத் துவையல், மிளகாய் வற்றல் துவையல், வெங்காயத் துவையல் ஆகியவற்றை அவ்வப் போது இணைத்துக் கொள்ளலாம். எப்போதுமே தேங்காய்த் துவையலை உண்ணம் பழக்கத்தைத் தான் பார்க்க முடிகின்றது.

"காரம் தான் நல்லது" என்ற ஒற்றை வாசகத்துக்கான செய்திகளாக இவற்றை மாற்றிவிடாமல், புரிந்து கொண்டு செயலாற்றுங்கள். உணவில் வெப்பம் எனும் பூதத்தை இணைப்பது, உடலில் நீர் எனும் பூதத்தின் நன்மைகளை உறுதி செய்யும். இந்த முரண்பாட்டு ஒத்திசைவைப் புரிந்து கொள்வோருக்கு கபம் பெரிது அல்ல.

வறண்ட பாலைகளில் முளைக்கும் கள்ளிச் செடிகள் செழிப்பான நீர்த் தன்மையைக் கொண்டிருக்கின்றன. எப்போதும் பனிப் பொழியும் மலைக் காடுகளின் இலைகள் ஊசி வடிவில் நீர் குறைந்த உயர்கின்றன. அண்டம் எந்தப் பூதத்தை முன் வைக்கின்றதோ, அதற்க எதிரான பூதத்தை வெளிப்படுத்துவது படைப்பின் குணம். ஆணும் பெண்ணும் கூடுதல் எவ்வளவு அழகானதோ அதைப் போல, நீரும் வெப்பமும் கூடுதல் இயல்பானது.



# நுளம்புக் கடி - தப்பிக்க இயற்கை வழி

நுளம்பு மாதிரி இருந்திட்டு எவ்ளோ பெரிய வேலை செய்யுறான் பாரு' என்று இனிக் கிண்டலுக்குக்கூடச் சொல்ல முடியாது. காரணம் சமீபகாலமாகச் சிறிய நுளம்புகள் மிகப் பெரிய வேலையையும் திறம்படச் செய்துகொண்டிருக்கின்றன. சாதாரணக் காய்ச்சல் தொடங்கி டெங்கு, ஜிகா வரை உண்டாக்கும் மிகப் பெரிய காரணியாகச் சின்னஞ்சிறு நுளம்பு உருமாறி இருக்கிறது. சில மாதங்களுக்கு மட்டும் தலை காட்டாமல் ஓய்வெடுத்து விட்டு, பெரும்பாலான மாதங்களில் ஊரெங்கும் நுளம்புகள் ஒயிலாக வந்து கொண்டிருக்கின்றன.

நுளம்புகளை அழிக்கக் நுளம்புவர்த்திச் சுருள், லிக்விடேட்டர் போன்றவற்றை அதிக ளவில் பயன்படுத்தும்போது, அவற்றிலுள்ள வேதியியல் பொருட்கள் காரணமாகத் தலைவலி, நுரையீரல் தொந்தரவுகள் உருவாகுவதற்கு அதிகச் சாத்தியம் உண்டு. இன்னும் சில வீடுகளில் எலி, கரப்பான் பூச்சிகளைக் கொல்லப் பயன்படுத்தும் தெளிப்பான்களை, நுளம்புகளை அழிக்க வீடு முழுவதும் தெளிக்கும் 'புத்திசாலித்தனம்' உயிரைப் பறிக்கும் அளவுக்கும் கொண்டு செல்லலாம். சரி, நுளம்புக்கடியிலிருந்து தப்பிக்க இயற்கை அமைத்துக் கொடுத்த வழிமுறைகள் என்ன?

### வாசனை குளியல்

குளிக்கும்போது, நீரில் வாசனை அதிகம் தரும் கற்பூரவல்லி, கறிவேப்பிலை, துளசி, செம்பருத்தி இதழ்கள், எலுமிச்சை இலைகள், உலர்ந்த நெல்லி போன்றவற்றைக் கலந்து குளிக்கலாம். புதினா, திருநீற்றுப் பச்சிலையைக் கசக்கி உடலில் தேய்த்த பின்னர் குளிக்கலாம். 'நலங்கு மாவு' போன்ற மணம்மிக்க இயற்கை குளியல் பொடிகளைப் பயன்படுத்துவதும் சிறந்தது. இயற்கையாக உடலில் வாசனை கமழும்போது நுளம்புகள் கடிப்பதற்குத் தயக்கம் காட்டுவதாக ஆய்வுகள் கூறுகின்றன. காலை, மாலை என இருவேளை நீராடி, உடலைச் சுத்தமாக வைத்துக்கொள்வதும் நல்லது.

### மூலிகை புகை

வீட்டுக்கு முன் வேப்பிலை, நொச்சி, மாவிலை, மா மரத்தின் பூக்களைக் கொண்டு புகை போடலாம். கிராமங்களில் பின்பற்றப் படும் இந்த முறை மனிதர்களோடு சேர்த்து, கால்நடைகளையும் நுளம்புக்கடியிலிருந்து காப்பாற்றும். மாலை வேளையில் வீட்டு அறைகளில் சாம்பிராணியோடு உலர்ந்த வேப்பிலை, நொச்சி இலை, குப்பைமேனி இலைகளைக் கொண்டு சிறிது நேரம் புகை காட்டலாம். அந்தக் காலத்தில் அரண்மனை விருந்தினர்களை வரவேற்க, அகில்கட்டை புகைதான் முதல் தேர்வு. வாய்ப்பு இருந்தால் அகில்கட்டை புகையூட்டி, வீடுகளைத் தூய்மைப்படுத்தலாம்.

வசம்பு சுட்ட கரி, தர்ப்பைப்புல், எலுமிச்சை புல், மா இலை / பூ, வேப்பிலை, நொச்சி, தேங்காய் சிரட்டை போன்றவற்றை ஒன்றாகக் கலந்து புகை போடலாம் அல்லது இவற்றை நீர்விட்டு அரைத்து வில்லைகளாக வைத்துக்கொண்டும் புகை போடலாம்.

வியர்வை நாற்றத்தைத் தவிர்க்க வேதியியல் கலவை நிறைந்த வாசனை திரவியங்களுக்குப் பதிலாக, சந்தனக்கலவையைப் பயன்படுத்துவது சிறந்தது. கற்பூரம், எலுமிச்சை சாற்றைநீரில்கலந்து அறைகளில்தெளிக்கலாம். சித்த மருந்தான கற்பூராதி எண்ணெயை லேசாக உடலில் தடவிக்கொண்டால், நுளம்புக்கடியின் தாக்குதலில் இருந்து தப்பிக்கலாம். காடுகளில் வாழும் மக்கள், நுளம்புக்கடி மற்றும் பாம்பு கடியிலிருந்து தப்பிக்க வேப்பெண்ணெயைத் தங்கள் உடலில் தடவிக்கொள்வது குறிப்பிடத்தக்கது.

### நுளம்பு கடித்துவிட்டால்...

வீட்டைச் சுற்றிச் சுகாதாரமான சூழலை உண்டாக்குவது, தேவையற்ற இடங்களில் நீர் தேங்குவதைத் தவிர்ப்பதன் மூலம் நுளம்பு உற்பத்தியைக் கட்டுப்படுத்தலாம். நுளம்பு வலை அமைப்பதும் பாதுகாப்பான உத்தி.நுளம்பு கடித்த பின் உண்டாகும் அரிப்புக்கு அருகன் தைலம், குங்கிலிய வெண்ணெய், தேங்காய் எண்ணெய் ஆகியவற்றைத் தடவலாம். குறிப்பாக நீரிழிவு நோயாளிகளுக்குப் புண் ஏற்படாமல் இருக்க இந்த முறை நிச்சயம் உதவும்.

### நுளம்பு விரட்டும் தும்பிகள்

தும்பிகளும் பறவைகளும் நம்மருகே வாழ்வதற்கான சூழல் இருந்தபோது, நுளம்புக் கூட்டம் நம்மைச் சுற்றி ஆதிக்கம் செலுத்தவில்லை. ஏனென்றால், தும்பிகளுக்கும், சில பறவைகளுக்கும் முக்கிய உணவே நுளம்புதான். நுளம்புகளின் எண்ணிக்கை உச்சத்தைத் தொட்டதற்கு நம் சுற்றுச்சூழல் சீரழிக்கப் பட்டதும் முக்கியக் காரணம். இனிமேலாவது, இயற்கையாக நுளம்புகளை விரட்டும் நுளம்பு விரட்டி மூலிகைகளைப் பயன்படுத்தி நுளம்புகளின் ஆதிக்கத்தைத் தடுப்போம்!

---

நிலவன்



# திரைப் பார்வை
# இந்தியன்

தமிழ் சினிமா ரசிகர்களைப் பொறுத்தவரைக்கும் மசாலாப் படங்களுக்கென்று அவர்களிடத்தில் தனி வரவேற்பு எப்போதுமே உண்டு. சரியான முறையில், சரியான விடயங்களை ஒரு மசாலாப் படத்திற்கான அத்தனை அம்சங்களையும் உள்ளடக்கிய விதத்தில் சிறப்பாக வழங்குவதற்கு சில இயக்குநர்களால் மட்டுமே முடிந்திருக்கின்றது. இயக்குநர் சங்கர் அந்த வகைப்பட்டவர்தான். சொல்லவந்த விடயம் சிறிதாக இருந்தாலும் அதை சுவாரஸ்யமான விடயங்களுடன் தொய்வில்லாமல் சொல்வதாலேயே சங்கரையும் அவரது படங்களையும் எல்லோருக்கும் பிடித்துப் போகின்றது. 1996இல் அவரது இயக்கத்தில் வெளிவந்த 'இந்தியன்' திரைப்படமும் இதேபோல் தான் எல்லோரையும் கவர்ந்தது.

கமல்ஹாசன் இரட்டைவேடத்தில் நடித்துப் பெரிதும் வெற்றிபெற்ற திரைப்படங்களுள் ஒன்றுதான் இந்த இந்தியன். கமல்ஹாசனின் ஏனைய படங்களைப் போல் இந்தப் படத்திலும் கமல்ஹாசனே கோலோச்சியிருந்தார். மனீஸா கொய்ராலா, ஊர்மிளா, நாசர், சுகன்யா, கவுண்டமணி, செந்தில், மனோரமா போன்றோரும் படத்தில் உடன் நடித்திருந்தனர். ஏ.எம் ரத்னம் தயாரிப்பில் உருவான இத் திரைப்படத்தை ஸ்ரீ சூர்யா மூவிஸ் வெளியிட்டது. இத் திரைப்படம் 1995ம் ஆண்டில் வெளியான பாட்ஸா திரைப்படத்தின் வசூலை முறியடித்துச் சாதனை படைத்தது.

சுதந்திரப் போராட்டத் தியாகியாகவும் (அனைவரையும் கவர்ந்த இந்தியன் தாத்தா), அவரது மகன் சந்துருவாகவும் கமல்ஹாசன் கலக்கியிருந்தார். திரைப்படத்தின் ஆரம்பம் முதலே வர்மக்கலை மூலம் பாரிய குற்றங்கள் புரிந்தவர்கள் கொலை செய்யப்படுகின்றனர். இதை ஆராயும் காவல்துறையினர் வர்மக்கலை அறிந்த 'இந்தியனை' தகவற்தளத்தில் கண்டுபிடிக்கின்றனர். இவர்களின் பிடியில் இருந்து தப்பிச் செல்லும் இந்தியன் தாத்தா மறுபடியும் தொலைக்காட்சி மூலம் தோன்றிதான் செய்யும் கொலைகளுக்கான காரணத்தைச் சொல்கின்றார். (இந்தியன் தாத்தாவின் மகள் இறந்தமைக்கு இலஞ்சமே காரணமாக இருந்தது) இதேசமயம் சந்துருவும் (மகனாக நடிக்கும் கமல்ஹாசன்) இலஞ்சம் பெற்றுச் சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கியதால் பாடசாலைச் சிறார்களின் பஸ் வண்டி விபத்துக்கு உள்ளாகக் காரணமாகின்றார். இதனால் இந்தியன் தாத்தாவின் கொலை லிஸ்ட்டில் இவரும் சேர்ந்துவிடுகின்றார்.

இந்தியாவில் அதுவும் தமிழ்நாட்டில் தலைவிரித்தாடிய இலஞ்சத்தினைக் கையில் எடுத்து சிறப்பான ஒரு திரைப்படமாக வார்த்திருந்தார் இயக்குநர் சங்கர். சமூக சீர்கேட்டுக்கு எதிரான ஒரு தனிமனிதனின் கோபம் எவ்வாறு கொலைவெறியாக வெளிப்படுகின்றது என்பதே இப் படம் மூலம் அவர் வெளிப்படுத்த விழைந்த விடயம். இலஞ்சம் வாங்கினால் தாமும் கொல்லப்பட்டுவிடுவோம் என்று படத்தில் ஒவ்வொருஅதிகாரியும் பதறும் காட்சிகளில் எல்லாம் 'இதுவே உண்மையாக இருந்துவிடக் கூடாதா' என்பதாக ஒவ்வொரு ரசிகனும் நினைக்கும் அளவிற்கு எல்லோராலும் ரசிக்கப்படக் கூடியதான திருப்பங்கள் நிறைந்த கதையை உற்சாகம் குறையாமலேயே வழங்கியிருந்தார் இயக்குநர் சங்கர். ஏ.ஆர் ரஹ்மானின் இசையும்,பாடல்களும் படத்தின் மெருகை இன்னும் இன்னும் ஏற்றியிருந்தன என்றுதான் சொல்லவேண்டும்.

இந்தியன் படத்தில் மொத்தம் ஐந்து பாடல்கள். வாலி மற்றும் வைரமுத்துவின் வரிகளில் ஐந்து பாடல்களும் சூப்பர் ஹிட். 'டெலிபோன் மணிபோல்'பாடல் மெலோடி பாடல்கள் வரிசையில் இன்றும் பிரபலம். படம் முழுவதும் கமல்ஹாசனே வியாபித்திருப்பதால் ஒன்றுக்கு இரண்டு கதாநாயகிகள் இருந்தும் பெரிதாக எந்த வேலையும் அவர்களுக்கு இல்லை. (காதல் மற்றும் பாடல்களைத் தவிர). 'கப்பலேறிப் போயாச்சு' பாடலை ஒட்டியதான காட்சிகளில் சுகன்யாவின் நடிப்பு பேசப்பட்டது. ஏனைய துணை நடிகர்களினது நடிப்பும் மிகவும் நேர்த்தியாகவே அமைந்திருந்தது சிறப்பு. சமூக சீர்கேடுகளுக்கு எதிரான சங்கரின் மற்றுமொரு வரவான 'இந்தியன்' 1996ஆம் ஆண்டு ஒஸ்கார் விருதுக்காக இந்தியாவின் சார்பில் பரிந்துரைக்கப்பட்டமையே இப் படத்திற்கான உழைப்பிற்கும், வெற்றிக்கும் கிடைத்த உச்சபட்ச மரியாதையாகும்.

பார்வைதொடரும்




# சிலநேரங்களில் சில அனுபவங்கள்...

அன்றொரு நாள் காலை பத்து மணியிருக்கும். வீட்டு வேலைகள் எல்லாம் முடித்துக் கொண்டு பாடசாலைக்குச் சென்றேன். அன்று இரண்டாம் தவணை நிறைவுநாள். அதனால் மாணவர் தேர்ச்சி அறிக்கையினைப் பெற்றுக் கொள்வதற்காக பெற்றோர்களைப் பாடசாலை நிர்வாகம் அழைத்திருந்தது. பத்தரை மணிக்கெல்லாம் பாடசாலைக்குச் சென்று விட்டேன். தேர்ச்சி அறிக்கை பதினொரு மணிக்கு மேல் வழங்கப்படும் என்பதால், அதிபர் அறைக்கு முன்னால் போடப்பட்டிருந்த இருக்கையில் அமர்ந்தேன். அதிபரின் அறைமுழுவதுமாக என் பார்வையில் படும்படியாகத்தான் இருந்தது.

ஒரு அதிபருடைய அறை எப்படியெல்லாம் இருக்க வேண்டுமோ அதற்குரிய இலட்சணங்களுடன் அது இருக்கவில்லை.ஒரு மூலையில் பழுதடைந்த சில தளபாடங்கள், ஒரு மூலையில் கற்றல் உபகரணங்கள், இன்னொரு மூலையில் கரும்பலகைகள்... இவற்றிற்கு நடுவில் அதிபரின் மேசை என்று ஏதோ களஞ்சிய அறை போன்றுதான் அந்த அறை காணப்பட்டது. அதிபரின் மேசையிலும் வஞ்சகமில்லாமல் கோப்புக்கள், அதன் உறவுக்காரப் பொருட்கள் என்று ஏதோவெல்லாம் இருந்தன. என் பக்கத்தில் இருந்தவரிடம் என்னவென்று விசாரித்தேன். ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு தற்காலிகக் கட்டடம் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றது என்றும், அதனால்தான் அதிபர் அறையை தற்போதைக்கு களஞ் சிய அறையாக்கிவிட்டிருக்கின்றார்கள் என்றும் சொன்னார். அதுவும் சரிதான். பிள்ளைகளின் நலன்தான் முக்கியம். அதற்குத்தானே இத்தனை பிரயத்தனமும் என்று அதை அப்படியே விட்டுவிட்டேன். அதிபரும் அப்படித்தான் யோசித்து இருப்பார் என்று நினைக்கின்றேன். நான் அவதானித்த வரையில் அவருடைய செயற் பாடுகளும், பேச்சுக்களும் என் எண்ணத்தை வலுப்படுத்தவே செய்தன.

திடீரென்று ஒரு நடுத்தரவயதானவர் வந்தார். சேட், ஜீன்ஸ், சப்பாத்து அணிந்து ஒரு அரச அதிகாரி போல் தெரிந்தார். நேராக அதிபரின் அறைக்குள் நுழைந்தவர், அதிபருடன் பேசினார். கொஞ்சம் அல்ல ரொம்பவே காரசாரமான உரையாடல். தான் கொஞ்சம் செல்வாக்கு உள்ளவர் என்பதை பேச்சில் அடிக்கடி வெளிப்படுத்தவும் தவறவில்லை அந்த மனிதர். சண்டையின் சாரம்சம் இதுதான். (பிற்பாடு எனது மகனின் வகுப்பாசிரியர் ஊடாக நான் உசாவி அறிந்தது). குறிப்பிட்ட ஒரு பரீட்சைக்காக மாணவர்களின் விண்ணப்பத்தை (பரீட்சைக் கட்டணம் உட்பட) அனுப்பிவைக்குமாறு வலயக் கல்வித் திணைக்களத்தில் இருந்து சுற்று நிருபம் ஒன்று அதிபருக்கு கிடைத்தது. விண்ணப்பம் அனுப்பி வைப்பதற்கான காலஅளவு குறைவாக இருந்தமையால் வகுப்பாசிரியரூடாக பிள்ளைகளுக்கு இதை தெரிவித்துப் பணம் வழங்கிய பிள்ளைகளுக்கான விண்ணப்பத்தை மட்டும் அனுப்பி வைத்தார் அதிபர்.

சண்டை போட்டவருடைய பிள்ளை (பிள்ளை அதை வீட்டிலும் சொல்லவில்லை) அந்தப் பணத்தை வழங்காததால் அப் பிள்ளைக்கான விண்ணப்பம் வழங்கப்பட வில்லை. இத்தனைக்கும் பரீட்சை கட்டணம் அவ்வளவு அதிகம் இல்லை. வெறும் 40 ரூபாதான். பரீட்சையும் நடந்து முடிந்த விட்டது. பரீட்சை தினத்தன்றுதான் சண்டை போட்டவருக்கு விடயமே தெரிந்திருக்கின்றது. அடுத்தவனின் பிள்ளை பரீட்சை எழுதச் செல்கையில் என்னுடைய பிள்ளை எதற்காக செல்லவில்லை? என்பது அப்போதுதான் அவருக்குப் புரிந்திருக்கின்றது. அதன் விளைவு தான் இந்தச் சண்டை சச்சரவு எல்லாம்.. (பிற்பாடு அதிபர் மற்றும் வகுப்பாசிரியரின் விளக்கத்தைக் கேட்டும் சண்டையை அவர் தொடர்ந்த தெல்லாம் வேறு விடயம்)


நான் கவனித்த வரையிலும் சில பெற்றோர், பெற்றோர் ஆசிரியர் சங்கக் கூட்டங்களுக்குச் சமூகமளிப்பது இல்லை. பாடசாலையின் அபிவிருத்திச் செயற்பாடுகளிலும் பங்கெடுப்ப தாகத் தெரியவில்லை. பிள்ளைகளின் நலனில் அக்கறை கொண்ட ஒரு நல்ல பெற்றோர் இப்படி அக்கறையற்று இருப்பதில்லை என்பதே என் கருத்து. தமது பிள்ளைகள் முன்னுரிமைப்படுத்தப்படாமல் விடப்படு வதால் தமது கௌரவம் போய்விடும் என்று நினைப்பவர்கள் முதலில் தமது பிள்ளையின் வளர்ச்சி என்ன என்பதை ஆசிரியர் மற்றும் அதிபர் மூலம் கேட்டுத் தெரிந்துகொண்டு, அதற்கு ஏற்ப செயற்பட வேண்டும். அப்போது தான் பாடசாலைக்கும் பெற்றோருக்கும் இடையில் ஒரு சுமூகமான உறவு உருவாகி பிள்ளையின் கல்விவளர்ச்சியும் சிறப்பாகஅமையும் என்பது நான் சொல்லித் தெரிய வேண்டிய ஒன்றல்லவே.


ஆ.ஜெயராமன்
பளை

இது போல் நீங்களும் சில விடயங்களை அவதானித்திருக்கலாம் அல்லது அனுபவித்திருக்கலாம். அவற்றை ஏனையவர்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்பினால், உடனே எமக்கு எழுதுங்கள்.

ஆசிரியர் பீடம்,
தீபம்,
editor@deepam.lk
197, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்

# எதனால் சைனஸ் தொல்லை ஏற்படுகின்றது?






குளிர் காரணமாக கடந்த இரண்டு மாத காலமாக அநேகருக்கு தும்மலும், இருமலும், மூக்கடைப்பும், தடிமனுமாகத்தான் இருக்கின்றது. சாதாரண தடிமன் அனேகமாக வைரஸ் கிருமியால் ஏற்படுவது.

1. மூக்கடைப்பு
2. மூக்கில் திரவம் வடிதல்
3. தலைவலி
4. சோர்வு

இன்னும் கொஞ்சம் தீவிரமடைந்தல் காய்ச்சல், இருமல் இப்படி கூடி பின் இறங்கி மறைகின்றது. சில நாட்கள் முதல் ஒரு வாரத்திற்கும் மேல் இதன் ஆயுட் காலம் எனலாம். ஆனால் சிலருக்கு இதுவே சைனஸ் தாக்குதலாக மாறுகின்றது. பல பேர் எனக்கு சைனஸ் பிரச்சினை என சொல்வதனைக் கேட்கின்றோம்.

1. மூக்கிலிருந்து தடித்த சளி வெளியேறுதல்
2. கண், முகத்தின் இருபுறம் இடங்களில் வலி
3. நெற்றி பகுதியில் தலைவலி
4. கடுமையான மூக்கடைப்பு
5. தொண்டைவழி சளி வெளியேற்றம்
6. காய்ச்சல், இருமல்

ஆகியவை சைனஸ் பாதிப்பின் அறிகுறிகள். எதனால் இந்த சைனஸ் தொல்லை ஏற்படு கின்றது?

1. தடிமன்
2. அலர்ஜி
3. மூக்கில் சதை

இவையெல்லாம் சைனஸ் தொல்லை ஏற்பட காரணம் ஆகின்றது. இது மிக அதிகமாக தொல்லை தரும் பொழுது எக்ஸ்ரே, சிடி ஸ்கான் போன்ற சோதனை முறைகளை மருத்துவர் மேற்கொள்வார். அதற்காக மருந்துகளும் அளிக்கப்படும்.

ஆவி பிடித்தல் போன்றவை சற்று நிவாரணம் தரும். மிக அதிக தாக்குதலுக்கு அன்டிபயோடிக்ஸ், சில சமயங்களில் அறுவை சிகிச்சையும் தேவைபடும். தூசு நிரம்பிய இடங்களை தவிர்த்தல், கைகளை சுத்தமாய் வைத்திருத்தல், ப்ளூ ஊசி வருடந்தோறும் எடுத்துக் கொள்ளுதல் போன்றவை சைனஸ் தவிர்ப்பு முறைகளாக உதவும்.

- உங்களுக்கு சைனஸ் பாதிப்பு என்றால் பொதுஇடங்கள், அலுவலகத்திற்கு சென்றால் மற்றவர்களுக்கு பரவும் என்று பயப்படவேண்டாம். நீங்கள் தாரளமாக எங்கும் செல்லலாம்.
- சைனஸ் பாதிப்பு இருக்கும் நேரத்தில் விமான பயணம் செய்வதை தவிர்ப்பது நல்லது. காது வலி போன்ற பிரச்சினைகள் பயணத்தின் போது ஏற்படலாம்.
- தலையும், முகமும் வலித்தால் மருத்துவ ஆலோசனை படி மருந்துகளை எடுத்துக் கொள்ளலாம்.
- அதிக திரவ உணவு எடுத்துக் கொள்ளவும். சூடான சூப், ஹெர்பல் டீ இவை பெரிதும் உதவும்.
- மது அவசியம் தவிர்க்கப்பட வேண்டும்.
- வெந்நீர் ஒத்தடம் நல்லது.
- நீச்சல் செய்பவர்களுக்கு அதிலுள்ள குளோரின் கூட இப்பாதிப்பினை ஏற்படுத்தலாம்.
- மசாலா நெடி, சமையல் புகை இவையும் பாதிப்பினை ஏற்படுத்தும்.
- உடற்பயிற்சி செய்யும் சமயத்தில் கவனம் தேவை. தலை சுற்றல் ஏற்படலாம்.
- ஆவி பிடியுங்கள்.
- வீட்டினை சுகாதாரமாக வையுங்கள்.
- மஞ்சள், இஞ்சியினை அன்றாடம் உணவில் சேர்த்துக் கொள்ளுங்கள்.
- விற்றமின் சி சத்து தேவையெனில் மருத்துவ ஆலோசனை பெற்று எடுத்துக் கொள்ளுங்கள்.
- பால் வகை உணவுகளில் அலர்ஜி இருக்கின்றதா என்று பரிசோதித்துக் கொள்ளுங்கள்.
- பூண்டு, முள்ளங்கி, வெங்காயம் இவற்றினை சமையலில் அதிகம் பயன்படுத் துங்கள்.
- சுடுநீரில் உப்பு சேர்த்து 'கார்கின்' செய்வதனை அன்றாட வழக்கமாக கொண்டு விடுங்கள்.

## அதற்காக கவலைப்படாத ஸ்ரேயா!

நடிகைகள் எதையும் வெளிக்காட்டுவார்கள் வயதை தவிர. வயதை சொன்னால் மார்க்கெட் போய்விடும் என பயப்பிடுகிறார்கள். அம்மா, அண்ணி வேடங்கள் ஏற்க தயங்குவதன் ரகசியமும் இதுதான். காலம் முழுக்க, நாயகனை காதலித்து மணம் முடிப்பவளாக நடிக்கத்தான் விரும்புகிறார்கள். இதில் நடிகைகளை சொல்லி குற்றமில்லை. தயாரிப்பாளர், ரசிகர்கள் அதை விரும்பினால் அவர்கள் அப்படித்தானே நடந்து கொள்ள வேண்டும். இதில் ஸ்ரேயா விதிவிலக்காக இருக்கிறார். "எனக்கு 34 வயதாகிறது" என பகிரங்கமாக கூறியுள்ளார். "எந்த வயதானாலும் நடிக்க வாய்ப்பு கிடைக்கும் தொழில் சினிமா. 65 வயதானாலும் நல்ல வேடம் கிடைக்கும். அமிதாப்பை பாருங்கள். இந்த வயதிலும் எப்படியான வேடங்களில் அசத்துகிறார்" என்றுள்ளார். வயதை பற்றி கவலையில்லை, நடிகையாக இருப்பதால் ஆசீர்வதிக்கப்பட்டவளாக உணர்கிறேன் என்றுள்ளார்.

## பாண்டு சொன்ன ரகசியம்!

நகைச்சுவை நடிகர் பாண்டுவை தெரியாதவர்கள் இருக்க முடியாது. ஆனால் அவரைப்பற்றி தெரியாத சில விடயங்கள் உள்ளன. அவர் எம்.ஜி.ஆருடன் நெருக்கமானவர். அதிமுக கொடியை வரைந்தவரும் அவர்தான். கொடியை முதலில் வரைந்து காட்டியிருக்கிறார். எம்.ஜி.ஆருக்கு திருப்தியில்லை. பின்னர் அண்ணாதுரை கைகாட்டுவரை போல வரைந்துள்ளார். கொடி அசையும்போது கை அசைகிறதே என எம்.ஜி.ஆர் சொல்ல, அண்ணாதுரையும், கையும் இருப்பதை போல வரைந்துள்ளார். அதில் அண்ணாதுரையின் கை துப்பாக்கி சுடுவதை போல இருந்துள்ளது. பாண்டுவை அழைத்த எம்.ஜி.ஆர், "ஏற்கனவே ஒருமுறை எம்.ஆர்.ராதா என்னை சுட்டது போதாதா" என நகைச்சுவையாக கேட்டுள்ளார். அதன்பின்தான் எம்.ஜி.ஆரின் ஆலோசனையுடன் இரட்டை தாமரைஇலை சின்னத்தை வரைந்துள்ளார்.

## அனுஷ்கா ரீச்சர்!

தெலுங்கு நடிகர் நாகர்ஜூனாவிற்கு யோகா கற்றுக்கொடுப்பவராக இருந்தார் அனுஷ்கா. அனுஷ்கா அழகாக இருக்க, சினிமாவிற்கு அழைத்து வந்தவர் நாகர்ஜூனா. 2007 இல் டான் படத்தில் இருவரும் ஜோடி போட்டனர். பின்னர் பல படங்களில் ஒரு பாடல் மற்றும் முக்கிய வேடங்களில் நட்புக்காக நடித்தார். நாகர்ஜூனா படமென்றால் எந்த மாதிரியாக வேடமென்றாலும் அனுஷ்கா நடிப்பார் என்பதே உண்மை. இப்போது நாகர்ஜூனா நடித்துள்ள ஓம்நமோ வெங்கடேசாயா என்ற படத்தில் கிருஸ்ணம்மா பாத்திரத்தில் நடித்துள்ளார். இதில் நாகர்ஜூனாவின் ஜோடி அனுஷ்கா அல்ல. என்றாலும், நாகர்ஜூனா படத்தில் நடிப்பதே பெருமைதான் என கூறியுள்ளார் அனுஷ்கா.

## நான் யாருக்கும் போட்டியல்ல!

நடிப்பில் யாருடனும் தான் போட்டியிடவில்லையென்றுள்ளார் அமீர்கான். "நான் யாருடன் போட்டியிடுகிறேன் என்றால், அது என்னோடுதான். இதைவைத்து, சாருக்கான், சல்மான்கான் போன்றவர்களை பெரிய நடிகர்களாக நான் மதிக்கவில்லையென யாரும் விளக்கமளிக்க வேண்டாம். அவர்கள் பிரமாதமானவர்கள். அவர்கள் மட்டுமல்ல, அக்சய்குமார், அஜய்தேவ்கான், ரன்வீர் சிங், ரன்வீர் கபூர், ஹிருத்திக்ரோசன் போன்றவர்களும் உயர்ந்த நடிகர்கள்தான். பிறரின் நல்ல வேலையை பார்த்து அவர்களுடன் போட்டியிட நினைக்கமாட்டேன். சுல்தான், தபாங் படங்களை மிக விரும்பி ரசித்தேன். முன்னாபாய் படத்தை பார்த்தபோது சஞ்சய்தத்தை விரும்பினேன். போட்டியிடுவது ஒரு விசித்திர உலகம். யாரோடும் போட்டியிடும் எண்ணம் எனக்கில்லை. என்னோடு போட்டியிடவே விரும்புகிறேன்" என்றுள்ளார்.

## பாதி தமிழிச்சி!

இந்தியில் அஜய்தேவ்கான் ஜோடியாக சிவாய் படத்தில் அறிமுகமானவர் சாயிஷா சைகல். முன்னாள் இந்தி நட்சத்திர ஜோடி திலீப்குமார், சாயிராபானுவின் பேத்தி. தமிழில் வனமகன் படத்தில் அறிமுகமாவுள்ளார். ஜெயம்ரவி ஹீரோ. விஜய் இயக்குகிறார். படத்தின் முதற்கட்ட படப்பிடிப்புக்கள் முடிந்துள்ளன. சாயிஷா கூறும்போது "சிவாய் படம் நல்ல அறிமுகத்தை தந்தது. அதில் நடித்தது என் அதிர்ஸ்டம். அதிலிருந்துதான் தமிழ்படத்தில் வாய்ப்பு கிடைத்தது. தமிழ் எனக்கு தெரியாது. என்றாலும் மனப்பாடம் செய்து வசனங்களை பேசினேன். பேசிப்பேசி பாதித் தமிழிச்சிஆகிவிட்டேன். தமிழ் கடினமானதென முதலில் நினைத்தேன். ஆனால் இலகுவாக பழகிவிட்டேன்" என்றுள்ளார்.



## த்ரிஷாவை பிடித்த சனி!

தமிழில் மீண்டும் ஒரு ரவுண்ட் வர ஆரம்பித்துள்ள த்ரிஷாவிற்கு சனி காளை வடிவத்தில் வந்துள்ளது. ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாக தமிழகத்தில் எழுந்துள்ள அலை த்ர்ஷாவையும் தாக்க ஆரம்பித்துள்ளது. ஜல்லிக்கட்டிற்கு தடைவாங்கிய பீட்டா அமைப்பின் தூதராக த்ரிஷா இருக்கிறார். அவர் ஒரு நாய் அபிமானி. அதனால் பீட்டாவுடன் நெருங்கி செயற்பட ஆரம்பித்தார். இந்த நிலையில் ஜல்லிக்கட்டிற்கு ஆதரவாக நடத்தப்படும் போராட்டம், த்ரிஷா எதிர்ப்பாகவும் மாறியுள்ளது. அவர் நடித்துவரும் கர்ஜனை படப்பிடிப்பு ரத்துசெய்யப்படும் அளவிற்கு எதிர்ப்பு கிளம்பியுள்ளது. ஜல்லிக்கட்டு அலை தொடர்ந்து நீடித்தால் த்ரிஷா படப்பிடிப்பில் கலந்து கொள்வது சிக்கலாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## யுவனின் மாற்றம்!

சந்தனத்தேவன் படப்பிடிப்பு விரைவாக நடந்து வருகிறது. ஆர்யா, அமீர், அதிதி உள்ளிட்டவர்கள் நடிக்கும் இந்தப்படத்தை அமீர் இயக்குகிறார். யுவன்சங்கர் ராஜா இசை. பாடல்கள் வைரமுத்து. படத்தின் பத்திரிகையாளர் சந்திப்பு அண்மையில் நடந்தது. இதில் பேசிய வைரமுத்து யுவனை வெகுவாக பாராட்டியுள்ளார். "முன்பெல்லாம் யுவனிற்கு போன் செய்தால் மறுநாள்தான் எடுப்பார். ஆனால் இப்பொழுது வெகுவாக மாறிவிட்டார். உடனே போன் செய்கிறார். சினிமாவில் வாய்ப்புள்ளபோதே கடுமையாக உழைத்து உயரத்திற்கு வந்துவிட வேண்டும்" என யுவனிற்கு அறிவுரையும் வழங்கியுள்ளார். கூடவே, தானும் இளையராஜாவும் சேர்ந்து பணியாற்றிய காலங்களில் எவ்வளவு விரைவாக இசையமைத்து, பாடல்களை எழுதினோம் என்பதை குறிப்பிட்டுள்ளார். காதல்ஓவியம் படத்தின் ஏழு பாடல்களிற்கும் ஒரேநாளில் இசையமைத்தாராம் இளையராஜா.

## ஆசையை தூண்டிய படம்!

துருவங்கள் பதினாறு பட வெற்றியால் மகிழ்ச்சியில் இருக்கிறார் நடிகர் ரகுமான். "இந்த படத்தின் இயக்குனர் கார்த்திக் நரேன் என்னை நடிக்க கேட்டபோது உடனே நான் சம்மதிக்கவில்லை. ஒன்று பொலிஸ் வேடம். இரண்டு இயக்குனருக்கு 21 வயதுதான் ஆகிறது. அறிமுக இளம் இயக்குனரின் படத்தில் நடித்து பாதியில் நின்றுவிட்டால் தயாரிப்பாளருக்கு நட்டமாகிவிடும் என நினைத்தேன். ஆனால் அவர் கதையை எழுதிய, சொன்ன விதம் ஆச்சரியமாக இருந்தது. படப்பிடிப்பு முடிந்ததும், அற்புதமான படமொன்றில் நடித்திருக்கிறேன் என்பது புரிந்தது. இந்தப்படம் உண்மையில் எனக்கு பெயர் சொல்லும் படமாக அமைந்துள்ளது. அடுத்து தேசியவிருது பெற வேண்டுமென்ற ஆர்வத்தையும் இந்தப்படம் ஏற்படுத்தியுள்ளது" என்றார்.



# கதவு திறக்காத பாடசாலையில் காத்திருக்கும் சிறுமி

மு.தமிழ்செல்வன்



கிளிநொச்சி உதயநகர் மேற்கைச் சேர்ந்தவர் நாகராஜன் கனுசியா. இவர் தரம் ஐந்து வரை கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயத்தில் கல்வி கற்றவர். கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயத்தில் தரம் ஐந்து வரைக்குமே வகுப்புகள் உள்ளன. அதுவொரு ஆரம்ப பாடசாலை.

2016 இல் கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயத்தில் இருந்து வெளியேறிய கனுசியா டிசம்பர் பாடசாலை விடுமுறை காலத்தில் தனது நாளாந்த மேசன் வேலை செய்கின்ற தந்தையிடம் தொடர்ந்தும் தனக்கு புதிதாக புத்தக பை, கொப்பிகள், புதிய சீருடை வேண்டும்என வற்புறுத்தி அவற்றையெல்லாம் ஆவலுடன் பெற்று தரம் ஆறுக்கு பெரிய பாடசாலைக்கு செல்ல போகும் அவாவுடன் பாடசாலை செல்வதற்கான அனைத்து தயார்படுத்தல்களையும் மேற்கொண்டு தை மாதம் இரண்டாம் திகதிக்காக காத்திருந்தாள்.

தந்தையும் தனது நாளாந்த மேசன் வேலை செய்கின்ற கூலிப் பணத்தில் ஏனைய இர்ண்டு பிள்ளைகளுக்கும் பாடசாலைக்குரிய கற்றல் உபகரணங்களை வாழ்க்கைச் செலவு நெருக்கடியின் மத்தியில் பெற்றுக்கொடுத்துள்ளார். கனுசியா தான் பெரிய பள்ளிக் கூடத்திற்கு போகப்போறன் என்ற மகிழ்ச்சியை அயல்வர்களுடனும் பெற்றோர்களுட்னும் சதோரர்களிடம் அடிக்கடி வெளிப்படுத்தியே அந்த நாளுக்காக காத்திருந்தாள். சில வேளை தாயுடன் ஏ9 வீதியால் சென்று வரும் போது தான் படிக்கப்போகும் பாடசாலையை க்காட்டி இதுதான் என்னுடைய பாடசாலை என பெருமிதத்துடனும் பல தடவைகள் கூறியிருக்கின்றாள்.

விடுமுறை நாட்களில் தரம் ஆறுக்குரிய புதிய புத்தகங்கள் மற்றும் கொப்பிகளுக்கு ஆசையோடு உறைகள் போட்டு அவற்றில் தனது பெயர் தரம் என்பவற்றையும் எழுதியதோடு பாடசாலையின் பெயரையும் கிளிநொச்சி மத்திய கலலூரி என எழுதி கனவுகளோடு இருந்திருக்கிறாள் கனுசியா.

அவள் எதிர்பார்த்த அந்த நாளும் வந்தது வழமைக்கு மாறாக கனுசியா நேரத்தோடு எழும்பி குளித்துவிட்டு புதிய சீருடையும் அணிந்து சுவாமி அறைக்குள் சென்று கடவுளை வணங்கி புதிய புத்தக பையை சுமந்தபடி தாயுடன் கிளிநொச்சி மத்திய கல்லூரி நோக்கி வெள்ளை பட்டாம் பூச்சியாய் பறக்கிறாள். பாடசாலை முதலாம் தவணைக்காக 02012017 இல் ஆரம்பித்தாலும் தரம் ஆறுக்கு மாணவர்களை சேர்த்துக் கொள்ளும் நாள் 06012017 ஆக பாடசாலையால் அறிவிக்கப்பட்டிருந்ததால் கனுசியாவும் ஆறாம் திகதி ஆறாம் ஆண்டில் காலடி வைக்க சென்றிருக்கிறாள்.

கனுசியா போன்று பலரும் வந்திருக்கின்றார்கள். அதில் பலர் அவளுடன் மத்திய ஆரம்ப வித்தியாலயத்தில் கல்வி கற்ற நண்பர்களும் நண்பிகளும். ஒவ்வாருவராக அழைத்து பாடசாலை நிர்வாகம் அவர்களது விண்ணப்பங்களை பெற்று அனுமதி வழங்கி வகுப்பறைகளுக்கு அனுப்பிக் கொண்டிருந்தது. அவர்கள் செல்லும் போது சிலர் கனுசியாவை பார்த்து உனக்கும் கதிரை பிடிச்சி வைக்கிறன் கெதியா வாடி என்று அழைப்பும் விட்டிருக்கின்றார்கள். கனுசியாவும் வகுப்புக்குச் செல்லும் ஆவலோடு காத்திருக்கிறாள்.

இப்பொழுது பாடசாலை நிர்வாகம் கனுசியாவின் விண்ணபத்தை பரிசீலிக்கிறது. கனுசியா தாயின் அருகில் நிற்கிறாள். ஒரு சில நிமிடங்களில் அதிபர் கூறுகின்றார் இவவுக்கு இங்க அனுமதியில்லை நீங்கள் வேறு பாடசாலையில் சேருங்கோ என்று. தாய் ஏன் மத்திய ஆரம்ப வித்தியாலயத்தில் படித்த பிள்ளையை இங்கதானே சேர்க்கவேண்டும் என்கிறார். இல்லை அப்படி எந்தச் சட்டமுமில்லை இங்கு இடவசதியும் போதாது அதனைவிட இவவுக்கு தரம் ஐந்து புலமை பரிசில் பரீட்சையில் 62 புள்ளிகள் இங்கு சேர்ப்பது என்றால் 70 புள்ளிகள் பெற்றிருக்க வேண்டும் என்கிறார் அதிபர். கனுசியா எதுவும் அறியாதவளாய் விழிகள் அகல விரிய தாயுக்கும் அதிபருக்கும் இடையே நடக்கும் உரையாடலில் இருவரது முகங்களையும் மாறி மாறி பார்க் கின்றாள்.

தொடர்ந்தும் தாய் இங்கு 27 புள்ளிகள் பெற்ற மகளுடன் படித்த மாணவர்களையும் சேர்த்துள்ளீர்கள் என சுட்டிக்காட்ட, அவர்கள் எங்கள் பாடசாலையின் சூழலில் உள்ள மாணவர்கள் என அதிபர் பதிலளிக்கின்றார். கனுசியாவின் சகோதரியும் மத்திய ஆரம்ப வித்தியாலயத்தில் தரம் மூன்றில் கல்வி கற்கின்றார் எனவே கனுசியாவை இங்கு சேர்த்தால்தான் பாடசாலைக்கு பிள்ளைகளை ஏற்றி இறக்குவதிலும் வசதியாக இருக்கும் என கனுசியாவின் தாய் தன்னால்இயலுமானவரை காரணங்களையும் கூறிவிட்டார். ஆனால் அதிபர் தனது நிலைப்பாட்டில் இருந்து மாறவில்லை.

கனுசியாவின் தாய் தனது இருக்கையில் இருந்து எழுந்துவெளியே வர தன்னை பாடசாலையில் சேர்த்துக்கொள்வதில் சிக்கல் ஏற்பட்டுவிட்டது என்பதை புரிந்துெ காண்டவளாய் வெளியேறுகிறாள். தன்னோடு படித்த பள்ளித்தோழிகள் வகுப்பறைக்குள் செல்ல கனுசியா தாயோடு வீதிக்கு வருகிறாள் வீட்டுகுச் செல்ல. கனுசியாவின் கனவுகள் உடைந்துபோகின்றன. அவளது ஆசைகள் அழிக்கபடுகின்றதாய் உணர்கிறாள் காலையில் கடவுளிடம் நடந்த பிரார்த்தனை பொய்யாகிவிட்டது என அறிகிறாள். இப்படி அளவது உணர்வுகள் பலவிதமாய் காணப்படுகிறது. வீடு செல்லும் வரைக்கும் இருவரும் அமைதி. வீட்டைச் சென்றடைந்தும் தாயிடம் ஏன் என்னை பள்ளிக்கூடத்தில் சேர்க்கவில்லை? எப்பொழுது சேர்ப் பார்கள்? எனக் கேள்விகளை கேட்கின்றாள் தாயும் நடந்தவற்றை பக்குவமாய் சொல்லி திங்கள் கிழமை கல்வித்திணைக்களத்திற்குச் சென்று அனுமதி பெற்று சேர்த்துவிடு கிறேன் கவலைப்படாதே என கூறி சமாதானப் படுகிறார். என்னை விட குறைவான மார்க்ஸ் எடுத்தவர்கள் சேர்கின்றார்கள் ஏன் என்னை சேர்க்கவில்லை எனத் திரும்பவும் கேள்வி தாயிடம் பதில் இல்லை.

புதிய புத்தகபை, கொப்பிகள், எல்லாம் பக்குவமாய் மேசைகக்கு செல்கிறது. சீருடையை கழற்றும் போது மாத்திரம் கண்கள் பனித்தன என்கிறார் தாய்.

திங்கள் கிளிநொச்சி வலயக் கல்வித் திணைக்களத்திற்கு செல்கின்றார்கள் அனுமதி வழங்குமாறு கடிதம் வழங்கப்படுகிறது. மறுபடியும் பாடசாலைக்கு வருகின்றார்கள் அனுமதி மறுக்கப்படுகிறது. மீண்டும் வலயம் செல்கின்றனர் வேறுபாடசாலைகளில் சேர்க்குமாறு கடிதம் வழங்கப்படுகிறது. இதனை தவிர கிராம அலுவலர் கடிதத்தை பெற்றுவருமாறு கூறப்படுகிறது. தாய் அதனையும் பெற்றுக்கொடுகின்றார் இருந்தும் எதுவும் நடக்கவில்லை. மகளுடன் வேறு இரண்டு பாடசாலைகளுக்கு செல்கின்றார் அனுமதி தருமாறு மன்றாடுகின்றார் ஆனால் அங்கும் எதுவும் நடக்கவில்லை.


இப்படி பதினெட்டு நாட்களாக அழைந்து திரிகின்றார் கனுசியாவை பாடசாலையில் சேர்த்துவிடுவதற்கு ஆனால் எங்கும் எதுவும் நடக்கவில்லை. பாடசாலைகளில் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இடம்பெறுகிறது. புதிய புத்தகங்களில் பல பாடங்கள் கற்பிக்கப்பட்டுவிட்டன. ஆனால் 19012016 வரை கனுசியாவுக்கு எந்தப் பாடசாலையிலும் அனுமதி கிடைக்கவில்லை.

என்னை பள்ளிக் கூடத்தில் சேர்க்க மாட்டார்களா? நான் இனி படிக்க முடியாதா? பள்ளிக் கூடம் போகாத பிள்ளைகளை பிடித்து வந்து படிக்கச் சொல்கின்றார்கள் நான் பள்ளிக் கூடம் போயும் என்னை ஏன் எடுக்கினம் இல்லை என கேள்விகள் தொடர்கிறது பாவம் பதினொரு வயது சிறுமி பல விதமாய் யோசித்து யோசித்து விரக்தியாய் நிற்கின்றாள். அவளது கேள்விகளுக்கு தாயிடம் இருந்து இப்போது கண்ணீர் மாத்திரமே பதிலாக வருகிறது.

சிறுவர் உரிமைகள், கல்வி உரிமைகள், அடிப்படை உரிமைகள் என எல்லா உரிமை களும் இருக்கிறது ஆனால் கனுசியாவுக்கு எதுவுமில்லை இதுவரைக்கும்.




மாலேபேயில் இயங்கும் தனியார் மருத்துவ கல்லூரிக்கு எதிராக யாழ். பல்கலையின் மருத்துவ பீட மாணவர்கள் கடந்த சில தினங்களாக எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.



பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு உத்தேச அரசியலமைப்பு தொடர்பாக விளக்கமளிக்கும் விசேட கருத்தரங்கின் ஒரு பகுதியாக, மன்னார் சித்திவிநாயகர் இந்துக்கல்லூரியில் இடம் பெற்றது. மன்னார் வலயக்கல்வி திணைக்களத்தின் சமூக,விஞ்ஞான பிரிவு பொறுப்பதிகாரி எம்.ஆர்.பிரின்ஸ் டயஸ் தலைமையில் இடம் பெற்றது. அரசியலமைப்புச் சபை உறுப்பினர்கள் சார்பாக சட்டத்தரணி எம்.எஸ். நவாஸ் மற்றும் சிரேஸ்ட அதிகாரி கிருஸ்னானந்தன் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினர்.



'உலகம் சுற்றும் வாலிபன்' படத்தில் எம்.ஜி.ஆர்., சந்திரகலா.

# படத்தில் மட்டுமல்ல; நிஜத்திலும் 'ஹீரோ'!

ஸ்ரீதர் சுவாமிநாதன்

**எம்.ஜி.ஆர்.** அசாத்திய துணிச்சல் மிக்கவர். தவறு எங்கே நடந்தாலும் தயங்காமல் தட்டிக் கேட்பார். ஒரு காரியத்தில் இறங்க வேண்டுமென்றால் அது ஆபத்தானதாக இருந்தாலும் பொருட்படுத்த மாட்டார். அதற்கு எவ்வளவோ உதாரணங்கள்.

1977ம் ஆண்டு சட்டப் பேரவைத் தேர்தலில் அதிமுக அமோக வெற்றி பெற்று முதல்முறையாக ஆட்சியைப் பிடித்தது. அந்தத் தேர்தலில் அருப்புக் கோட்டை தொகுதியில் போட்டியிட்டு எம்.ஜி.ஆர் வெற்றி பெற்றார். வேட்புமனு தாக்கல் செய்வதற்கு முன், மதுரை மேம்பாலம் அருகில் உள்ள அண்ணா சிலைக்கு மாலை அணிவிக்க வந்தார். சிலையின் பீடமே 10 அடி உயரம் இருக்கும். அதற்கு மேலே சுமார் 8 அடி உயரத்தில் அண்ணா சிலை கம்பீரமாக நிற்கும்.


இப்போது இருப்பது போல சிலைக்கு மாலை அணிவிக்க படி வசதி எல்லாம் அப்போது கிடையாது. எம்.ஜி.ஆர் வரப்போகிறார் என்பதை அறிந்ததும் அந்தப் பகுதியே ஜன சமுத்திரமாக காட்சியளித்தது. மாலை அணிவிப்பதற்காக வந்த எம்.ஜி.ஆர், காரை விட்டு இறங்கியதும் சில தொண்டர்கள் எங்கிருந்தோ மர ஏணி ஒன்றைக் கொண்டு வந்தனர். தொண்டர்கள் சிலர் "நீங்கள் ஏணியில் ஏறி சிரமப்பட வேண்டாம். மாலையை தொட்டுக் கொடுங்கள். நாங்கள் சிலைக்கு அணிவிக்கிறோம்" என்று எம்.ஜி.ஆரிடம் கூறினர்.

அதை எல்லாம் எம்.ஜி.ஆர் கவனிக்காமல், சிலையையும் ஏணியையும் ஒரு பார்வை பார்த்தார். 'எப்படி ஏறலாம்? எப்படி மாலையை தனது அண்ணனுக்கு அணிவிக்கலாம்?' என்று அவரது மனம் கணக்கு போட்டது. இதெல்லாம் சில விநாடிகள்தான். உடனே, வேகமாக ஏணியில் ஏறி சிலையின் குறுகலான பீடத்துக்கு சென்று பிடிமானத்துக்காக சிலையை கைகளால் தொட்டபடி நின்று கொண்டார். கொஞ்சம் தவறினாலும் கீழே விழும் அபாயம் உண்டு. என்றாலும் துணிச்சலாக எம்.ஜி.ஆர் ஏறிவிட்டார்.

சிலைக்கு பின்னால் இருந்து ஒருவர் பெரிய மாலையை கொடுக்க அதை லாவகமாக தூக்கி அண்ணா சிலையின் கழுத்தில் சரியாக விழும்படி எம்.ஜி.ஆர் அணிவித்த போது, தொண் டர்களின் ஆரவாரத்தால் தென்பாண்டி மண்டலமே குலுங்கியது.

மதுரை என்றதும் சில சுவையான நினைவுகள். எம்.ஜி.ஆரின் திரைப்பட, அரசியல் வாழ்க்கையில் மதுரைக்கு தனி இடம் உண்டு. தமிழகம் முழுவதிலும் எம்.ஜி.ஆருக்கு ஆதரவு உண்டு என்றாலும் மதுரை அவரது கோட்டையைப் போல விளங்கியது.

சிறுவயதில் எம்.ஜி.ஆர் நடித்த நாடகக் கம்பெனியின் பெயர் மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனி. எம்.ஜி.ஆர் கதாநாயகனாக நடித்து வெள்ளிவிழா கண்ட முதல் படம் 'மதுரை வீரன்'. படம் வெள்ளிவிழா கொண்டாடியது மதுரையில்.


மதுரையில் அண்ணா சிலைக்கு மாலை அணிவிப்பதற்காக பீடத்தின் மீது ஏறி நிற்கிறார் எம்.ஜி.ஆர்.

1958ம் ஆண்டு 'நாடோடி மன்னன்' படத்தின் அசுர வெற்றிக்காக முதன் முதலில் பொதுமக்கள் முன்னிலையில் விழா நடந்த இடம் மதுரை தமுக்கம் மைதானம். இந்த விழாவில்தான் எம்.ஜி.ஆர் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு 110 பவுனில் அவருக்கு தங்கவாள் வழங்கப்பட்டது.

அதிமுகவை தொடங்கிய பின் அப்போதைய திமுக ஆட்சிக்கு எதிராக பிரதமர் இந்திரா காந்தியிடம் புகார் மனு கொடுக்க மதுரைக்கு எம்.ஜி.ஆர் சென்ற ரயில், வழிநெடுக மக்களின் வரவேற்பால் 10 மணி நேரம் தாமதமாகச் சென்று பரபரப்பை ஏற்படுத்தியது. அதிமுகவை எம்.ஜி.ஆர் தொடங்கிய 7 மாதத்தில் அவரது கட்சிக்கு முதல் வெற்றியைக் கொடுத்தது திண்டுக்கல் நாடாளுமன்றத் தொகுதி இடைத்தேர்தல். அப்போது திண்டுக்கல் தனி மாவட் டமாக பிரிக்கப்படவில்லை. மதுரை மாவட்டத்தில்தான் இருந்தது. அதிமுகவுக்கு முதல் மேயரைக் கொடுத்தது மதுரைதான்.

1980ம் ஆண்டு எம்.ஜி.ஆர் ஆட்சி கலைக்கப்பட்டது. பின்னர், நடந்த தேர்தலில் எம்.ஜி.ஆர் போட்டியிட்டு வெற்றி பெற்ற தொகுதி மதுரை மேற்கு. மீண்டும் முதல்வரான பின்னர், மதுரை யில் உலகத் தமிழ் மாநாட்டை நடத்தினார். 1984ம் ஆண்டு அமெரிக்காவில் இருந்தபடியே ஆண்டிப்பட்டி தொகுதியில் போட்டியிட்டு வென்றார். அப்போது ஆண்டிப்பட்டி மதுரை மாவட் டத்தில்தான் இருந்தது. 1986ம் ஆண்டு ஜூலையில் மதுரையில் எம்.ஜி.ஆர் மன்ற மாநாட்டை நடத்தினார். எம்.ஜி.ஆர் நடித்த கடைசிப் படம் 'மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன்'. இப்படி மதுரையோடு எம்.ஜி.ஆருக்கு நெருக்கமான பிணைப்பு உண்டு!

ஜப்பானில் எக்ஸ்போ 70 கண்காட்சியில் 'உலகம் சுற்றும் வாலிபன்' படத்தின் படப்பிடிப்பு நடந்தது. 'உலகம் அழகு கலைகளின் சுரங்கம்...' பாடலின் சில காட்சிகளை 30 ஆயிரம் பல்புகளைக் கொண்டு ஒளி வெள்ளம் பாய்ச்சப்பட்ட ஸ்விஸ் பெவிலியனில் எடுக்க எம்.ஜி.ஆர் திட்டமிட்டார்.

அந்த சமயத்தில் ஒரு காட்சிக்காக ஒளிப்பதிவாளர் அழைக்கும்வரை எம்.ஜி.ஆர், நடிகை சந்திரகலா, அசோகன், நாகேஷ் ஆகியோர் ஒரு இடத்தில் அமர்ந்திருந்தனர். அப்போது அவர்கள் அருகில் வந்த ஜப்பானியர் ஒருவர் மது மயக்கத்தில் இருந்தார். ஆர்வத்தோடு சந்திரகலாவின் உடையை கவனித்தார். திடீரென சில்மிஷம் செய்யும் எண்ணத்துடன் சந்திரகலாவின் உடலைத் தொட்டுவிட்டார். ஜப்பானியரின் கை சந்திரகலாவின் உடலைத் தொட்ட மறுகணம் எம்.ஜி.ஆரின் கை அவர் கன்னத்தில் விழுந்தது. ஜப்பானியரை எம்.ஜி.ஆர் பலமாக அறைந்து விட்டார். இதில் ஜப்பானியர் அணிந்திருந்த கண்ணாடி தெறித்து விழுந்தது.

நிதானத்துக்கு வந்த ஜப்பானியர், தனது தவறுக்கு வருத்தம் தெரிவிக்கும் வகையில் இரு கைகளையும் கோர்த்து இடுப்பு வரை முன்னோக்கி வளைந்து "மன்னியுங்கள்" என்று ஜப்பானிய மொழியில் சொல்லிவிட்டு பின்னோக்கி நகர்ந்து போய்விட்டார்.

படத்தில் மட்டுமல்ல; நிஜத்திலும் 'ஹீரோ' எம்.ஜி.ஆர்!

எம்.ஜி.ஆர் நடித்த 'மதுரை வீரன்', 'அன்பே வா', 'ஒளிவிளக்கு', 'அடிமைப்பெண்', 'மாட்டுக்கார வேலன்', 'ரிக் ஷாக்காரன்', 'உலகம் சுற்றும் வாலிபன்', 'உரிமைக்குரல்' ஆகிய படங்கள் மதுரையில் 20 வாரங்களுக்கு மேலும், 'குடியிருந்த கோயில்', 'நம்நாடு', 'இதயக்கனி' ஆகிய படங்கள் 19 வாரங்களும் ஓடி சாதனை படைத்தன. **தொடரும்...**


மதுரையில் உலகத் தமிழ் மாநாட்டை முன்னிட்டு நடந்த ஊர்வலத்தை பிரதமர் இந்திரா காந்தியும் முதல்வர் எம்.ஜி.ஆரும் பார்வையிடுகின்றனர்



## புத்தாண்டு ராசிபலன் - 2017

### கடன் பட்டாலும் கல்யாணம் களைகட்டும்

துலாம் [ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

70 / 100

கலை ஆர்வத்துடன் செயலாற்றும் துலாம் ராசி அன்பர்களே!

## புத்தாண்டு ராசிபலன் - 2017

### வசந்தகாலம் பிறக்கிறது வளர்ச்சிக்கதவு திறக்கிறது

விருச்சிகம் [ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

70 / 100

நினைத்ததை முடிக்க விரும்பும் விருச்சிக ராசி அன்பர்களே!

# உங்கள் புத்தாண்டு பலன் எப்படி?

**கலை ஆர்வத்துடன் செயலாற்றும் துலாம் ராசி அன்பர்களே!**

ராசிநாதனான சுக்கிரன் சாதகமாக இருக்கும் சூழ்நிலையில் புத்தாண்டு பிறக்கிறது. ஆரம்பமே சுப மங்களமாக இருக்கும். குருபகவான் ஜன.16ல் உங்கள் ராசிக்கு அதிசாரமாக வருகிறார். இது சிறப்பானதல்ல என்றாலும் அவரது 5,7,9ம் இடத்துப் பார்வையால் நன்மை உண்டாகும். மார்ச்10 முதல் ஓக.31 வரை குரு வக்ரம் அடைவதால் நற்பலன் குறையும். தற்போது சனிப்கவான் உங்கள் ராசிக்கு 2ல் இருக்கிறார். அவரது 10ம் இடத்துப் பார்வை மூலம் நற்பலன் உண்டாகும். ஏப்.10 முதல் ஓக.6 வரை சனி வக்ரம் அடைவதால் நன்மை அளிக்க இயலாது. டிச.18ல் தனுசு ராசிக்கு மாறுவதால் குடும்பத்தில் மகிழ்ச்சியும், தொழிலில் சீரான வளர்ச்சியும் உண்டாகும். ராகு 11ம் இடமான சிம்மத்தில் இருப்பதால் பெண்களால் நன்மை, பொருளாதார வளர்ச்சி ஏற்படும். ஜூலை 26ல் 10ம் இடமான கடகத்திற்கு மாறுவதன் மூலம் உடல் உபாதை ஏற்படலாம். கேது தற்போது 5ல் இருப்பதால் பிள்ளைகளால் பிரச்னை உருவாகலாம்.

ஜூலை 26ல் கேது 4ம் இடமான மகரத்திற்கு செல்வதும் சிறப்பானது அல்ல. உடல்நலக்குறைவு ஏற்படலாம். மேற்கண்ட நிலையில் இருந்து விரிவான பலனைக் காணலாம்.

இந்த ஆண்டு குடும்பத் தேவை குறைவின்றி நிறைவேறும். திட்டமிட்டபடி சுபநிகழ்ச்சி நடத்தி மகிழ்வீர்கள். அதற்காக கடன் வாங்க வேண்டிய சூழ்நிலை உருவாகலாம். குடும்பத்தில் பெண்களால் மேன்மை கிடைக்கும். புதுமணத் தம்பதியருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்கும். குரு பகவான் பார்வையால் செல்வாக்கு மேம்படும். மனதில் உற்சாகம் பிறக்கும். குடும்பத்தில் இருந்த பின்னடைவு மறையும். தம்பதியினர் இடையே ஒற்றுமை மேம்படும். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மார்ச் முதல் ஓகஸ்ட் வரை திடீர் செலவு, அலைச்சல் ஏற்பட வாய்ப்புண்டு.

**வியாபாரம்:** கூட்டாளிகள் இடையே ஒற்றுமை மேம்படும். அரசு வகையில் எதிர் பார்த்த நன்மை கிடைக்கும். வங்கி நிதியுதவி யுடன் விரிவாக்கப்பணியில் ஈடுபடுவீர்கள். ஏப்.10 முதல் ஓக.6 வரை திடீர் செலவு, பணவிரயம் ஏற்படலாம். ஓக.6 ல் சனி வக்ர நிவர்த்தி அடைந்த பின் நிலைமை சீராகி தொழிலில் நல்ல முன்னேற்றம் உண்டாகும்.

**பணியாளர்கள்:** தன்னம்பிக்கையோடு செயல்பட்டு பணியாளர்கள் வளர்ச்சி காண்பர். குருபகவான் பார்வையால் வேலைப் பளு குறையும். அதிகாரிகள் ஆதரவுடன் இருப்பர். எதிர்பார்த்த பதவி உயர்வு, சம்பள உயர்வு போன்றவை கிடைக்கும். ஆனால் மார்ச் முதல் ஓகஸ்ட் வரை பணிச்சுமை இருந்தாலும் வருமானத்திற்கு குறைவிருக்காது.

**கலைஞர்கள்:** புதிய ஒப்பந்தம் கையெழுத் தாகும். வருமானம் குறைவின்றி கிடைக்கும். தொழில்ரீதியான பயணம் இனிய அனுபவம் அளிக்கும். மார்ச் முதல் ஓகஸ்ட் வரை விடாமுயற்சி தேவைப்படும்.

**அரசியல்வாதிகள்:** பெண்களின் ஒத்து ழைப்பு வளர்ச்சிக்குதுணைநிற்கும். தொண்டர் களின் மத்தியில் செல்வாக்கு உயரும். விரும்பிய பதவி கிடைக்கப் பெறுவீர்கள்.

**மாணவர்கள்:** கல்வியில் வளர்ச்சி காணலாம். போட்டியில் பங்கேற்று பரிசு, பாராட்டு கிடைக்கப் பெறுவீர்கள். மேல்படிப்பில் விரும்பிய பாடம் கிடைக்கும். சிலர் வெளிநாடு சென்று படிக்கும் வாய்பை பெறுவர். ஓகஸ்ட் மாதத்திற்கு பிறகு குருவின் பார்வையால் உங்கள் முயற்சிக்கு தகுந்த பலன் கிடைக்கும்.

**விவசாயிகள்:** ஜூலை மாதம் வரை சிறப்பான வருமானம் கிடைக்கும். அதன் பின் அதிக செலவு பிடிக்கும் பயிர்களையும், கருப்பு தானிய வகைகளையும் பயிரிடுவதை தவிர்க்கவும். கால்நடை வளர்ப்பின் மூலம் வருமானம் கிடைக்கும்.

**பெண்கள்:** உங்களின் பங்களிப்பால் குடும்ப வாழ்வு சிறக்கும். கணவரின் அன்பும், ஆதரவும் கிடைக்கும். வேலைக்கு செல்லும் பெண்கள் நல்ல வளர்ச்சி அடைவர். மார்ச் முதல் ஓகஸ்ட் வரை குடும்பத்தினரிடம் விட்டுக் கொடுத்து போவது நல்லது. அதன்பின் பிள்ளைகளின் செயல்பாட்டால் பெருமிதம் கொள்வீர்கள்.

**பரிகாரம்:** வியாழக்கிழமை குருபகவான், தட்சிணாமூர்த்திக்கு அர்ச்சனை செய்யுங்கள். சனியன்று சனீஸ்வரருக்கு எள்எண்ணெய் தீபமேற்றுவது நல்லது. கேதுவுக்கு அர்ச்சனை செய்யுங்கள். ஏழை மாணவர்களின் படிப்புச் செலவுக்கு உதவுங்கள். புற்றுக் கோவிலில் வழிபடுவது நல்லது.

**நினைத்ததை முடிக்க விரும்பும் விருச்சிக ராசி அன்பர்களே!**

முக்கிய கிரகங்களில் குரு பகவான் சாதகமாக இருக்கும் சூழ்நிலையில் புத்தாண்டு பிறக்கிறது. குரு பகவான் லாப ஸ்தானத்தில் இருப்பதால் நன்மை உண்டாகும். ஜன.16ல் ராசிக்கு 12ம் இடத்திற்கு குரு அதிசாரமாக செல்வது சுமாரான நிலையே. இங்கு அவரால் வீண் அலைச்சல், மனக்குழப்பம் உருவாகலாம். ஆனால், இந்த பிரச்னைகளுக்கு விடை கொடுக்கும் வசந்தகாலமாக குரு மார்ச் 10 முதல் ஓக.31 வரை வக்ரம் அடைகிறார். இதனால் குடும்பத்தில் நன்மை மேலோங்கும். வளர்ச்சி பெருகி எதிர்பார்ப்பு அனைத்தும் நிறைவேறும்.

ராகு தற்போது 10ம் இடமான சிம்மத்தில் இருந்து மனைவியால் பிரச்னை ஏற்படலாம். ஜூலை 26ல் ராகு 9ம் இடமான கடகத்திற்கு மாறுவதால் சுமாரான பலனே உண்டாகும். கேது 4ம் வீடான கும்பத்தில் இருப்பதால் உடல்நலக்குறைவு உருவாகலாம். ஜூலை 26ல் கேது 3ம் இடமான மகரத்திற்கு வருவதால் பிரச்னை அனைத்தும் விலகும். பொருளாதார வளம் சிறக்கும்.

இஷ்ட தெய்வ அருளால் வாழ்வில் வளம் பெருகும். சனி பகவான் ராசியிலேயே இருப்பதால் உறவினர் வகையில் கருத்து வேறுபாடு வரலாம். தொழில் விஷயமாக வெளியூரில் தங்க நேரிடலாம். அவரது 3ம் பார்வையால் செயலில் வெற்றி உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சியும், தொழிலில் வளர்ச்சியும் நிலைக்கும். ஏப்.10 முதல் ஓக. 6 வரை சனி வக்ரம் அடைவதால் கெடுபலன் தர மாட்டார். அவர் ஆண்டு இறுதியில் (டிச.18) உங்கள் ராசியில் இருந்து தனுசு ராசிக்கு மாற இருக்கிறார்.

மேற்கண்ட நிலையில் இருந்து விரிவான பலனைக் காணலாம்.

குடும்பத்தில் மகிழ்ச்சி நிலைத்திருக்கும். ஆடம்பரச் செலவு அதிகரிக்கும். சிக்கனம் அவசியம். மார்ச், ஏப்ரல் மாதத்தில் ஆடை, ஆபரணம் வாங்க வாய்ப்புண்டு. ஜூலை26க்கு பிறகு முயற்சி அனைத்திலும் வெற்றி உண்டாகும். கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும்.

**வியாபாரம்:** தொழிலில் சீரான வளர்ச்சி உண்டாகும். ஏழரை சனி என்பதால் புதிய தொழில் முயற்சியில் ஈடுபடுவதை தவிர்ப்பது நல்லது. மார்ச்10க்கு பிறகு வருமானம் போதுமான அளவில் இருக்கும். தொழில் ரீதியான பயணம் வெற்றி பெறும். தொழிலாளர் ஆதரவு சிறப்பாக அமைந்திருக்கும்.

**பணியாளர்கள்:** ஆண்டின் தொடக் கத்தில் சுமாரான பலன் கிடைக்கப் பெறுவர். வேலைப்பளுவும், அலைச்சலும் ஏற்படலாம். ஆனால் மார்ச்10க்கு பிறகு நிலைமை சாதகமாக அமையும். தடைபட்ட பதவி உயர்வு, சம்பள உயர்வு கிடைக்கும். அதிகாரிகளின் மத்தியில் மதிப்பு உயரும்.

**கலைஞர்கள்:** புதிய ஒப்பந்தம் பெறுவதில் விடாமுயற்சி தேவைப்படும். எதிர்பார்த்த மதிப்பு, பாராட்டு போன்றவை கிடைக்காமல் போகலாம். மார்ச் 10க்குப் பிறகு முன்னேற்றம் உண்டாகும்.

**அரசியல்வாதிகள்:** பதவியை எதிர் பாராமல் பாடுபட வேண்டியதிருக்கும். மார்ச் முதல் ஓகஸ்ட் வரை போதிய வருமானம் கிடைக்கும். மக்கள் மத்தியில் செல்வாக்கு அதிகரிக்கும்.

**மாணவர்கள்:** குருவின் பார்வையால் முயற்சிக்கு தகுந்த பலன் கிடைக்காமல் போகாது. ஆனால் அடுத்த கல்வி ஆண்டு சிறப்பாக இருக்கும். போட்டிகளில் பங்கேற்று வெற்றி காண்பீர்கள்.

**விவசாயிகள்:** அதிக முதலீடு பிடிக்கும் பணப்பயிர்களைப் பயிரிட வேண்டாம். மானாவாரி விவசாயத்திலும், நெல், கோதுமை, பழவகைகள், கேழ்வரகு போன்ற பயிர்களிலும் நல்ல மகசூல் கிடைக்கும். வழக்கு விவகாரத்தில் சுமாரான பலன் கிடைக்கும். புதிய சொத்து வாங்கும் எண்ணம் நிறைவேறும்.

**பெண்கள்:** குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக் கும். ஜூலை 26க்கு பிறகு குடும்பத்தோடு புனித தலங்களுக்கு செல்லும் வாய்ப்புண்டு. ஆடம்பர செலவைக் குறைத்து சேமிக்க முயல வீர்கள். வேலை பார்ப்பவர்கள் அதிகமாக உழைக்க வேண்டியதிருக்கும். உறவினர் களிடம் இணக்கமான சூழ்நிலை உருவாகும்.


**பரிகாரம்:** சனிபகவானுக்கு நல்லெண் ணெய் தீபம் ஏற்றுங்கள். விநாயகரையும், ஆஞ்சநேயரையும் தொடர்ந்து வழிபடுங்கள். ராகு கால பைரவர் பூஜையில் கலந்து கொள்வது சிறப்பு. வியாழனன்று தட்சிணா மூர்த்திக்கு கொண்டைக்கடலை மாலை அணிவித்து வணங்குங்கள்.





கிளிநொச்சி ஞானிமடம் அ.த.க.பாடசாலை இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு போட்டிகள் அண்மையில் நடந்து முடிந்தன. உறுப்பினர் சிவயோகன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

# குழந்தைப் போராளி



சைனா கெய்ரெற்சி
தமிழில்: தேவா

லெப்ட்ரைட் லெப்ட்ரைட்" என்ன இது காதைக் கிழிக்கும் சத்தம்? யார் கத்துகிறார்கள்? விடிகாலையிலேயே ஏன் என்னைக் கூச்சலிட்டு எழுப்புகிறார்கள்? தலையைத் தூக்கிப் பார்த்தேன். இராணுவச் சீருடைகளில் சிறுவர்களும் சிறுமிகளும் அணிவகுத்துச் சென்றனர். கனவு காண்கிறேனா அல்லது எனக்குத்தான் மூளை கலங்கி விட்டதா? கடந்த இரவு நடந்தவற்றைப் பற்றி யோசிக்கையில் நான் நிலைமையை மெதுவாகப் புரிந்து கொள்ளத் தொடங்கினேன். இவர்கள் என்னையும் இந்த விளையாட்டில் சேர்த்துக் கொள்வார்களென நம்பினேன். நேற்றிரவு எனக்குப் போர்வைகளைக் கொடுத்த மனிதர் புன்னகையுடன் என்னிடம் வந்தார். நானும் அந்தச் சிறுவர்களுடன் சேர்ந்து லெப்ட்ரைட் போடலாமா என நான் கேட்க எனது கால்கள் வீங்கியிருப்பதால் என்னைச் சிறிது ஓய்வெடுத்துக் கொள்ளும்படி அந்த மனிதர் கூறினார்.

சிறிது நேரத்தின் பின்பு பொருட்களையெல்லாம் தூக்கிக்கொண்டு வேறொரு இடத்திற்கு அந்தப் பாசறையை நகர்த்திச் சென்றார்கள். அங்கு என்ன நடக்கிறதென்று எனக்குப் புரியவேயில்லை. யாரும் எனக்கு விளக்கம் சொல்லிப் புரிய வைக்கவுமில்லை. மூன்று நாட்களின் பின் மற்றக் குழந்தைகளுடன் விளையாடுவதற்கு எனக்கு அனுமதி கிடைத்தது. எனக்குப் பெருமையாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது. நான் அவர்களுடன் அணிவகுத்துச் சென்றேன். அணிவகுப்பு நடை இரண்டு மணி நேரங்கள் நீண்டு சென்றது. பின்பு பதினைந்து நிமிடங்கள் ஓய்வு வழங்கப்பட்டது. ஓய்வின் போது குழந்தைகள் ஒரு குழுவாகவும் பெரியவர்கள் ஒரு குழுவாகவும் அமர்ந்திருந்தோம்.

அங்குள்ள குழந்தைகளை நான் உன்னிப்பாகக் கவனித்தேன். பலர் அந்தச் சூழ் நிலைக்குப் பழக்கப்பட்டவர்களென்பது அவர்களின் முகங்களிலேயே தெரிந்தது. என்னைப் போல புதியவர்களும் அங்கிருந்தனர். அவர்களுடன் என்னால் சரிவரப் பேச முடியாமலிருந்தது. பெரும்பாலான குழந்தைகள் அந்நிய மொழி பேசுபவர்களாக இருந்தனர். பதினைந்து நிமிட ஓய்வின் பின் பன்னிரெண்டு சிறுவர்கள் துப்பாக்கிப் பயிற்சிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஒவ்வொருவருக்கும் ஒரு AK 47 தரப்பட்டது. கட்டளையிடப்பட்ட உடனேயே அந்தக் குழந்தைகள் துப்பாக்கிகளை அக்கு வேறு ஆணி வேறாகக் கழற்றிச் சில விநாடிகளிலேயே அவற்றை மீண்டும் முழுமையாகப் பொருத்தினார்கள். நான் வாயைப் பிளந்தவாறே அந்தக் குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

இடைவிடாத இராணுவப் பயிற்சிகளின் மூலம் அவர்கள் என்னை ஆயுதப் போராளியாக உருவாக்கத் தொடங்கினார்கள். மூன்றாவது நாள் நான் சிறுவர் சிறுமியர்களுடன் காலைப் பயிற்சிக்காக மைதானத்தில் நின்றிருந்த போது போது எனது பயிற்சியாளர் என் முன்னே வந்து நின்றார். அவர் ஓங்கு தாங்கான உடலமைப்பைக் கொண்ட கண்டிப்பான மனிதர். அவர் தன் கண்களால் என் இருதயத்தை ஊடுருவ முயன்றார். என்னிடம் பல கேள்விகளைக் கேட்டார். கடைசியாக நான் எனது பெயரைக் கூற வேண்டும். அவர் வட உகண்டாவிலிருந்து வந்திருந்ததால் எனது பெயரை உச்சரிப்பது அவருக்குக் கடினமாக இருந்தது. அவருடைய இயலாமை என் மீது கோபமாய்த் திரும்பியது. நான் தலையைத் தாழ்த்திக் கொண்டேன்.

"ஏய் உன்னைத்தான், சீனர்களைப் போல இடுங்கிய கண் உள்ளவளே என்னை நிமிர்ந்து பார்!" அவர் உறுமினார்.

சடுதியில் நான் தலை உயர்த்திப் பார்த்தேன். என் நாடி நரம்புகள் புடைத்துக்கொண்டன. என்னை வரிசையிலிருந்து முன்னே வரச் சொன்னவர் "சைனா லெப்ட்ரைட் சைனா லெப்ட்ரைட்" என எனக்குக் கட்டளையிட்டார். நான் எல்லோர் கண் முன்னும் தண்டனையை அனுபவிக்கவேண்டியிருந்தது. 'சைனா' என்ற புதிய விநோதமான பெயர் எனக்கு ஒரு பிரபல்யத்தை எனது சக போராளிகளிடம் பெற்றுத் தந்தது. பல குழந்தைகள் என்னுடன் சிநேகிதம் பாராட்டத் தொடங்கினர். பாஷை இடம் கொடுத்த வரைக்கும் நாங்கள் பேசிக்கொண்டோம்.

'கிகாண்டா', 'சுவாஹிலி' ஆகிய இரண்டு மொழிகளையும் நான் வேகமாகப் பயில வேண்டியிருந்தது. எனது மொழியான 'கினியான்கோலே'யை வெகுசிலராலேயே இங்கு புரிந்து கொள்ள முடிந்தது. இங்கு அதிகமான குழந்தைகள் 'பகண்டா' இனக் குழுவைச் சேர்ந்தவர்கள். இவர்கள் 'கிகாண்டா' மொழி பேசுபவர்கள். 'சுவாஹிலி' ஓர் இனக்குழுவின் மொழியல்ல. முசேவெனி என்பவர் இதனை உகண்டாவின் தேசிய மொழியென அறிவித்திருந்தார். இதற்கு இரண்டு காரணங்களை அவர் முன்வைத்தார். ஒன்று பொது மொழியை நிறுவுவது, மற்றது இனக்குழு அடையாளங்களை இல்லா தொழிப்பது. அவர் இனக் குழுக்களுக்கு இடையிலான வித்தியாசங்களை மக்களிடமிருந்து அகற்றிவிட முயன்றார். "நாங்கள் எல்லோரும் ஒரு பொதுவான விடயத்திற்காக எங்கள் விடுதலைக்காக மட்டுமே போராட வேண்டும்" என்பதே முசேவெனியின் முழக்கமாயிருந்தது.

சைனா என்ற சிறுமி நீண்ட காலம் இராணுவப் பயிற்சியைப் பெறவில்லை. அவள் போராளிச் சிறுமியாகக் குறிப்பிடத்தக்களவு திறமையைக் காட்டியதற்காகவோ அல்லது மிக விரைவாகத் தனது பயிற்சிகளில் தேர்ச்சி பெற்றாள் என்பதற்காகவோ அல்லாமல் NRA யின் போர் முனைகளில் போராளிகள் அவசரமாகத் தேவைப்பட்டார்கள் என்ற காரணத்தினாலேயே போர் முனைக்கு அனுப்பப்பட்டாள். AK 47 துப்பாக்கியையே இன்னும் சரிவரத் தூக்க முடியாத சிறுமிகளில் ஒருத்தியான நான் ஒரு படைத் தளபதியின் பிரத்தியேக ஆயுத உபகரணங்களையும் பொருட்களையும் தூக்கிச் செல்லும் பணிக்கு நியமிக்கப்பட்டேன். நான் தளபதியின் ரவைக் கூடுகளையும் அவரின் சமையல் பாத்திரங்களையும் சுமந்து போர்முனைக்குச் செல்ல வேண்டியிருந்தது. 'உனது அப்பா எங்கே?' கேட்டபடியே அந்த மனிதர் தன் கையிலிருந்த 'டோர்ச் விளக்கை' என் முகத்திற்குப் பிடித்தார்.

'அப்பா செத்துப் போய்விட்டார்' நான் பொய் சொன்னோன்.

நான் அவரது கேள்விக்குப் பதில் பதிலளித்துக் கொண்டிருக்கும் போதே ஆட்கள் துப்பாக்கிகளுடன் புதர்களுக்குளிருந்து வெளியே வந்த்னர். இவர்கள் உடைகள் அழுக்காகவும் கிழிந்தும் இருந்தன. அவர்கள் தங்களுக்குள் என்னைப் பற்றிப் பேசிக் கொண்டே ஆள் மாறி ஆள் என் முகத்தை உற்றுப்பார்த்தார்கள். என் கால்கள் நடுங்கத் தொடங்கின. இவர்கள் என்னை என்ன செய்யப்போகிறார்கள்? அவர்களில் ஒருவன் என்னுடைய தாய்மொழியான "கினியான்கோலே" யில் என்னை விசாரணை செய்தார். அது எனக்குச் சற்று ஆறுதலாயிருந்தது. எனது பதில்கள் அவர்களுக்கு திருப்தியைக் கொடுத்திருக்க வேண்டும். ஒருவர் என்னிடம் "சரி போய்ப் படுத்துக்கொள் மிகுதியைக் காலையில் பேசிக் கொள்ளலாம்." என்றார். நான் ஒன்றும் புரியாமல் முழித்துக் கொண்டு நின்றேன். படுப்பதா? இங்கே வீடுமில்லை, கட்டிலுமில்லை எங்கேதான் படுப்பது?

(தொடரும்)

► கொற்றாவத்தை கலைவாணி முன்பள்ளியின் கலைவிழா அண்மையில் நடைபெற்றது. க.தங்கவேல் தலைமையில் நடந்த நிகழ்வில் வடமாகாணசபை உறுப்பினர் சிவயோகன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.







# போர் சொன்ன... பேர் சொன்ன நகரம் பளை

நிலவன்

பச்சிலைப் பள்ளியில் பெரியபளை, அல்லிப்பளை, அரசர்கேணி, முல்லையடி, வண்ணாங்கேணி, தம்பகாமம், சோரன்பற்று, தர்மக்கேணி போன்ற பல கிராமங்களை உள்ளடக்கிய பேரூராகக் காட்சியளிக்கின்றது பளை. யாழப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களை இணைக்கும் மையப் பகுதியாக உள்ளது.

தமிழர்களின் தொன்மையான வாழிடங் களில் பளையும் ஒன்று என்பது குறிப் பிடப்பட வேண்டியது. அதுதவிர, போராட்ட வரலாற்றில் பெரும் சமர்கள் பலவற்றை கண்ட பிரதேசம். எவ்வளவு அழிவுகள் ஏற்பட்டபோதும், தளராமல் மீண்டும் புதுப்பொலிவுடன் நிமிர்வதே பளையின் சிறப்பு!

### பெயர்க் காரணம்

ஆதி மக்களின் நாடோடி வாழ்க்கையை பளை மக்கள் வாழவில்லை. நிலையாகவே வசித்துள்ளனர். வாழும் காலத்தில் அவர்கள் 'பழை' குடித்து வாழ்ந்தமையால் அதுவே ஊர்ப்பெயராக ஆகியதாக ஊர்ப் பெரியவர்கள் சொல்கிறார்கள். பழை என்பது கள்ளைக் குறிப்பது. பளைப்பகுதியில் பனைமரங்கள் செறிவாக உள்ளதும் குறிப்பிடத்தக்கது.

பளைக்கு மட்டுமல்லாது இதனைச் சுற்றியுள்ள ஊர்களுக்கெல்லாம் காரணப் பெயர்கள் உண்டு.

முள்ளிப்பற்று - முள்ளிச் செடிகள் அதிகம் உள்ள கிராமம்.

சோரன்பற்று - சோழன், ஆண்ட இடம். (சோழன் என்பதே சோரன் என மருவியது)

அரசர்கேணி - அரசர்கள் நீராடிய கேணி அமைக்கப்பட்ட பிரதேசம்.

மாசார் - (மா=குதிரை, சார்=கட்டுமிடம்) ஒல்லாந்தர் குதிரைகளைக் கட்டிய இடம்.

முகாவில் - உடுத்துறையில் ஒல்லாந்தரால் அமைக்கப்பட்ட முகாமுக்கு முன்னிருந்த ஊர் என்பதால் முக வாயில் எனப்பட்டு பின் முகாவில் என மாறியது.

அல்லிப்பளை - அல்லி மகாராணியால் ஆளப்பட்ட இடம்.

இப்படி இந்தப்பகுதியிலுள்ள ஒவ்வொரு ஊருக்கும் வரலாற்று தொடர்பு, காரணப் பெயர்கள் உண்டென்பது கூடுதல் சிறப்பு.

### கோவில்கள்

பழம்பெரும் நகரமான பளையில் பழமை யான கோவில்கள் பலவும் காணப்படுகின்றன. இரட்டைக்கேணி அம்மன் கோவில், கச்சாவெளி பிள்ளையார் கோவில், மல்வில் கிருஷ்ணன் கோவில், (இராமர் தன் பரிவாரங்களுடன் இலங்கை வந்த போது தண்ணீர் குடிப்பதற்காக வில்லால் தோண்டி யதால் இவ்விடம் வில்மல் எனப்பட்டு பின் மல்வில் எனப் பெயர் பெறலாயிற்று), கல்லடி வைரவர் ஆலயம், அறத்தி அம்மன் ஆலயம், மாசார் பிள்ளையார் ஆலயம், (இவ் ஆலயம் வீதிக்குப் போடப்படும் ஊரிக் கற்களால் அரிந்து கட்டப்பட்டதாகும்) என்று இங்கே இந்து ஆலயங்கள் பலப்பல.

புலோப்பளையை அண்டிய பகுதி களிலேயே கிறிஸ்தவர்கள் அதிகம் வாழ்ந்தமை யால் அப் பகுதியில் அவர்களுக்கென்று புனித பேதுருவானவர் ஆலயம், மாதா ஆலயம் போன்றவை காணப்படுகின்றன. பளை நகர்ப் பகுதியில் பிரித்தானியரால் 1833இல் அழகுணர்ச்சியுடன் கட்டப்பட்ட புனித அந்திரேயா தேவாலயத்தை A9 வீதியில் செல்லும் வழியில் காணலாம். பளையை அண்டிய ஊர்களில் ஒல்லாந்தர் காலத்தில் அமைக்கப்பட்ட பல தேவாலயங்கள் உள்ளன. 1827இல் அமைக்கப்பட்ட புனித அந்தோனியார் தேவாலயம், 1785இல் கட்டப்பட்ட புனித தோமையார் தேவாலயம் போன்றனவற்றைக் குறிப்பிடலாம்.

### இயற்கை

யாழ்ப்பாண மாவட்டத்தின் அடிப் பாகத்தில் கிளிநொச்சி மாவட்டத்திற்கு உரித்தான 4 பிரதேசசபைகளுள் ஒன்றாகிய பச்சிலைப்பள்ளி என்ற பிரதேச சபையே பளை உள்ளடங்கிய பிரதேசசபையாகும். பசுமையான இலைகளால் சூழப்பட்ட பிரதேசம் என்பதனாலேயே பச்சிலைப்பள்ளி என்று பெயர் இதற்கு உருவானது. (யாழ் மற்றும் தென்மராட்சி மக்களால் இவ்வூர் குழைக்காடு என்று அழைக்கப்பட்டதாம்) பெயருக்கு ஏற்றாற் போலவே இவ்வூர் நிலவியல், நீரியல் அமைப்பில் பசுமையை இப் பிரதேசம் தேக்கி வைத்திருக்கின்றது.

பளையை அண்டியுள்ள சில இடங்களில் சதுப்பு நிலங்கள் காணப்படுகின்றன. இங்கே வளர்கின்ற மூச்சு வேர்த் தாவரங்கள் நீரரிப்பைத் தடுக்கின்றன. (இச் சதுப்பு நிலத் தாவரங்களில் நிலை கொள்ளும் உயிரினக் கூட்டங்களின் அடிப்படையில் கொக்குத்தீவு, வெளவால், நாரை தீவு போன்ற பெயர்கள் வழங்கப்படுவது கூடுதல் சுவாரஸ்யம்).

### கல்வி

பளைப் பிரதேசமும் கல்விக்கு முக்கியத் துவம் கொடுக்கும் பகுதியாகும். பளை மத்திய கல்லூரி, பளை/ றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை உள்ளிட்ட பல பாடசாலைகள் கல்விப்பணியை சிறப்பாக மேற்கொள்கின்றன. அதிலும் பளையில் (புலோப்பளை) மட்டும் அல்லாது இலங்கை யிலேயே முதலில் தோன்றிய பாடசாலை களில் ஒன்றாக விளங்குகின்ற பளை/ றோ.க.த.க பாடசாலை 1672ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பளை நகரப் பகுதியில் இயங்கும் பளை மத்திய கல்லூரியானது 1952இல் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது இப் பாடசாலை ஆரம்பப் பிரிவு, இடை நிலைப் பிரிவு எனப் பிரிக்கப்பட்டு தனித் தனியே இயங்குவதும் குறிப்பிடத்தக்கது. மேலும் பளை மத்திய கல்லுலீரியின் ஆரம்பப் பிரிவிற்கு ஓர் தற்காலிகக் கட்டடம் ஒன்றின் தேவையும் உணரப்படுகின்றது.

### நகர்ப்புறம்

பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் முக்கிய நகரம் பளை நகரம். பல தடவைகள் இடப்பெயர்வால் பாதிக்கப்பட்டு தற்போது புதுப் பொழிவுடன் மீண்டெழுந்து வருகின்றது. நகரின் மத்தியில் இரு மாடி பஸ் தரிப்பிடம் காணப்படுகின்றது. ஆயினும், அதன் நிர்மாணப் பணிகள் இன்றும் முடியாத நிலையிலேயே காணப்படுகின்றது.

ஆரம்பத்தில் நகர்ப் புறத்தில் புஹாரி ஹோட்டல், கணபதிப்பிள்ளை, சுல்தான் கடை, லெப்பை கடை என்று சில கடைகள் இருந்தாலும், தற்போது கடைகள் கொஞ்சம் கொஞ்சமாக வளர்ச்சி அடைந்து வருவதைக் காணக் கூடியதாக உள்ளது. பிள்ளையார் விலாஸ்சைவ உணவிற்கும்,குழந்தை உணவகம் அசைவ உணவிற்கும் இங்கே பிரபலம். வைத்தியசாலைகள், தனியார் கல்வி நிலையங்கள், கோவில்கள், பாடசாலைகள், சந்தை, வங்கி, ரயில் நிலையம் என்று எல்லா வசதிகளும் நகரைச் சூழ உள்ளதால், பளை வாசிகள் சௌகரியமாக உணர்கிறார்கள்.


### தொழில்கள்


பளையில் வாழ்ந்த மக்கள் ஆரம்பம் முதலே விவசாயத்தை பிரதான தொழிலாக கொண்டவர்கள். பிரதானமாக நெல்லையும் (942 ஹெக்டேயர்), உப பயிர்களாக மிளகாய், கௌப்பி, உழுந்து போன்ற காய்கறிப் பயிர்களையும(இன்னாசி,கொற்காடு; போன்ற கிராமங்கள்) பயிரிட்டுத் தன்னிறைவுடன் வாழ்ந்து வந்தார்கள். பளையைச் சுற்றியுள்ள ஊர்களான கிளாலி, அதனை அண்டிய கிராமங்களில் கடல் நீரேரிகளில் தொழில் செய்யும் மீனவர் குடும்பங்கள் வசிப்பவை.

சிறு அளவில் தும்புக் கைத்தொழில், கால்நடை வளர்ப்பு, பனை, தென்னை சார்ந்த தொழில்களும் இங்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சதுப்பு நிலப் பகுதிகளை அண்டியதாகவே கடல் நீரேரிகள் காணப்படுவதால் முதலை தாக்குதல்களுக்கும் முகம் கொடுக்க வேண்டிய நிலைமையே உள்ளது. செம்மூக்கன் போன்ற

தொடர்ச்சி அடுத்தபக்கம்...


பளை மத்திய கல்லூரி


புனித அந்திரேய ஆலயம்


பிரதேச வைத்தியசாலை

Search Facebook

Home



**Sugan Paris**

எங்களிடம் இரண்டு நாம்பன் மாடுகள் இருந்தன, ஒரு ஒற்றைத் திருக்கல் வ மாற்றுத் திறனாளியான அப்பா அதிலேதான் பாடசாலைக்குப் போய்வருவார்,ஒரு ந சாது, மற்றது கட்டுக்கு அடங்காது, அப்பா அந்தக் கட்டுக்கு அடங்காதவனை கொல்ல ஆச்சாரியாரான நாகன் என்பவரிடம் கூட்டிச் சென்றார் ,என்னையும் நாகர்மகன் அதன் கால்களுக்கிடையில் கயிறு எறிந்து அதை பக்கவாட்டில் வி அதன் விதையில் சுடு சாம்பல் தடவி இரண்டு இணைய கட்டைகளை வைத்து நலமடித்தார், மாடு மிகவும் கதறி பின் ஓய்ந்தது. அந்தக் கதறலில் அதன் கண் எ நோக்கி இருந்தது, இன்றும் அந்தக் கண்ணின் பார்வை என்னைத் துரத்துகின்றது. வயலை செய்யமுடியாத நிலை வந்தபோது வீட்டில் மிக வறுமையில் அந்த இரண்டு மாடுகளும் எமக்கு சோறிட்டது, சூடு மிதிக்க, உழவுக்கு என போய் அந்த ஜீவன்களின் உழைப்பில்தான் எமக்கு சிறிது உணவு கிடைத்தது.



**Parathan Navaratnam**

ஊரில் உழாத மாடு.

யூதரான Henry Kissinger இஸ்ரேலுக்கு விஜயம் செய்த போது அவருக்கு கோட் சூட் தைக்க யூதர்கள் நல்லதொரு துணியொன்றை பரிசளித்தார்களாம்.

சந்தோசத்துடன் அதை வாங்கிய கிஸ்சின்ஜர் அமேரிக்கா திரும்பியதும் அதை தைக்க டெய்லரிடம் போனால் துணி பத்தாது என்றுவிட்டார். பிறகு கிஸ்சின்ஜர் தனது பிறந்த நாடான ஜெர்மனுக்கு அதை கொண்டு போனால் அங்கும் கோட்டுக்கும் சூட்டுக்கும் உது போதாது என்றுவிட்டார்கள். இங்கிலாந்து ,பிரான்சு என்று அலைந்து எங்கும் சாத்தியமில்லாமல் போக இஸ்ரேலுக்கு திரும்ப போயிருக்கின்றார். டெயிலர் அடுத்த நாளே மிக அழகாக கோட் சூட் தைத்து கொடுத்துவிட்டார். அதிர்ச்சி அடைந்த கிஸ்சின்ஜர் டெய்லரிடம் போய் "இது எப்படி சாத்தியம்" என்று நடந்தவற்றை சொல்ல, அதற்கு இஸ்ரேலிய டெய்லர் சிரித்துக்கொண்டே, "அவர்களுக்கு நீங்கள் பெரிய ஆளாக இருக்கலாம் ஆனால் எமக்கு அப்படியல்ல" என்றாராம். விக்கியரின் புக்கையும் நாட்டில் அவியாது போக புலம் பெயர்ந்தவர்களிடம் அவிக்க தொடங்கியிருக்கின்றார்.



**Aruliniyan Mahalingam**

யார் கிட்டயும் இல்லாத ஒருகெட்ட பழக்கம்
என் கிட்டே இருக்கு, விஜய் படம் பயங்கர
மொக்கையா இருக்குன்னு படிச்சுப்
படிச்சுச் சொன்னாலும்,
அதை தியேட்டர்ல போய்ப் பாக்கிறது. # பைரவா.



**Annam Sinthu Jeevamuraly**

சென்னையில் வளசரவாக்கம் மாந்தோப்பு ஒன்றில், இரணுவ பயிற்சிக்காக வந்த ஜிணிலிளி வின் போராளிகள் தங்க வைக்கப்பட்டிருந்தனர். உத்தரப்பிரதேசத்தில் இராணுவ பயிற்சி முடித்து வந்த 300 பேருடன், புதிதாக பயிற்சி பெற வந்தவர்களும் அங்கு இருந்தனர். கிட்டத்தட்ட ஒரு 500 பேர்வரை தங்கியிருந்தோம் 1984 ம் ஆண்டு பங்குனி மதம் 17 ம் திகதி நானும் அந்த முகாமில் இணைந்து கொண்டேன். அந்த முகாம் கொட்டில் என்று அழைக்கப்பட்டது மாந்தோப்பை சுற்றி மொட்டை மாடி வீடுகள் அமைக்கப்பட்டு அவை முடிவுறாமல் பாதியில் நிறுத்தப்பட்டிருந்தன. இரவு வேளைகளில் கொட்டிலில் தூங்க இடமில்லாதவர்கள் அந்த மொட்டைமாடியில் தூங்கினார்கள் . எங்களுக்கு தரப்பட்ட கம்பளிப்போர்வையில் சுருண்ட படி இராணுவ பயிற்சிக்கு செல்வதற்கான கனவுடன் இருந்தோம் அப்பொழுத்தான் ஜிணிலிளி வின் பிரசித்தி பெற்ற கொட்டைக்கடி நோய் ஆரம்பமானது. கடலை எண்ணெயில் சமைக்கும் உணவு ஆரம்பத்தில் எங்களுக்கு ஒத்துக்கொள்ளவில்லை . பெரும்பாலருக்கு வயிற்றுப்போக்குடன் கொட்டைக்கடி நோயும் தொற்றிக்கொண்டது. இரண்டு கழிப்பறைகதான் அங்கிருந்து. வயிற்றுப்போக்கு அவை போதுமானதாக இருக்கவில்லை . எனவே மாந்தோப்பு வெளியிலேயே ஒருவருடன் ஒருவர் கதை பேசியபடியே காலைக்கடன்களை செய்து வந்தோம். அப்பிகா ராதாவுக்கு சொத்தாக எம்ஜிஆரால் எழுதிக்கொடுக்கப்பட்ட புறம்போக்கில் அமைந்திருந்த வீட்டுக்கு பின்னால்தான் வளசரவாக்கம் மாந்தோப்பு இருந்தது . யாரோ ஒரு போராளி அந்த வீட்டுக்கு நடிகர் பிரபுவுடன் அம்பிகாவும் ராதாவும் காரில் வந்து இறங்குவதை கண்டுவிட்டான்.

செய்தி தீ போலப்பரவியது . ஜிணிலிளி போராளிகள் நாங்கள் எல்லோரும் அப்பிகா ராதாவை பார்ப்பதற்கு அவர்களின் வீட்டை நோக்கி ஓடினோம். ஒரு மாபெரும் படையைக்கண்ட அவர்கள் திக்கு முக்காடிப்போனார்கள்.



**Vigneswaran Kajeepan**

யாழ் இளைஞர்களுடையே யல்லி கட்டு சம்பந்தமான விழிப்புணர்வு ஏற்பட்டமை தமிழர்கள் என்ற ரீதியில் மகிழ்சியாக இருக்கின்றது. ஆனால் எங்களுடைய இனப்பிரச்சனை சம்பந்தமான விடயங்கள்,காணி சுவீகரிப்பு விவகாரம்,அரசியல் கைதிகளின் விடுதலை போன்ற விடயங்களில் எங்களுடைய இளைஞர்களிடையே விழிப்புணர்வு வராமல் இருப்பது தான் கவலையாக இருக்கின்றது.


ஆபத்தான முதலைகள் அங்குள்ளதாக ஊரவர்கள் கூறுகிறார்கள்.


### போக்குவரத்து

பிரித்தானியரே பளையினூடாக செல்லும் A9 வீதியை அமைத்தனர். ஆரம்பத்தில் இருந்தே பிரதானவீதி தார் வீதியாகவும், உள்வீதிகள் மண் வீதிகளாகவும் இருந்தன. தற்போது உள்வீதிகள் சில கிரவல் வீதிகளாகவும், சீமெந்து வீதிகளாகவும் மாற்றம் பெற்றிருப்பதைக் காண முடிகின்றது.

போக்குவரத்து சேவைகள் இலங்கையில் அறிமுகமானதிலிருந்து பளை பிரதேசத்திற்கு போக்குவரத்து சிக்கல் ஏற்படுவதில்லை. யாழ்ப்பாணம், கிளிநொச்சி போன்ற அருகிலுள்ள நகரங்கள் மற்றும் தூர பிரதேசங்களிற்கு செல்வதற்கு, போக்குவரத்து மையமாக பளை இருந்தது ஊர் மக்களிற்கு வசதியாக அமைந்துவிட்டது. ரயில் போக்குவரத்து தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் இன்னும் வசதியாக உணர்கின்றனர்.

தூர பிரதேச போக்குவரத்து எவ்வளவு இலகுபடுத்தப்பட்டுள்ளதோ, அதேயளவு உள்பிரதேச போக்குவரத்து இங்கு கடினம். விடத்தல்பளை, கிளாலி, தனங்கிளப்பு போன்ற உள்பகுதிகளிற்கு செல்பவர்கள் நினைத்ததை போல பிரயாணம் செய்ய முடியாது. அதிக போக்குவரத்து வசதிகள் உள்பகுதிகளில் இல்லாமை அவசரமாக தீர்க்கப்பட வேண்டிய குறை.





சென்.அன்னரனீஸ் தேவாலயம்



தும்பு தொழிற்சாலை



இரட்டைக்கேணி அம்மன்

### வைத்தியம்

பளை நகரிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிய தான பாதையில் சற்றுத் தொலைவில் பளை பிரதேச வைத்தியசாலை சிறப்பாக செயலாற்றி வருகின்றது. 1948ம் ஆண்டு ஆரம்பமான இவ் வைத்தியசாலை பல இடப்பெயர்வுகளைச் சந்தித்து, முற்றாக அழிந்து தற்போது மீண்டும் பழைய இடத்தில் ஒரு பிரதேச வைத்தியசாலைக்குரிய சகல வசதிகளுடனும் இயங்கி வருவது இவ்வூர் மக்களுக்கு ஓர் வரப்பிரசாதமே.

அது மட்டுமல்லாமல் ஆயுர்வேத வைத்தியமும் அந்தக் காலத்தில் இங்கே பிரபலம். தங்கராசா என்ற ஆயுர்வேத வைத்தியர் ஒருவர் தூதன் குறிக்குப் பேர் போனவர். நோயாளியின் நிலைமையை வைத்தியரிடம் சொல்லச் செல்பவரை பார்த்தே, நோயாளி உயிர் பிழைப்பாரா, இல்லையா என்பதை இவர் சரியாகச் சொல்லி விடுவாராம்.

### இன்ன பிற

- பளையில் காணப்படும் நூலகம் சிறப்பான வசதிகளுடன் பல புத்தகங்களையும் தன்னகத்தே கொண்டு காணப்படுகின்றது. (1968இல் பிரேமதாசாவால் திறந்து வைக்கப்பட்டது). இருப்பினும் தற்போது 450 வரையானோரே இந் நூலக அங்கத்தவர்களாக இருக்கின்றனர்.
- இப் பிரதேசத்தில் கால்நடை வளர்ப்பு அதிகம் காணப்படுவதால் ஆடு, மாடு, நாய் போன்றவை பிரதான வீதியில் விபத்துக்கு உள்ளாவதை அவதானிக்க முடிகின்றது. பொதுமக்களும், சம்மந்தப்பட்ட அதிகாரிகளும் இதைக் கவனத்தில் எடுப்பது மிக்க நலம்.
- போரினால் பளைப் பிரதேசம் கடுமையாக பாதிக்கப்பட்டிருப்பதால், தற்போது அபிவிருத்தி திட்டஙகள் (வீட்டுத் திட்டம், கணவனை இழந்த மனைவிகளுக்கான சுய தொழில் உதவிகள் போன்றவை) சிறப்பான முறையில் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

### பிரபலம்

பளைப் பிரதேசமானது கூத்து, நாடகம் போன்ற பழம் பெரும் கலை வடிவங்களுக்குப் பிரபலமானதாக விளங்குகிறது. பளையிலும் அதனை அண்டிய ஊர்களிலும் பல நாடக ஆசிரியர்களும் அண்ணாவியர்களும் வாழந்துள்ளனர். அண்ணாவியர் தில்லையம்பலம் (முகாவில்), சின்னவி (சோறன்பற்று) கணபதிப்பிள்ளை, மணி மாஸ்ரர், ஆறுமுகம் போன்ற அண்ணாவிமார் இங்கே பிரபலம் பெற்று விளங்கினர். ஆறுமுகம் அண்ணாவியார் கூத்தை 132 மேடைகளுக்கு மேல் ஏற்றிய பெருமைக்குரியவர். அதேபோல் மிக்கேல் அலேஸ் என்பவரும் 'சிறந்த இளம் நடிகர்' பட்டம் பெற்ற ஒரு நாடகக் கலைஞராவார்.

### வரலாறு


பளைப்பகுதியின் தொன்மையயை எடுத்துக் காட்டும் வகையில் பல இந்ததுக் கோவில்கள் காணப்படுகின்றன. பளையையும், சுற்றியுள்ள ஊர்களையும் பண்டைய மன்னர்கள் ஆண்டமை வரலாற்றுப் பதிவுகளில் காணப்படுகின்றன. (அரசர்கேணி, அல்லிப்பளை, மல்வில், தம்பகாமம், இத்தாலில் போன்ற இடங்களில்) இவற்றினை விட போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் போன்றோரும் இவ் இடத்தில் நிலை கொண்டிருந்தமை பதிவாகியிருக்கின்றது.

பளையிலும், பளையை அண்டியுள்ள பிரதேசங்களான இயக்கச்சி, கிளாலி, கோவில் வயல் போன்ற பிரதேசங்களிலும் ஒல்லாந்தர்களுடைய கோட்டைகள் காணப்பட்டன. எனினும் தற்போது பளை மற்றும் இயக்கச்சியிலுள்ள கோட்டைகள் அழிவடைந்த விட்டன. வன்னி ராஜ்ஜிய காலப் பகுதியில் பளை உட்பட பச்சிலைப்பள்ளி பிரதேசம் ஒரு முக்கிய பாதுகாப்பு மையப் பகுதியாக அமைந்திருந்தது.

2000 ஆம் ஆண்டின் பின்னர் இலங்கையில் நடந்த அகோர மோதல்களில் பல பளையை அண்டிய பகுதிகளில்தான் நடந்தன. புகழ் பெற்ற இத்தாவில் தரையிறக்கம், முகமாலை நீண்டகாலமாக இராணுவம்புலிகளிற்கான முன்னரணாக திகழ்ந்தது, ஆனையிறவை கைப்பற்ற இயக்கச்சிக்கு அண்மையிலுள்ள இராணுவத்தின் நன்னீர் பெறுமிடங்களை தடுத்தமை உள்ளிட்ட பேசப்படும் சம்பவங்கள் நடந்த பிரதேசம் இது.

# வன்னியின் வாசலை திறக்க முயன்ற கருணா!


கருணா கரிகாலன்ரமேஷ் பதுமன் தமிழ்செல்வன் கௌசல்யன்


பிள்ளையான்

## இறுதி யுத்தத்தில் நடந்தது என்ன 13

பீஷ்மர்

இறுதி யுத்தத்தில் புலிகள் தோல்வியடைந்த விவகாரத்திலிருந்து கருணா பிளவை விலக்கிப்பார்க்க முடியாது. அதனால், கருணா பிளவு தொடர்பாக சற்று விரிவாக கடந்த இதழ்களில் பார்த்து வருகிறோம். அதன் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளோம்.

கருணா பிளவில் பேசப்பட வேண்டிய இன்னொரு விடயம் உள்ளது. முக்கியத்துவம் கருதி இதனை தனியாக குறிப்பிடுகிறேன். சம்பவ ஒழுங்கின்படி குறிப்பிடாமல், இதனை தனியாக பிரித்தெடுத்து ஏன் குறிப்பிடுகிறேன் என்பதை படிக்கும்போது வாசகர்கள் புரிந்து கொள்வார்கள்.

கருணா பிளவு சமயத்தில் திருகோணமலை மாவட்ட சிறப்பு தளபதியாக இருந்தவர் கேணல் பதுமன். தமிழ்நாட்டின் ஆறாவது பயிற்சியணியில் பயிற்சி பெற்றவர். நீண்ட காலமாக திருகோணமலை மாவட்ட தளபதியாக இருந்தவர். சொர்ணம் திருகோணமலை மாவட்ட தளபதியாக பணியாற்றிய சமயத்தில் வன்னியில் தங்கியிருந்து தலைமைச்செயலக பொறுப்பாளராக பணியாற்றினார். அந்த சமயத்தில் தலைவரின் தனிச்செயலாளர் என்ற குறிப்புடன்தான் பதுமனின் கையெழுத்துக்கள் இடப்பட்டன.

இப்படி பிரபாகரனின் நம்பிக்கையை பெற்ற பதுமன் கடைசிக்காலத்தில் எங்கு போனார்? கருணா விவகாரத்தில் அவரது பெயரும் அடிபட்டதே, அந்த கிளர்ச்சியில் அவரது பாத்திரம் என்ன என்பதை அறியும் ஆவல் உங்களிற்கு இருக்கலாம். விடயங்களை அறிந்து கொள்வதற்கு தொடர்ந்து படியுங்கள்.

பதுமன் நீண்டகாலமாக திருகோணமலை மாவட்ட தளபதியாக செயற்பட்டவர். பின்னர், யாழ்ப்பாண வீழ்ச்சியுடன் தளபதி சொர்ணத்திற்கு காற்று கழற்றப்பட்டு திருகோணமலைக்கு தளபதியாக அனுப்பப்பட்டார். அங்கிருந்த பதுமன் வன்னிக்கு அழைக்கப்பட்டு தலைமைச் செயலக பொர்றுப்பாளராக்கப்பட்டார்.

ஓயாதஅலைகள் மூன்றில் யாழ் தென்மராட்சி பகுதியை புலிகள் கைப்பற்றினார்கள். அங்கு நிலைகொண்ட அணிகளை வழிநடத்தும் பொறுப்பு சொர்ணத்திற்கு வழங்கப்பட்டது. அங்கு புலிகளின் அணிகள் பேரிழப்பை சந்தித்ததுடன், புலிகள் பின்வாங்கவும் நேரிட்டது. இதனால் கோபமடைந்த பிரபாகரன், சொர்ணத்தை தரைப்படையிலிருந்தே தூக்கி கடற்புலிகளிற்கு அனுப்பினார். கடற்புலிகளின் மன்னார் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார்.

இதன்பின்னர் சமாதான உடன்படிக்கை கைச்சாத்தாகும் சமயத்தில் பதுமன் மீண்டும்


பதுமன்

திருகோணமலை மாவட்ட தளபதியாக நியமிக்கப்பட்டார். இந்த சமயத்தில் வன்னியில் இருந்த கருணாவும் மட்டக்களப்பிற்கு அனுப்பப்பட்டிருந்தார். இதன் பின்னரே கருணா பிளவு நிகழ்ந்தது.

கருணா பிளவில் பதுமனின் பங்கு என்னவென்பதில் தெளிவான அறிக்கைகள் கிடையாது. ஆனால், அவர் சதியில் பங்காளராக இருக்கவில்லையென்ற முடிவிற்கு வரலாம். ஆனால் சதியை முன்னரே அறிந்திருந்தார். அறிந்திருந்தும் தலைமைக்கு தகவல் தரவில்லையென்பதே அவர் மீதான குற்றச்சாட்டு. அதனால்தான் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருந்தார்.

கருணா பிரிந்து செல்வதென முடிவுசெய்த போது அது பற்றி பதுமனுடன் பேசியதாக கூறப்படுகிறது. ஆனால், இதற்கு பதுமனின் பதில் என்னவென்பது தெரியவில்லை. ஆனால், சம்மதிக்கவில்லையென்று கொள்ளத்தக்க சம்பவங்களே நடந்துள்ளன.

கருணா சதியை பதுமனும் அறிந்திருந்தார் என்பதை புலிகள் அறிந்தது ஒரு சுவாரஸ்ய சம்பவத்தின் மூலம்.

வன்னியிலிருந்த கிழக்கு படையணிகள் மீண்டும் மட்டக்களப்பிற்கு அனுப்பப்பட்ட போதும், சுமார் முன்னூறு வரையான போராளிகள் வன்னியிலேயே நிலைகொண்டிருந்தனர். அவர்களிற்கு ஜிகாத்தன் பொறுப்பாக இருந்தார். இந்த அணி வடபோர்முனை கட்டளைபீடத்திற்கு உட்பட்ட நாகர்கோவில் பகுதியில் நிலைநிறுத்தப்பட்டிருந்தனர்.

விடுதலைப்புலிகள் அமைப்பை விட்டு பிரிவதென்ற உத்தியோகபூர்வ அறிவிப்பை விடுவதற்கு அண்மையாக ஜிகாத்தனுடன் கருணா அடிக்கடி தொடர்பு கொண்டார். ஜிகாத்தனின் கீழிருந்த அணியையும் புலிகளை விட்டு பிரித்தெடுப்பதே நோக்கம். ஜெயந்தன் படையணி வன்னியிலிருந்தாலும், தனது முழுமையான கட்டுப்பாட்டில் இருக்க வேண்டுமென்பதை கருணா அடிக்கடி வலியுறுத்தி வந்தார். ஜிகாத்தன் விசுவாசமுள்ள ஒரு தளபதி. அவர் தனது பேச்சை தட்டாமல் செயற்படுவார் என கருணா எதிர்பார்த்தார்.

புலிகள் அமைப்பை விட்டு பிரிவதாக கிழக்கிலுள்ளவர்கள் அறிவிப்பதைவிட, வடக்கில் நிலைகொண்டுள்ள கிழக்கு போராளிகள் அறிவிப்பதற்கு வலு அதிகம், புலிகளை அதிகம் நெருக்கடிக்குள் தள்ளும் என சதியின் பின்னணியில் இருந்தவர்கள் திட்டமிட்டார்கள். அதனால்தான் ஜிகாத்தனை முழு கட்டுப்பாட்டில் கொண்டு வர விரும்பினார்கள்.

புலிகள் அமைப்பை விட்டு பிரியும் உத்தியோகபூர்வ அறிவிப்பு விடுவதற்கு சிலநாட்களின் முன்னர் ஜிகாத்தனை தொடர்பு கொண்ட கருணா, புலிகள் அமைப்பை விட்டு பிரியவுள்ளதை சொல்லியுள்ளார். ஜிகாத்தன் மீதான நம்பிக்கையில் இதனை சொல்லியுள்ளார். இந்த விடயத்தை யாருடனும் பகிராமல், ஜிகாத்தன் தனது அணியுடன் புலிகளை விட்டு பிரிந்து வர வேண்டுமென்பதே அவருக்கு கொடுக்கப்பட்ட அறிவுறுத்தல்.

ஜிகாத்தன் விசுவாசான போராளிதான். ஆனால் அவர் தனிப்பட்ட கருணாவிற்கு விசுவாசமாக இருக்கவில்லை. அவர் புலிகளிற்கு விசுவாசமாக செயற்பட்டார். இந்த தகவலை உடனடியாக தலைமைப்பீடத்திற்கு அறிவித்தார். தகவல் அப்படியே பொட்டமானிற்கு பாஸ் செய்யப்பட்டது. அதன் பின்னர் பொட்டம்மானே இதனை கையாண்டார்.

ஜிகாத்தனை பொட்டம்மான் வழிநடத்த ஆரம்பித்தார். கருணாவின் வழியிலேயே சென்று தகவலை பிடுங்குவதுதான் திட்டம்.

நாகர்கோவிலிற்கு அண்மையில் புலனாய்வுத்துறை தொலைத்தொடர்பு நிலையமொன்று அவரமாக அமைக்கப்பட்டது. அணியிலுள்ள போராளிகளிற்கு சந்தேகம் எழாதவிதத்தில் அங்கு ஜிகாத்தன் வரத் தொடங்கினார். அங்கிருந்து கருணா அணி முக்கியஸ்தர்களுடன் பேச ஆரம்பித்தார். கருணா அணியினருடன் இணைந்து செயற்பட சம்மதிப்பவரை போல பேசி, கருணா அணியினரின் திட்டம், யார் யாரெல்லாம் அதில் சம்பந்தப்பட்டவர்கள் என்பதை அறிந்து கொள்வதே பொட்டம்மானின் திட்டம். இந்த திட்டத்தில் சிக்கிக் கொண்டவர்தான் பதுமன்!

பொட்டம்மானின் கண்காணிப்பில் பலநாட்கள் ஜிகாத்தன் தொலைத்தொடர்பு கருவிகளூடாக கருணா, மற்றும் அவரது முக்கியஸ்தர்களுடன் பேசினார். விடுதலைப் புலிகள் அமைப்பை விட்டு விலகி கருணாவுடன் இணைய சம்மதம் தெரிவித்தார். ஆனால் எப்படி வன்னியிலிருந்து கிழக்கிற்கு வந்து சேர்வதென ஜிகாத்தன் கேட்டார்.

நாகர்கோவில் முன்னரணில் நிலைகொண்டிருந்த ஜெயந்தன் படையணி போராளிகள் அத்தனை பேரும் ஆயுதங்களை கீழே போட்டுவிட்டு இராணுவத்திடம் செல்லுங்கள், அவர்களுடன் பேசியாயிற்று மிச்சத்தை அவர்கள் கவனித்து கொள்வார்கள் என்ற பதில் வந்தது.

இந்த பதிலின் மூலம், சதியில் அரச பங்களிப்பை புலிகள் புரிந்து கொண்டனர். ஆனால் ஜிகாத்தன் இத்துடன் முடிக்கவில்லை. "இராணுவத்திடம் சென்ற பின் என்ன செய்வது, இராணுவத்துடன் தங்கியிருப்பது, செயற்படுவது நல்லதல்ல, அதை போராளிகளும் விரும்பமாட்டார்கள்" என சொல்லியுள்ளார்.

"வடக்கில் இராணுவத்துடன் செயற்பட வேண்டியதில்லை. இராணுவம் உங்களை கிழக்கிற்கு அனுப்பிவைக்கும்" என்ற பதில் வந்தது.

எப்படியென கேட்டார் ஜிகாத்தன்.

"நீங்கள் இராணுவத்திடம் செல்லுங்கள். அவர்கள் கடல்மார்க்கமாக உங்களை அழைத்து வந்து வாகரைக்கு அண்மையாக ஒரு இடத்தில் இறக்கிவிடுவார்கள். நீங்கள் எங்களிடம் வந்து சேருங்கள்" என பதில்



ஜெயந்தன் படையணி இலச்சினை

வந்தது.

இந்த இடத்தில்தான் பொட்டம்மானின் புலனாய்வு மூளை வேலை செய்தது. அது திருகோணமலை தளபதி பதுமனின் ஆதிக்கம் நிறைந்த பகுதி. ஏன் அந்தப்பகுதியை தேர்ந்தெடுத்தார்கள்?

உடனே ஜிகாத்தன் மூலம் அடுத்த கேள்வி கேட்கப்பட்டது. "இது பதுமன்ணையாட்களின் இடம். நாங்கள் உள்ளே வர அவர்கள் எப்படி அனுமதிப்பார்கள்?"

"அதைப்பற்றி நீங்கள் யோசிக்க வேண்டாம். பதுமனிற்கு அனைத்தும் தெரியும். நீங்கள் வருவதை அவர் தடுக்க மாட்டார்"

இந்தப்பதில்தான் பதுமனிற்கும் இதில் தொடர்புள்ளதை புலிகளிற்கு முதன்முதலாக அறிந்து கொண்டார்கள்! (தொடரும்)




## கறுத்த உதடுகள் சிவக்க...

முட்டையின் வெள்ளைக் கருவுடன் தேன் கலந்து தடவினால் உதடுகள் சிவப்பாக மாறும். இதனை ஒரு நாள் மட்டும் செய்தால் போதாது. தினமும் செய்து வந்தால் கூடிய விரைவில் நல்ல பலன் கிடைக்கும்.

கொத்த மல்லிச் சாற்றை தினமும் இரவு படு;க்கச் செல்வதற்கு முன் உதடுகளில் தடவி வருவீர்களானால் லிப்ஸ்டிக் போடாமலே உதடுகள் சிவக்கும்.

பத்துக் கிராம் ரோஜா இதழ்களையும் பத்துக் கிராம் டீத் துலீளையும் ஐம்பது மி.லி தண்ணீரில் போட்டு கொதிக்க வைத்துக் கொள்ளுங்கள். இதனை ஆற வைத்து உதடுகளுக்கு ஒத்தடம் கொடுத்து வாருங்கள். கறுத்த உதடுகள் ஜெர்ரி பழ சிவப்பாகும்.



## கோழிச்சாதம்

**தேவையானபொருட்கள் :** பச்சையரிசி 1/2 k.g, கோழி இறைச்சி 1/2 k.g (தசை), தேங்காய் 2, கறித் தூள் 4 மே.க, சின்ன வெங்காயம் 1/4 k.g, இறைச்சித் தூள், 1தே.க, எலுமிச்சைம் பழம் 2 உப்பு தேவையான அளவு

செய்முறை :

கோழி இறைச்சியை எலும்பு நீக்கி அரைக் கிலோ தசையை மட்டும் எடுத்துச் சிறு சிறு துண்டுகளாக வெட்டி வைத்துக் கொள்க. வெங்காயத்தை துப்புரவாக்கி அளவான துண்டுகளாக வெட்டி வைத்துக் கொள்க. தேங் காயைத் துரவி அளவிற்குத் தண்ணீரைச் சிறிது சிறிதாக விட்டு 4 தம்ளர் முதலாம் இரண்டாம் பால்களை எடுத்து வைத்துக் கொள்க. மிகுதி தேங்காய்ப் பு+வினில் 2 போத்தல் தண்ணீர் விட்டுப் பாலைப் பிழிந்தெடுத்துப் பானையில் விட்டுக் கொதிக்க வைக்கவும். பால் கொதித்தவுடன் அரிசி, இறைச்சி, வெங்காயம் என்பவற்றைப் போட்டு அவியவிடவும். ஆரிசி முக்கால் பதமாக அவிந்த பின்பு தூளையிட்டு கரண்டியால் நன்றாகச் சேர்த்து சிறிது நேரம் மூடி அவியவிடவும். சாதம் ஓரளவு இறுகத் தொட்ங்கும் போது 4 தம்ளர் பாலையும் இறைச்சித் தூளையும் இட்டுச் சேர்த்து அடிப்பிடிக்காமல் நன்கு துளாவிக் காய்ச்சி. இறுகியதும் இறுக்கித் தேசிப் புளிவிட்டு நன்கு துளாவிச் சேர்த்துச் சிறிதுநேரம் மூடி வைத்தெடுத்துச் சூட்டுடனனேயே பரிமாறலாம்.



## வயது உயர இல் வாழ்க்கையில் பெண்கள் எப்படி?

பெண்களிடம் ஒவ்வொரு வயதிலும் ஒவ்வொரு மாற்றங்கள் உண்டாகும். இதற்கு காரணம் ஆண்களை காட்டிலும் பெண்களின் உடலில் தான் அதிக ஹார்மோன் மாற்றங்கள் உண்டாகின்றன. வயதுக்கு வரும் போது கருத்தரிக்கும் போது மாதவிடாய் காலங்களில் மாதவிடாய் நிற்கும் தருவாய் என பெண்களின் வாழ்க்கையில் 15 வயதில் இருந்து 45 வயது வரை இது போன்ற மாற்றங்கள் நீடிக்கும். இந்த இடைப்பட்ட காலத்தில் அவர்கள் 10 20 வருடங்கள் கணவனுடன் கழிக்கிறார்கள். இந்த வயதுகளில் பெண்களிடம் மாற்றங்கள் தென்படும் போது கணவன்மார்கள் அவர்களை மிகுந்த அன்புடனும் அனுசரிப்புடனும் பார்த்துக் கொள்ள வேண்டியது அவசியம்.

நாற்பது வயதுக்கு மேல் தான் பெண்களுக்கு மாதவிடாய் சுழற்சி நிற்க ஆரம்பிக்கும் 45 50 பெரும்பாலானவர்களுக்கு மாதவிடாய் நின்றுவிடும். ஒருசிலருக்கு அரிதாக 55 வயதுகளில் மாதவிடாய் நிற்கலாம். இதன்பால் தான் பெண்களிடம் அதிக மனநல மாற்றங்கள் உண்டாகின்றன.

பொதுவாகவே பெண்களுக்கு மாதவிடாய் காலத்தில் மூட்ஸ்விங் எனப்படும் மனநல மாற்றங்கள் அதிகரிக்கும். இது மாதவிடாய் முற்றிலுமாக நிற்கும் காலத்தில் அதிகமாக இருக்கும். அவசியமின்றி கோபப்படுவார்கள். அளவுக்கு மீறி அழுவது சோகமாக காணப்படுவது போன்றவை இருக்கும். திடீரென இன்பமாக இருப்பது திடீரென சோகமாக மாறுவது போன்ற நிகழ்வுகளும் உண்டாகும். இது இயல்பு தான். மாதவிடாய் நின்ற சில காலத்தில் இவர்கள் தானாக சரியாகிவிடுவார்கள். இதற்காக தனியாக மருத்துவம் அல்லது மருந்துகள் என்று தீர்வுக் காண செல்ல தேவை இல்லை.

இந்த நேரத்தில் பெண்களுக்கு தேவையான ஒன்று அனுசரித்து போவது தான். கணவர்கள் அவர்கள் கோபப்படும் போதோ சோகமாக இருக்கும் போதோ திட்டாமல் அவர்களை அனுசரித்து நீங்கள் அவர்களை பக்குவப்படுத்தி செல்ல வேண்டும்.

எதிர்த்து நீங்கள் கோபப்படுவது அவர்களின் மனதை மேலும் புண்படுத்தும் அதிக தாக்கத்தை உண்டாக்குமே தவிர தீர்வை அளிக்காது. பதில் தெரிந்தே ஆகவேண்டும் ஏன் சோகமாய் இருக்கிறாய் கோபப்படுகிறாய் என கேள்விகள் கேட்காமல் நீங்களாகவே இதை புரிந்துக் கொண்டு நடக்க வேண்டும்.

அதிக அன்பை வெளிப்படுத்துங்கள். உண்மையில் இந்த மாதவிடாய் காலத்தில் இருந்து வெளிவந்த பிறகு மனைவி உங்கள் மீது அதிக அன்பை வெளிப் படுத்துவார். எனவே அவர் அவதிப்படும் அந்த காலத்தில் நீங்கள் செலுத்தும் அன்பு இரட்டிப்பு மடங்காக உங்களுக்கே திரும்ப வரும்.




தேன், வெல்லம் போன்றவற்றில் இயற்கையாகவே இனிப்புத் தன்மையுள்ளது. நீங்கள் தினமும் வீட்டில் பயன்படுத்தும் வெள்ளை சீனியைக் காட்டிலும் இயற்கை யாகக் கிடைக்கும் தேனில் இனிப்புத் தன்மை அதிகம். இது தவிர காபோவைதரற் சத்தென்பது அரிசி, உருளைக் கிழங்கில் இருப்பது போன்றது. ஒரு மேசைக் கரண்டி தேனில் 17ப காபோவைதரற் உள்ளது. எனவே தேன் சாப்பிட்டவுடன் குருதியில் சக்கரையின் அளவு அதிகரிக்கும். காபோவை தரற் அளவை அதிகளவு எடுத்துக் கொள்ளும் போது இதே போலவே குருதியில் சக்கரையின் அளவு உடனடியாக அதிகரிக்கும். வெந்நீரில் எலுமிச்சை சாறுடன் தேன் கலந்து சாப் பிட்டால் தொப்பை குறையும் என்பதெல் லாம் உண்மையில்லை. தொலைக் காட்சி விளம்பரங்களில் காட்டுவது போல தொப்பை குறைய தனியாக உடற் பயிற்சிகள், கைளுக்கு தனியாக, கால்களுக்கு தனியாக உடற்பியிற்சி செய்வது தவறானது. அதே போல் உணவுப் பழக்கத்தால் மட்டும் உடல் எடையோ, தொப்பையோ குறையாது. அப்படி “டயட்” செய்வது ஆரோக்கியத்தைக் குறைத்துவிடும். நல்ல ஊட்டச் சத்துள்ள, சமச்சீரான உணவுச் சாப்பாடு, உடல் முழுவதும் சீரான அசைவைத் தரக் கூடிய உடற்பயிற்சியை தினமும் முறையாகச் செய்ய வேண்டும். இதனால், உடலில் உள்ள கலோரி குறையும். உயரத்திற்கு ஏற்ற உடல் எடையுடன் இருக்க லாம். தொப்பையும் குறையும். தினமும் 30-45 நிமிடம் நடைப் பயிற்சிக்கு இணை ஏதமில்லை.

ரைப் 1, ரைப் 2 நீரழிவுகள் உள்ளன. 2 நீரழிவு நோய் இருப்பவர்களும் இதைக் கடைப்பிடியுங்கள். ரைப் 1 (இன் அலின் சுரக்காது), ரைப் 2 (சுரக்கும் இன் அலின் சரியாக வேலை செய்யாது). ஆனால் நடைப் பயிற்சி செய்யும் போது இன் அலின் சீராக வேலை செய்யும். “அமெரிக்கன் ஹார்ட் அசோசியேவுன்” போன்ற சர்வதேச அமைப்புக்கள் வாரத்திற்கு மூன்று நாட்கள் நடைப் பயிற்சி, 2 நாட்கள் தசைகளை வலுப்படுத்தும் பயிற்சி செய்தாலே போதுமென்று கூறுகின்றது. அப்படி செய்யும் போது அடிப்படை உடல் செயல்பாடு அதிகரிக்கும் உடலின் உள்ளுறுப்புக்கள் ஆரோக்கியமாக இருக்கும்.

## விடுகதை

1. மரத்திற்கு மரம் தாவுவான் குரங்கு அல்ல பட்டை தீட்டியிருப்பான் சாமியார் அல்ல அவன் யார்?
2. கறுத்த ரோஜா மொட்டு கனத்த மேகம் கண்டு கணத்தில் இதழ் விரித்திடும் காத்திடும் பின் சாய்ந்திடும் அது என்ன?
3. நெஞ்சிலே ஒரு கல் வீட்டிலே ஒரு கல் வானத்திலே ஒரு கல் அவை எவை?
4. பார்த்தவர் இருவர் எடுத்தவர் ஐவர் உண்டவரோ ஒருவர் அவர்கள் யார்?
5. வாயிலிருந்து நூல் போடுவான் மந்திரவாதியும் இல்லை கிளைக்குக் கிளை தாவுவான்; குரங்கும் இல்லை வலைவிரித்துப் பதுங்கியிருப்பான் வேடனும் இல்லை அவன் யார்?
6. ஊளையிட்டாலும் ஊரைச் சுமந்து செல்வான் அவன் யார்?
7. கல்லிலே காய்க்கும் பூ காய்ந்தால் மலரும் பூ பூவிலே இது வெள்ளைப்பூ. என்ன பூ?
8. எண்ணெய் இல்லை திரியும் இல்லை ஏற்றி வைக்க ஆளும் இல்லை ஆனாலும் தெரியுது வெளிச்சம். அது எது?
9. கருப்பு நிறமுடையவன் கபடம் அதிகம் கொண்டவன் கூவி அழைத்தால் வந்திடுவான் கூட்டம் சேர்த்தும் வந்திடுவான் அவன் யார்?
10. அரிசி போல் பூ பூக்கும்.அம்மாடி எனச் சொல்லும் காய் காய்க்கும் அது என்ன?

***விடைகள்:***

*1. அணில் ,2. குடை,3. விக்கல், உப்புக்கல், கறுக்கல்.*
*4. கண்கள், விரல்கள், நாக்கு. ,5. சிலந்தி,6. தொடருந்து, 7. சுண்ணாம்பு 8. சூரியன், 9. காகம், 10. மிளகாய்*

## கொஞ்சம் சிரியுங்கள்

முல்லா ஒரு நாள் தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தார்.
அவரைக் காண வந்த அவரின் நண்பர் 'என்ன முல்லா உன் மனைவி இறந்த போது கூட நீ இப்படி அழவில்லை ஒரு ஆடு காணாமல் போனதற்கு இப்படி அழுகிறாயே...!' என்று கேட்டார்.
அதற்கு முல்லா 'என் மனைவி இறந்த போது ஊர் மக்கள் அனைவரும் நீ ஒன்றும் கவலைப்படாதே! வேறொரு திருமணம் செய்து வைக்கிறோம் என்றார்கள். ஆனா ஆடு காணாமல் போனதற்கு வேறு ஆடு வாங்கித் தருகிறோம் என்று யாரும் சொல்லவில்லையே...!' என்றார்.

## கொஞ்சம் சிரியுங்க

கோயில் தர்மகர்த்தா ஒருவர் கோயிலில் வேலை பார்த்த ஏழை ஓதுவார் ஒருவருக்கு ருத்திராட்ச மாலையில் தங்கத்தால் ஆன ஒரு வில்லையும் இணைத்துப் பரிசு ஒன்று அளித்தார்.
சில நாட்களில் அந்த ஓதுவார் கழுத்தில் அந்த வில்லை காணவில்லை.
தர்மகர்த்தா அவரிடம் 'எங்கே தங்க வில்லையைக் காணவில்லை?' என்று கேட்டார்.
அதற்கு ஓதுவார் 'தங்கவில்லை அய்யா' என்றார்.

# வித்தியாச பிறப்பு



ஜிங்ஜு ஒரு வித்தியாசமான பிறவி. தான் ஆணழகனாய், அறிவுள்ளவனாய் பிறந்திருந்தால் இளவரசியைத் திருமணம் செய்திருக்கலாம் என்று பகல் கனவு காண்பவன். தன்னிடமுள்ள குறைகளை எண்ணி எப்போதும் வருத்தத்திலேயே இருப்பவன். மருந்திற்கு கூட அவன் முகத்தில் சிரிப்பைப் பார்க்க முடியாது. தெருவில் யாராவது சிரித்தால், அவர்கள் தன்னைப் பார்த்துதான் சிரிப்பதாக நினைத்துக் கொண்டு கோபமடைந்து, அவர்களிடம் சண்டைக்கு செல்வான்.

இறுதியில் ஒருநாள் தனது குணத்தை புரிந்து கொள்ள இயலாமல், ஜென் மாஸ்டரிடம் கேட்டு மனத் தெளிவடைய நினைத்தான்.

'யார் சிரித்தாலும் எனக்குக் கோபம் வருகிறது. ஏன் அப்படி?' என்று மாஸ்டரிடம் கேட்டான். அதைக் கேட்டவுடன் ஜென் மாஸ்டர் ஹஹஹாஹா' என்று சிரித்துக் கொண்டே சென்று விட்டார்.

ஜென் மாஸ்டர் எதற்கு சிரித்தார்? என்ற காரணம் புரியாமல் ஜிங்ஜு மிகவும் குழம்பினான். அதை நினைத்து, நினைத்து மூன்று நாட்களாக ஊண் உறக்கமின்றி குழப்பத்தில் ஆழ்ந்திருந்தான்.

அடுத்த நாள் ஜென் மாஸ்டரிடம் சென்று 'அன்று என்னைப் பார்த்து ஏன் மாஸ்டர் சிரித்தீர்கள்? நான் வருத்தத்தில் மூன்று நாட்களாகச் சாப்பிடவே இல்லை' என்று கூறினான்.

உடனே ஜென் மாஸ்டர் 'முட்டாளே! இப்போதாவது உனக்குப் புரிகிறதா? நீ கோமாளியை விடச் சிறியவன் அது தான் உனது பிரச்சினை' என்று கூறினார்.

இதைக் கேட்ட ஜிங்ஜு அதிர்ந்து போனான்.

'நான் ஒரு கோமாளியை விட சிறியவன் என எக்காரணத்தால் குறிப்பிட்டீர்கள்?' என்று கோபத்துடன் கேட்டான்.

அதற்கு ஜென் மாஸ்டர் 'கோமாளியாவது பிறர் சிரிப்பதைக் கண்டு மகிழும் தன்மையுடையவன். ஆனால் நீ மற்றவர்கள் சிரிப்பதை எண்ணி வருந்திக் குழப்பத்துடன் இருக்கிறாய். இப்போது சொல் நீ கோமாளியை விட சிறியவன்தானே' என்றார்.

இதைக் கேட்ட ஜிங்ஜு தனது தவறை உணர்ந்து குழப்பம் தீர்ந்த சந்தோஷத்தில் சிரித்தான்.



# பைத்தியத்தனமான கேள்வி

பெர்னாட்ஷாவைப் பார்த்து அவருடைய நண்பர் ஒருவர் 'பெர்னாட்ஷா திடீரென்று உங்களுக்குப் பைத்தியம் பிடித்து விட்டது என்று வைத்துக் கொள்வோம். அப்போது நீங்கள் என்ன செய்வீர்கள்?' என்று கேட்டார்.

அதற்குப் பெர்னாட்ஷா 'கடவுளுக்கு நன்றி சொல்வேன்' என்றார்.

குழப்பமடைந்த நண்பர் 'கடவுளுக்கு நன்றியா? ஏன்?' என்று கேட்டார்.

'பைத்தியக்காரத்தனமான கேள்விகளைக் கேட்கும் உங்களைப் போன்றவர்கள் என்னை நெருங்கப் பயப்படுவார்கள் அல்லவா? அதனால்தான்' என்றார் ஷா அமைதியாக. அந்த நண்பர் அசந்து போய்விட்டார்.




## எறும்பு

Leafcutter Ant வகை எறும்புகள் வலிமை மிக்கவை. தம்மை விட 50 மடங்கு அதிகமாக பாரத்தை சுமக்க வல்லன. சாதாரணமாக எங்களுடைய கண்களுக்கு புலப்படாத தாடையின் பலத்தால் தான் தன்னை விட 50 மடங்கு இலையைக் கூட காவிச் செல்கின்றன.

## பொன்மொழிகள்

1. பசித்தவன் ஒருவனுக்கு வயிறு நிறைய நீ உணவளிப்பது மிகச்சிறந்த தர்மமாகும்.
2. தன் அடிமைகளின் மீதும் பணியாட்களின் மீதும் தன் அதிகாரத்தை தவறாக பிரயோகித்தவன் சுவனத்தில் நுழைய மாட்டான்.
3. நோயாளிகளை நலம் விசாரியுங்கள்.
4. உங்களில் ஒவ்வொருவரும் தன் சகோதரனின் கண்ணாடியாவார். எனவே ஒருவர் தன் சகோதரன் துன்பத்தில் சிக்கி இருப்பதை கண்டால் அதனை அவர் நீக்கி விடட்டும்.
5. உனது தந்தையின் அன்பை நீ பாத்துக்காத்து கொள். அதை முறித்து விடாதே அவ்வாறு அதை முறித்து கொண்டால் இறைவன் உனது ஒளியை போக்கி விடுவான்.
6. இறைவனின் உதவி என்னும் கை ஒன்றுப்பட்ட மக்களின் மீதிருக்கிறது.
7. உங்களில் இறந்தவர்களின் நற்செயல் பற்றியே கூறுங்கள்.
8. இறைவனை அஞ்சுங்கள். உங்கள் மக்களிடையே நீதமாக நடந்து கொள்ளுங்கள்.
9. பெருமை அடிப்பவன் சுவனத்தில் நுழைய மாட்டான்.
10. நீங்கள் விரும்புவதை உண்ணுங்கள். விரும்புவதை அணியுங்கள். ஆனால் ஒரு நிபந்தனை உங்களிடம் கர்வமும் வீண்விரயமும் இருக்கக் கூடாது.
11. இறுதி தீர்ப்பு நாள் கொடுமைக்காரனுக்கு இருள் மிக்கதாக இருக்கும்.
12. குத்துச்சண்டையில் அடுத்தவனை வீழ்த்துபவன் வீரன் அல்ல. மாறாக கோபம் வரும் போது தன்னைத்தானே அடக்கி கொள்பவனே வீரன் ஆவான்.
13. எவரையும் பழித்து காட்டுவதை நான் விரும்பவில்லை.
14. புறம் பேசுவது விபச்சாரத்தை விட கடுமையான பாவமாகும்.
15. கோள் சொல்பவன் சுவனம் நுழைய மாட்டான்.
16. நெருப்பு விறகைச் சாம்பலாக்கி விடுவதைப் போல் பொறாமை நற்செயல்களை சாம்பலாக்கி விடும்.
16. தன் நாவையும் வெட்கத்தலத்தையும் ஒருவர் பாதுகாத்து கொள்வதாக பொறுப்பேற்றால் அவருக்கு சுவனம் கிடைத்திட நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன்.
17. நாவை அடக்கு. உன்னால் தீய உணர்வுகளை அடக்க முடியும்.
18. தீமைக்கு பின் அதை அழிக்கவல்ல நன்மையை செய்யுங்கள்.
19. மௌனம் சாதிப்பது அறிவு நிறைந்த செயல்.





# யா/அச்சுவேலி மத்திய கல்லூரி

"என்றும் ஒளிரும் தீபம்" என்ற மகுட வாசகத்துடன் அச்சுவேலி மாணவர்களின் கலங்கரை தீபமாய் கல்வி ஒளியை வாரி வழங்கிக் கொண்டிருக்கின்றது யா/அச்சுவேலி மத்திய கல்லூரி. அச்சுவேலி நகரின் மத்தியில் அழகான கட்டடங்களின் அணிவகுப்புடன் அமைதியாக காட்சி தருகின்றது இப் பாடசாலை. அச்சுவேலி, தம்பாலை, தோப்பு, நவக்கிரி, ஆவரங்கால் போன்ற இடங்களிலிருந்து வரும் மாணவர்களை அரவணைத்து அவர்களின் கல்வி வளர்ச்சியை நோக்காகக் கொண்டு செயற்படும் இப் பாடசாலையின் வளர்ச்சியில் தற்போது 770 மாணவர்களும், 50 ஆசிரியர்களும் பங்காற்றிக் கொண்டிருக்கின்றனர்.

1892ஆம் ஆண்டு இப் பாடசாலை தென்னிந்தியத் திருச்சபையின் ஆதரவுடன் கே.எம் சாண்டேஸ் போதகரினால் அச்சுவேலி அமெரிக்கமிஷன் ஆங்கிலப் பாடசாலை என்ற பெயருடன் ஆண்கள், பெண்கள் என இரு பாடசாலையாக இயங்கியது. 1920அம் ஆண்டளவில் யாழ்ப் பாணக் கல்லூரி நிர்வாகத்துடன் இணைந்து அச்சுவேலி கிறிஸ்தவக் கல்லூரி என்று பெயர் மாற்றப்பட்டு 8ம் வகுப்பு வரை கற்பிக்கப்பட்டது. 1960ஆம் ஆண்டு இப் பாடசாலை அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்டு பின் 1971ஆம் ஆண்டில் அச்சுவேலி மகா வித்தியாலயமாக பெயர் மாற்றப்பட்டது. 30 வருடங்களின் பின் 2001இல் மீண்டும் இந்தப் பாடசாலை தரம் உயர்த்தப்பட்டு இற்றைவரை தனது பணியைச் சிறப்பாகத் தொடர்கின்றது. (இங்கே விசேடமாக 7 மாணவர்களைக் கொண்ட விசேட கல்விப் பிரிவும் இயங்கி வருவது இன்னுமொரு சிறப்பாகும்.)

இக் கல்லூரியின் முதல் மாணவராக விளங்கிய சுவாமி ஞானப்பிரகாசிரியர் காலத்திலிருந்து இன்று வரைக்கும் பல மாணவ மாணவியர் தமது திறமைகளை கல்வியிலும், விளையாட்டிலும் சிறப்பாக வெளிப்படுத்திக் கொண்டு வருகின்றனர். அண்மையில் நடைபெற்ற 2015ஆம் ஆண்டுக்கான க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் செல்வன் தி.யதுசன், செல்வன் இ.சிறீராம் ஆகியோர் 8 ஏபி பெறுபேற்றைப் பெற்று இப் பாடசாலைக்குப் பெருமை தேடிக் கொடுத்துள்ளனர். அதே போல் இணைப்பாட விதான செயற்பாடுகள், விளையாட்டுக்கள் போன்றவையும் இங்கே சிறப்பாக முன்னேடுத்துச் செல்வதினைக் காண முடிகின்றது. 2013ஆம் ஆண்டு அகில இலங்கைச் சித்திரப் போட்டியில் இக் கல்லூரி மாணவனான செல்வன் கு.ராம்கி தேசிய மட்டத்தில் சிறப்பு பரிசு பெற்றார். அத்துடன் 19 வயதுக்கு உட்பட்ட ஆண்கள் பளு தூக்கும் போட்டியில் (94 கிலோ கிராம் எடைப் பிரிவில்) தேசிய மட்டத்தில் முதலிடத்தை இக் கல்லூரி மாணவரான செல்வன்.கு.டுசாந் பெற்றுக் கொண்டதுடன் 2104ஆம் ஆண்டுக்கான பளு தூக்கல் போட்டியிலும் தேசிய மட்டத்தில் கலந்து கொண்டார்.


விளையாட்டுத் துறையைப் பொறுத்த வரையில் இக் கல்லூரி மாணவர்கள் துடுப்பாட்டம், கரப்பந்து, எல்லே போன்ற விளையாட்டுக்களில் கோட்ட மட்டம், மற்றும் வலய மட்டங்களில் சாதனைகளைப் புரிந்து வருகின்றனர்.

1961 ஆம் ஆண்டு இப் பாடசாலைக்கான விளையாட்டு மைதானத்திற்கென 18 பரப்புக் காணி கொள்வனவு செய்யப்பட்டது. இப்போது இம் மைதானமானது சிறப்பான பாவனையுடனும், வசதிகளுடனும் காணப்படுகின்றது. (கராத்தே பயிற்சி கூட இங்கே ஸ்பெஷல்) இவ்வாறு சிறப்பான ஆசிரியர்களின் வழிநடத்தலின் கீழ் கல்வியிலும், விளையாட்டிலும் இக் கல்லூரி சிறப்புற வளர்ந்து வருவது சிறப்பான ஒன்றாகும். (2016ஆம் ஆண்டிற்கான புத்தாக்கப் போட்டியில் இப் பாடசாலை மாணவனான செல்வன் தேனுஜன் தேசிய மட்டத்தில் கலந்து கொண்டமை மற்றுமொரு சிறப்பு).

2012இல் இப் பாடசாலை ஆயிரம் பாடசாலைத் திட்டத்தின் கீழ் உள்வாங்கப் பட்டு 1ஏபி பாடசாலையாகத் தரமுயர்த்தப் பட்டது. அத்தோடு தற்போது "அண்மித்த பாடசாலை மிக நல்ல பாடசாலை" திட்டத்தின் கீழும் உள்வாங்கப்பட்டுள்ளமை சிறப்பான அம்சமாகும். கோப்பாய் பிரிவில் இருந்து இத் திட்டத்தினுள் உள்வாங்கப்பட்ட இரு பாடசாலைகளுள் இதுவும் ஒன்றாகுமஅத் திட்டத்தின் மூலம் இப் பாடசாலையில் அதிபர் விடுதி, ஆசிரியர் விடுதி, வகுப்பறைகள் போன்ற உட்கட்டுமான வசதிகள் ஏற்படுத்தப்பட உள்ளன. இதற்கான காணி வசதிகள் சரியான முறையில் கிடைக்குமெனின் சிறப்பான வசதிகளுடன் இன்னும் சிறப்பான சேவையினை இக் கல்லூரி வழங்கி என்றும் சுடர் விட்டுப் பிரகாசிக்கும்.

**ஓடி ஓடிப் படிக்கணும்னு சொல்வார்கள். அதில் உள்ள சந்தோசமே தனி.**
**அனுபவிக்க ரெடியானவர்கள் இல.1க்கு பார்வையைத் திருப்புங்கள்.**

நிலவன்




**1**
சென்ற வருடத்தின் முக்கிய திகதிகளோடு இன்றைய பயணத்தை தொடரலாம். எஸ்.பி.பி யாழ்ப்பாணம் வந்தது எந்த நாளில் என்ற தெரியுமா? ஒக்டோபர் 10 என்பவர்கள் 5க்கும், ஒக்டோபர் 11 என்பவர்கள் 7க்கும், ஒக்டோபர் 9 என்பவர்கள் 20க்கும் வாருங்கள்.

**2**
தவறு. சரியான பதில் 12இல்.

**3**
வாவ். சரியாகக் கண்டுபிடித்து விட்டீர்களே. டிசெமபர் 5 தான் சரியான பதில் (எத்தனை குழப்பங்கள்?) தைரியமாக அடுத்த கேள்வியை 19இல் எதிர் கொள்ளுங்கள்.

**4**
சரி. ஒரு அருமையான பாடலாசிரியரை நாம் இழந்தது ஆகஸ்ட் 14இல் தான்.(ஈடு செய்ய முடியாதது). அடுத்த கேள்விக்கு நீங்கள் செல்ல வேண்டியது 6ஐ நோக்கி.

**5**
தவறு. ஆனால் ஒரு நாள் தான் பிந்திவிட்டீர்கள். இப்போது விடை புரிந்திருக்குமே. அடுத்த கேள்வி 15இல்.

**6**
இலங்கையில் "வற்" வரி அறிமுகப்படுத்தப்பட்ட திகதி எது? மே 1 எனின் 17க்கும், மே 2 எனின் 13க்கும், மே3 எனின் 8க்கும் செல்லலாம்.

**7**
தவறு. ஆனால், ஒரு நாள் தான் முந்தி விட்டீர்கள். பரவாயில்லை. அடுத்து 15 இல் உள்ள கேள்விக்குச் செல்லுங்கள்.

**8**
மே 3 அல்ல. மே 2இல் தான் இந்த விடயம் நடந்தது. காத்திருங்கள் அடுத்த வாரம், அடுத்த பயணத்திற்கு.

**9**
உங்கள் பதில் தவறு. நவமபர் 26 தான் சரியான பதில். அடுத்த கேள்விக்கு 12ஐ நாடிச் செல்லுங்கள்.

**10**
உங்கள் விடை தவறு. சரியான பதில் 4இல்.

**11**
தவறு. சரியான பதிலை 3இல் சென்று அறியுங்கள்.

**12**
சென்ற ஆண்டின் "பர பர" சம்பவமான ஜெயலலிதாவின் இறப்பு நிகழ்ந்தது எந்த திகதியில்? டீசம்பர் 5 என்றால் 3க்கும், டிசமபர் 6 என்றால் 11க்கும், டிசம்பர் 7 என்றால் 18க்கும் விரையுங்கள்.

**13**
சரியான பதில் (மே 2இல் தான் இது அமுலாக்கப்பட்டது) வாழத்துக்கள். மீண்டும் அடுத்த வாரம் சந்திப்போம்.

**14**
ஆம் நவம்பர் 26இல் தான் பிடல் காஸ்ரோ இறந்தார். உங்களுக்கான அடுத்த திகதி 12இல்.

**15**
கியூபா அதிபர் பிடல் காஸ்ட்ரோ எந்த திகதியில் மரணமடைந்தார்? பெப்ரவரி 18 என்றால் 2க்கும், ஏப்ரல் 7 என்றால் 9க்கும், நவம்பர் 26 என்றால் 14க்கும் செல்லுங்கள்.

**16**
தவறு. நீங்கள் ஒரு மாதம் பின்னோக்கி விட்டீர்கள். சரியான விடை 4இல்.

**17**
தவறு. மே 2 என்பது தான். சரியான பதில் திகதி விடயத்தில் நீங்கள் எப்படியென்பது இப்போது புரிந்திருக்குமே. அடுத்த வாரம் சந்திக்கலாம்.

**18**
இது ரொம்ப தவறாச்சே. டிசெமபர் 5தான் சரியான திகதி. அடுத்த கேள்வி 19இல்.

**19**
திரைப்பட பாடலாசிரியர் நா.முத்துக்குமார் எந்த திகதியில் இறந்தார்? ஆகஸ்ட் 14 என்பவர்கள் 4க்கும், செப்டமபர் 12 எனின் 16க்கும், ஆகஸ்ட் 13 எனின் 10க்கும் ஒரு எட்டுப் போய் வாருங்கள்.

**20**
சரியான பதில் ஒக்டோபர் 9தான். வாழ்த்துக்கள். உங்களுக்கான அடுத்த கேள்வி 15இல்.



# ‘சிவாஜி... திரும்பி போயிடு!’

அன்ரூ இன்னேஷ்

தென்னாபிரிக்காவுடன் நடந்து முடிந்த டெஸ்ட் தொடரில் இலங்கை செமத்தியான உதை வாங்கியிருக்கிறது. மூன்று மெகா தோல்விகளின் பின்னரும் எந்த பிரதிபலிப்புமில்லாமல் இலங்கை அணி தென்னாபிரிக்காவில் அடுத்த தொடருக்கு தயாராகிறது.


வழக்கமாக செமத்தியான உதை வாங்கிய அணியொன்று தன்னை சுயவிமர்சனம் செய்து கொள்வதுண்டு. அணியாகவும், வீரர்களாகவும் அப்படி செய்தால்தான் முன்னோக்கி செல்லலாம். தோல்விக்கு பின்னான காரணம் தேடல் ஒரு சம்பிரதாயமாக பார்க்கும் பொது இயல்பு நீடித்தாலும், அதுவும் ஒருவகை பொறுப்பு கூறல்தான். ஒரேவிதமான கருத்தை எத்தனை நாள்தான் ரசிகர்கள் முன்னால் சொல்லிக் கொண்டிருப்பது?

கிரிக்கெட் இப்போது வர்த்தகம்+ விளையாட்டு என்ற இரட்டை பரிமாண தன்மையுடையதாகிவிட்டது. கிரிக்கெட் தேர்வுகுழுக்களிடம் அணித்தேர்வின் வெளிப்படையான கடிவாளம் இருந்தாலும், ரசிகர்களிடம் மறைமுக அணித்தேர்வு கடிவாள மொன்றுண்டு. இந்திய, அவுஸ்திரேலிய, இங்கிலாந்து அணிகள் களத்தில் ஆடுவதைபோல, பத்திரிகையாளர் முன்னிலையில் கருத்து சொல்வதையும் முக்கிய அம்சமாக கொண்டுள்ளன. இலங்கையில் அந்த பாரம்பரியம் குறைவு.

இலங்கையின் தோல்விக்கு பத்திரிகையாளர்கள் முன் பேசாதது காரணமல்ல. ஆனால் அவர்கள் பேச வைக்கப்பட வேண்டும். தோல்விக்கான காரணமாக அவர்கள் எதையெல்லாம் அடையாளம் கண்டுள்ளனர் என்பதை ரசிகர்கள் அறிந்து கொள்ள வேண்டாமா? ஏனெனில், கடந்த மூன்று போட்டிகளிலும் இலங்கை வீரர்கள் எதையும் கற்றுக்கொண்டதாக தெரியவில்லை. அல்லது கற்றுக்கொள்ள உத்வேகம்/ அழுத்தம் ஏற்படுத்தப்பட்டதாக தெரியவில்லை.

தென்னாபிரிக்க, அவுஸ்திரேலிய தொடர்களில் இலங்கையின் நட்சத்திர அணிகளே தடுமாறுவதுண்டுதான். ஆனால், இப்படி மகாமோசமாக சொதப்பிக் கொண்டிருக்க வேண்டுமா? இலங்கையின் வீரர்கள்





இளையவர்கள், ஆடி அனுபவத்தை பெற வேண்டுமென்றால், எத்தனை காலத்தின் பின் அவர்கள் அனுபவத்தை பெறுவார்கள்?

இலங்கைதொடர்ந்தும் அனுபவமற்ற அணியென சொல்வது உகந்ததா என தெரியவில்லை. ஏனெனில், தென்னாபிரிக்காவில் களமிறங்கிய முதல் ஏழு துடுப்பாட்டவீரர்களில் நால்வர் 34 டெஸ்ட்டிற்கும் அதிகமாக விளையாடியவர்கள், உபுல்தரங்க 25 போட்டிகளில் ஆடிவிட்டார். ஆக தனஞ்சய டி சில்வா, குசல் மெண்டிஸ் மட்டுமே இளையவர்கள்.

தென்னாபிரிக்காவில் ஆடிய ஆறு இன்னிங்சிலும் இலங்கையர்கள் அடித்தது மூன்றே முன்று அரைச்சதங்கள் மட்டுமே. மத்யூஸ், மெண்டிஸ், கருணாரத்ன ஆகியோர் அடித்தனர். மொத்தத்தில் மகா மட்டமாக இலங்கையர்கள் ஆடினார்கள்.

பந்துகள் அதிகமாக எகிறி பவுண்ஸ் ஆகும் ஆடுகளங்களில் நிலைத்து நின்று மைதானத்தை பழக்கப்படுத்துவது ஒரு கலை. நேர்த்தியான துடுப்பாட்டகாரர்களால்தான் அது முடியும். துரதிஸ்டவசமாக, அப்படியான இயல்பை இலங்கை வீரர்கள் யாருமே வெளிப்படுத்தவில்லை.

தொடக்க ஆட்டக்காரர்களில் ஒருவரான திமுத் கருணாரத்ன ஆறு இன்னிங்சிலும் ஆடி 128 ஓட்டங்களை சேர்த்தார். மற்றைய தொடக்கவீரர் கௌஷால் சில்வா 117 ஓட்டங்களை சேர்த்தார். இந்த மோசமான பெறுதியே எவ்வளவிற்கு பரவாயில்லை என்பதாக அமைந்தது சந்திமாலின் கணக்கு. ஆறு இன்னிங்சில் அவர் சேர்த்தது 85 ஓட்டங்கள். அதிகபட்சம் 30. அணித்தலைவர் மத்யூஸ்தான் பொறுப்புணர்ந்து ஆடினார். அவர் எடுத்தது 178 ஓட்டங்கள்!

ரபாடா, பிலாண்டர், பார்னல் என தற்போதைய தென்னாபிரிக்க வேகப்பந்து வீச்சாளர்களின் லைன் அன்ட் லெந்த் பந்துகளை எதிர்கொள்ள இலங்கையர்களிடம் எந்த முன்னாயத்தமும் இல்லை. தென்னாபிரிக்கர்களிடம் அவ்வளவு மிரட்டல் பந்து வீச்சு இம்முறை இருக்கவில்லை. ஆனால் சரியான லைன் அன்ட் லெந்த் இருந்தது. அதனை . எதிர்கொள்ளவே இலங்கையர்களால் முடியவில்லை. களத்திற்குஎந்த முன்னாயத்தமும் இல்லாமல் சென்ற வீரர்கள் தென்னாபிரிக்கர்களின் பொறியில் இலகுவாக வீழ்ந்தார்கள். சில மாதங்களின் முன் அவுஸ்திரேலியாவை வெள்ளையடித்த இந்த இலங்கையணிக்கு, ஆடுகளம்தான் பெருமளவு கைகொடுத்துள்ளதென்ற முடிவிற்குத்தான் வர வேண்டியுள்ளது.

இன்னொரு அம்சத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும். இலங்கை துடுப்பாட்டகாரர்களிடம் கற்றுக்கொள்ளும், போராடும் குணம் இந்த தொடரில் வெளிப்படாதது. மறுவளமாக, பந்துவீச்சாளர்களிடம் அது ஓரளவிற்கு வெளிப்பட்டது. இந்த தொடரில் மொத்தம் ஆறு இன்னிங்ஸ்கள். கற்றுக்கொள்ளும் வீரர்கள் எனில், ஒவ்வொரு தொடரிலும் ஆட்டத்திறனை மேம்படுத்தியிருப்பார்கள். ஆனால் நடந்தது எதிர்மறையானது. ஒவ்வொரு ஆட்டத்திலும் ஆட்டத்திறனை இழந்துகொண்டிருந்தனர் இலங்கை துடுப்பாட்டக்காரர்கள்.

கடந்த ஒன்றரை வருடங்களாக நீடிக்கும் சிக்கல் இது. மூத்தவீரர்களின் ஓய்வின் பின், அணியை மறுசீரமைக்கும்போது ஒவ்வொரு அணியும் சோதனைக்காலத்தை சந்திப்பதுண்டுதான். ஆனால் இலங்கைக்கு அணியே சோதனையாக மாறியிருப்பதை போலத்தான் தெரிகிறது. தற்போதைய நிலையில் எந்தவீரரும் தனிப்பட்ட ஓட்டக்கணக்கை மூன்றிலக்கத்தில் பெற முடியாதவர்களாக உள்ளனர். அரைச்சதமடிப்பதே ஆச்சரியமான ஒன்றாக உள்ளது. இது நல்லதல்ல.

எங்கோ ஒரு தவறு நேர்ந்துள்ளது. அது என்னவென்பதை தேர்வாளர்களும், இலங்கை கிரிக்கெட்டும் உட்கார்ந்து யோசிக்க வேண்டும். தற்போதைய நிலையில் கப்புகெதர, கண்டம்பி போன்றவர்கள் அணிக்கு உதவுவார்களா என்பதையும் பார்க்க வேண்டும். உபுல் தரங்கவின் மீளிணைப்பு எவ்வளவு புத்திசாலித்தனமானதென தெரியவில்லை. அவர் வேகப்பந்து ஆடுகளங்களில் நன்றாக ஆடுவார் என்பதெல்லாம் பழைய கதை. அண்மைய வருட உதாரணங்கள் எதுவுமில்லை. முக்கியமாக எந்த ஆடுகளத்தில் கூட அவர் பெரிய இன்னிங்ஸ் எதையும் அவர் ஆடவில்லை. பரீட்சார்த்தம் செய்வதெனில் அதில் தயவுதாட்சண்யம் காட்டக்கூடாது.

தொடக்க கூட்டணி இலங்கைக்கு சரியாக அமையவில்லையென்பதை புள்ளிவிபரங்கள் சொல்கின்றன. ஆனால் அதில் தேர்வாளர்கள் கைவைக்கவில்லை. நன்றாக ஆடும் வயதான ஆட்டக்காரர்கள், அவர்களை நீக்கினால் அணி படுத்துவிடும் என்றால் இப்படி யோசிக்கலாம். இப்போதுள்ள தொடக்க ஆட்டக்காரர்கள் ஆடினாலே அணி படுத்துவிடும் என்பதுதான் உண்மை. ஆனால் அவர்கள் அணியில் நீக்கப்படும் பயமின்றி சொதப்பி வருகிறார்கள். ஆனால் உள்ளூரில் எஸ்.எஸ்.ஸி அணிக்காக மினோட் பானுக என்ற இளம்வீரர் அபாய ஆட்டக்காரராக உருவெடுத்துள்ளார். விக்கெட் கீப்பராக இருப்பது கூடுதல் பலம். ஆனால் அவரை இன்னும் தேர்வாளர்கள் கண்டுகொள்ளவில்லை. இதுதவிர, பானுக ராஜபக்ச, டில்சான் முனவீர போன்றவர்களையும் பரீட்சித்திருக்கலாம்.

இரண்டு வருடங்களாகியும் அணியை கட்டியெழுப்புகிறோம் என்ற பெயரில் ரசிகர்களை வெறுப்பேற்றிக் கொண்டிருப்பது சரியல்ல. இப்படியே போனால் “சிவாஜி நீ திரும்ப ஊருக்கே போயிடு” பாணியில் கூறிவிட்டு, எல்லோ விளையாட போய் விடலாம். ●



பாகிஸ்தானைச் சேர்ந்த 25 வயது அர்பாப் கிஸெர் ஹயட், 6 அடி 3 அங்குல உயரமும் 431.82 கிலோ எடையும் இருக்கிறார். இவரை ஹல்க் மனிதர் என்று அழைக்கின்றனர். உலகின் மிக வலிமையான மனிதர் என்று நிரூபிக்கும் வகையில், சமீபத்தில் ஒரு டிராக்டரைக் கயிற்றால் பிடித்து நகர விடாமல் செய்திருக்கிறார். டிராக்டரை எவ்வளவு வேகமாக இயக்கினாலும் பின் சக்கரங்கள் மட்டும் இருந்த இடத்திலேயே சுற்றிக்கொண்டிருந்தன. “ஒரு நாளைக்கு 10 ஆயிரம் கலோரிகள் என் உடலுக்குத் தேவைப்படுகின்றன. காலை உணவாக 36 முட்டைகள், மதியம் 3.5 கிலோ இறைச்சி, ஒரு நாளைக்கு 5 லிட்டர் பால் போன்றவற்றை எடுத்துக்கொள்கிறேன். அளவுக்கு அதிகமான எடையால் என் உடலுக்கு இதுவரை எந்த நோயும் ஏற்பட்டதில்லை” என்ற ஹயட், ஏற்கெனவே பாகிஸ்தானில் பிரபலமாக இருக்கிறார். உலக அளவில் வலிமையான மனிதராக வலம் வர வேண்டும் என்ற விருப்பத்தால் wwe போட்டிகளில் பங்குபற்றவிருக்கிறார்.




தற்போது டாட்டூ மக்கள் மத்தியில் பிரபலமாக உள்ளது. அதனால் பலரும் தங்கள் உடலின் சிறு பகுதியில் தான் டாட்டூ போட்டுக் கொள்வார்கள். ஆனால் ஜூலியா என்னும் பெண், தன் உடல் முழுவதும் கண்டபடி டாட்டூ குத்தியுள்ளார். இதனால் அவர் பார்ப்பதற்கே விசித்திர பெண்ணாக காணப்படுகிறார்.



இரவு 12 மணிக்கு மலரும் பூ அதிகாலை சூரியன் வெளிச்சத்திற்கு முன்பாக மறைந்து விடும் அதிசயம் தலவாக்கலை ஹேமசந்திரா மாவத்தை பகுதியில் நிகழ்ந்துள்ளது. மீதுபுல என்பவரின் வீட்டின் முன்புறத்தில் வளர்க்கப்படும் கடும்புல் பூஞ்செடியில் 12 வருடங்களுக்கு பின் இந்த பூ 18.01.2017 அன்று மலர்ந்துள்ளது. இரவு 12 மணியளவில் மலர்ந்து சூரியன் உதிப்பதிற்கு முன்பதாக மறைந்துவிடுவதாக இவர்கள் தெரிவிக்கின்றனர். இந்த அதிசய பூவை பார்ப்பதற்காக இப்பிரதேசத்தில் உள்ள அதிகமானவர்கள் அந்த வீட்டுக்கு சென்றவண்ணம் உள்ளனர்.



அவுஸ்திரேலியாவில் பெய்த பெருமழையில் விண்ணிலிருந்து மர்ம உயிரினம் விழுந்துள்ளதாக பரபரப்பு தகவல்கள் வெளியாகியுள்ளன. வேற்றுகிரகவாசிகளின் தோற்றதை போன்ற தலையும், மீனைப்போன்ற உடலமைப்பையும் கொண்டுள்ளது. எனினும், இறால் வகையை போன்ற தோற்றமும் ஏற்படுகிறது. உடல் முழுவதும் பெரிய கவசத்தால் பாதுகாக்கப்பட்டுள்ளது. இவை விண்ணிலிருந்து வந்தவைதானா அல்லது இதுவரை அறியப்படாத பூமியின் உயிரினம்தானா என்ற கோணத்தில் ஆராய்ச்சிகள் நடக்கின்றன.



அமெரிக்காவின் மிச்சிக்கன் மாநிலத்தில் நடந்த சம்பவம். பண்ணை வீட்டில் தங்கியிருந்த இவர், குளிர்காய் நெருப்பு மூட்ட நினைத்து விறகுக்காக வெளியில் சென்றார். பனியில் சறுக்கி விழுந்து கழுத்து எழும்பு முறிந்து நடக்க முடியாமல் போயுள்ளது. அவரது நாய் எஜமானிற்கு மேல் படுத்தும், நாக்கால் நக்கியும் 24 மணிநேரமாக போராடி அவரது உடற்சூட்டை பேணியுள்ளது. 24 மணிநேரத்தின் பின் அவர் மீட்கப்பட்டுள்ளார்.

IECE
INSTITUTE of ENGLISH & COMPUTER EDUCATION
IELTS™
Now Prepare for Your IELTS Exams
Academic Level and General Training
IELTS™ Life Skills
Level A1 & B1
E.mail: info.iecejaffna@gmail.com
121/1(219/A) Arasady Road, Kantharmadam, Jaffna. Sri Lanka
012 221 9140/ 021 567 4133/ 077 378 0390

Green Grass valampuri
THE VALAMPURI
A Small Luxurious Hotel in Jaffna
148/10, Station Road, Jaffna
Tel : 021 222 0111 / 3444
Web : www.valampurihotel.com
E-mail : info@valampurihotel.com





A member of the IDOL family

# UV Water Solution
water science technologies

Right solution for water issues

கழிவு நீர், குடி நீர், சுத்திகரிப்பு தொடர்பான பிரச்சினைகளுக்காக தீர்வுகளும் வழங்கப்படும்.

## எமது சேவைகள்

வீடுகள் உணவகங்கள் மற்றும் அலுவலகங்கள் பாடசாலைகள் போன்றவற்றுக்கு தேவையான

குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள் (Domestic RO Plant)

உங்கள் வீட்டு கிணற்று நீர்பரிசோதிக்கப்பட்டு அதற்கு ஏற்ற வகையில் பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டுத் தரப்படும் 22000.00 இருந்து தவணைமுறை அடிப்படையிலும் பெற்றுக்கொள்ளலாம்.

கல்சியம் வடிகட்டிகள் (water softener plant)

கழிவுநீர் சுத்திகரிப்பு (waste water treatment plant)

நீச்சல் தடாகக் கட்டுமானம்

நீரியல் தொடர்பான இரசாயனங்கள்

# 277, Kachcheri Nallur Road, Nallur, Jaffna, Sri Lanka. Email - uvwatersolution@yahoo.com
Tel. - 021 4900671, Fax - 021 4900671, Hot Line - 077 5092737



10 ஆண்டுகள் யாழ் நகரில் உள்நாட்டு, வெளிநாட்டு மக்களின் மனங்கவர்ந்த தங்குமிட வசதிகள் கொண்ட ஹோட்டல்

# BRIGHT INN
பிறையிட் இன் ஹோட்டல்



அங்கீகாரம் பெற்ற அனுபவம் வாய்ந்த சமையல் கலை நிபுணர்கள், தரமான சேவையாளர்கள் பணியாற்றும் நிறுவனம் பிறையிட் இன் ஹோட்டல்....

| உணவுகள் | தங்குமிடம் | திருமண மண்டபம் |
|---|---|---|
| தரமான சுவையான உணவுகள் | Luxury Room | திருமணம், பதிவுத் திருமணம் |
| பாரம்பரிய யாழ்ப்பாண உணவுகள் | Semi - Luxury Room | பிறந்தநாள் நிகழ்வுகள் |
| கடல் உணவுகள் | A/C Room | பூப்புனித நீராட்டு விழா |
| வெளிநாட்டவர்கள் விரும்பும் உணவுகள் | Non A/C Room | கலந்துரையாடல்கள் |
| ஓடர் மூலம் உணவுகளை பெற்றுக்கொள்ளலாம் | இவை அனைத்திற்கும் நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம் BRIGHT INN | |

யாழ் பிறையிட் இன் ஹோட்டலின் தலைமை ஸ்தாபனம் - இல. 214/2, மெசன்சர் ஸ்ரீட், கொழும்பு என்ற முகவரியில் இயங்குகின்றது. மேற்கூறப்பட்ட அனைத்து வசதிகளும் கொழும்பில் செய்து தரப்படும். விமான நிலையத்திலிருந்து பிரயாண ஒழுங்குகள் மற்றும் இலங்கை முழுவதுமான சுற்றுலா செல்வதற்கு சொகுசு வாகன ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும்...

தொடர்புகளுக்கு

0112 329664, 0117 242233, 0117 242244

E-mail : brighten@eureka.lk | brightenrest@yahoo.com



No. 51, Sivan Road, Thirunelveli, Jaffna.
Tel : 021 222 1889 | E-mail : brightinnjaffna@yahoo.com
HOT LINE 0777 983933





NO 1 TOPAZ

# TOPAZ
No. 01 Shop in Jaffna



திருமணப் பட்டுச்சேலை
காஞ்சிபுரம் பட்டுச்சேலை
சுரிதார் மற்றீரியல்கள்
மற்றும்
ரெடிமெற் ஆடைகள்

ஆண்களிற்கான
சேட் சூட் மற்றும்
ரெடிமெற் ஆடைகள்

மிஸ் சுட்டி
மிஸ் பியூட்டியாக
வலம் வரும் சுட்டிச்
சிறுமியர்களுக்கான
பெஷன் ஆடைகள்

We are Specialist in
Wedding Suits | Wedding Sarees | Party Sarees | Wedding Frocks | Party Frocks
and all kinds of Items

| TOPAZ | TOPAZ TAILORING | TOPAZ MALL |
|---|---|---|
| No. 72, Grand Bazaar, Jaffna. | No. 80/24, Kasthuriyar Road, Jaffna. | No. 195, Power House Road, Jaffna. |
| Tel : 021 222 4743 | Tel : 021 222 4643 | Tel : 021 222 4933 |
| Fax : 021 222 7645 | E-mail : topazagn@gmail.com | 021 221 9933 |



# MA Holidays & Travels
Ticketing/Hotel/Holiday/Visa/Insurance

All Countries Air Ticketing




261, Power House Road,
Jaffna.
021 300 3888
077 00 666 56
Maholidaysmayu@gmail.com
www.maholiday.com

B.Mayuran
Managing Director



# விளம்பரத் தொடர்புகளுக்கு
076 825 5567,
021 492 7561


இந்தப்பத்திரிகை நோர்சி மீடியா (பிறைவேற்) லிமிற்ரட் நிறுவனத்தால் பருத்தித்துறை வீதி, 5ம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியில் உள்ள நாவலர் பிரிண்டர்ஸில் அச்சிட்டு 22.01.2017 அன்று வெளியிடப்பட்டது.